# சுடர்



கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
ஐந்தாவது ஆண்டு நிறைவு மலர்


கிளிநொச்சி மாவட்ட
சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டின் நிறைவில் வாழ்த்தி நிற்கின்றோம்.
நம்பிக்கை
நாணயம்
நல்லதரம்
தங்க
நகைகளுக்கு
அதுவே முக்கியம்
மக்கள் பணியில் ௨௨ மாற்றுத்தங்கத்தில் சகல ஆபரணங்கள்
குறித்த தவணையில் செய்து தருவதே எங்கள் பணி
தமிழரசி நகைமாடம்
கச்சேரி அருகில் கிளிநொச்சி
தமிழ்ப்பரிதி நகைமாடம்
மல்லாவி (சாவகச்சேரி)
தமிழரசி நகைமாடம்
கந்தபுரம்
தமிழ்நிலா நகைமாடம்
மல்லாவி (நெல்லியடி)
யாழரசி நகைமாடம்
நாச்சிக்குடா
சுடர் மாணிக்கக்கல் வாணிபம்
மல்லாவி

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டின் நிறைவில் வாழ்த்துகிறோம்.

வன்னிப்பெருநிலப்பரப்பின் மருத்துவ சேவையில்......

# டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த (தனியார்) மருத்துவமனை

24 மணி நேரமும்

வெளிநோயாளர் சேவை
மகப்பேற்றுச் சேவை
ஆய்வு கூடசேவை
உள்நோயாளர் சேவை
மருந்தக வசதி
சத்திர சிகிச்சை வசதி

ஏனைய வசதிகள் :
கண் சிகிச்சை, பற்சிகிச்சை
ஈ.சீ.ஜீ பிரிவு, எக்ஸ் கதிர் பிரிவு

* புதுக்குடியிருப்பு முழங்காவில் கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டின் நிறைவில் வாழ்த்துகிறோம்.

மருந்து பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
புதுக்குடியிருப்பு

வன்னி வாழ் மக்களின் நலன் கருதி....

எமது கிளை நிறுவனங்கள்

* தண்ணீரூற்று
* விசுவமடு
* ஸ்கந்தபுரம்
* மல்லாவி
* முழங்காவில்
* உடையார்கட்டு
* வட்டக்கச்சி
* ஜெயபுரம்

# சுடர்

கிளிநொச்சி மாவட்ட சமூக, சுகாதார அபிவிருத்திச்சபையின்

**5வது ஆண்டு நிறைவுச்சிறப்பிதழ்**

K. GANESH
Government Agent / District Secretary
Jaffna

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

மாவட்ட வைத்தியசாலை
கிளிநொச்சி
2002

6105 (P) Archive

05ம் ஆண்டு நிறைவு மலர்

# SUDAR

**Kilinochchi District socio Health Development Society**

## 5th Anniversary.


| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | மே 2002 |
| பதிப்புரிமை | : | இதழாக்கக்குழு<br>கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை |
| இதழமைப்பு<br>அட்டை வடிவமைப்பு | : | எஸ்போஸ் |
| கணினிப்பதிவு | : | யோ. குணசீலன் |
| அச்சாக்கம் | : | நிலம் வெளியீட்டகம்<br>87, வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியா |

| | |
|---|---|
| Published: | May 2002 |
| Publishers: | Kilinochchi District socio<br>Health Development Society |
| Layout,<br>Illustrations,<br>Cover design: | Sboos |
| Typesetting: | J.kuna seelan |
| Printers: | Nilam Publicition,<br>87, Viyasar road,<br>Thonikkal,Vavuniya. |

## சமர்ப்பணம்

ஆதிக்க சக்திகள் எமக்களித்த
இடப்பெயர்வும் தடைகளும்
கருக்கிய உயிர்களுக்கு....

**நன்றிகள்**

இவ்விதழ் வெளிவர
உறுதுணையாய்
விளங்கிய அனைத்து
அன்பு உள்ளங்களுக்கும்........

இதழாக்கக்குழு கிளி/மாவட்ட சமுக சுகாதார அபிவிருத்திச் சபை.

# பதிப்புரை

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையானது தனது ஐந்தாண்டு சேவையை 19 பங்குனி 2002ல் பூ ர்த்தி செய்கின்ற வேளையில் அதனது கடந்தகால செயற்பாடுகளையும் வைத்தியசாலையின் பணிகளையும் ஒரே பார்வையில் வெளிக்கொணரும் ஓர் மலராக சுடர் அமையும் என நம்புகிறோம்.

எண்ணற்ற இன்னல்களை எம்மக்கள் சந்தித்த இருள் சூழ்ந்த காலத்தில் நடந்த துயர் மிகு நிகழ்வுகளின் பதிவாகவும் அவ்விருள் அகற்றி ஒளி தந்த சமூக சுகாதார அபிவிருத்திச் சபையின் செயற்பாட்டின் குறியீடாகவும் சுடரை உங்களின் கைகளில் தருவதில் மகிழ்வடைகிறோம்.

இதழாக்கக்குழு
கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபை
மாவட்ட வைத்தியசாலை,
கிளிநொச்சி.

## கிளி/முல்லை மாவட்ட கியூடெக் இயக்குனரின் ஆசிச்செய்தி

**"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" -குறள் 102**

கிளி மாவட்ட சமூக, சுகாதார அபிவிருத்திச்சபையானது தனது ஐந்தாவது அகவை நிறைவு செய்கின்ற இவ் வேளையிலே இவ்வமைப்பை மனப்பூர்வமாக வாழ்த்தி நிற்கிறேன்.
போரின் அனர்த்தங்களாலும் நோய்களின் கொடுமைகளாலும் உயிர்காக்கும் மருந்தின்மையினாலும் வன்னி மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருந்த வேளையிலே பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு பிணி நீக்கி சுகம் கொடுக்கும் உத்தம நிறுவனமாகத் திகழ்ந்து அக்கராயனில் அமைந்திருந்த கிளி/மாவட்ட வைத்தியசாலையின் இயக்கத்திற்கு பின்புலமாக நின்றது இவ் அபிவிருத்திச் சபையாகும்.

கடந்த மிக நெருக்கடியான காலகட்டத்தில் பலவிதத்தில் வளங்கள் குன்றிய நிலையிலும் கூட மனம் தளராது மிகுந்த திட்டமிடல் செயற்பாடுகளினூடு வைத்தியசாலையின் வைத்தியர்கள், பணியாளர்கள், நலன் விரும்பிகள், பொது நிறுவனங்கள் எல்லோருடனும் வலுவான இணைப்பை ஏற்படுத்தி பலவிதமான சாதனைகளைப் புரிந்துள்ளது இந்த அமைப்பு. உண்மையில் இது வன்னி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இந்த அமைப்பின் செயற்பாடுகளோடு எமது மனித முன்னேற்ற நடுநிலையமும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தமையையொட்டி நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மிகுந்த நட்போடும் சிரித்த முகத்தோடும் பணியாற்றும் வைத்தியசாலையின் பணியாளர்களுக்கும் இவ் அமைப்பை நெறிப்படுத்தி வழிநடாத்தும் கிளி/மாவட்ட வைத்திய அதிகாரி அவர்களுக்கும் அபிவிருத்திச் சபையின் இதர உறுப்பினர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

மீண்டும் கிளி/மாவட்ட வைத்தியசாலையை
கிளிநொச்சி நகரில்
கட்டியெழுப்பும் பாரிய பணி இவர்கள்
கையிலிருக்கும் வேளையில்
இவ் அபிவிருத்திச்சபை மேலும் தன்
அர்ப்பணத்திலும் பணியிலும் சிறக்க
இறைவனைப் பிரார்த்தித்து
வாழ்த்தி நிறைகிறேன்.

**நன்றி**

அருட்திரு.இரா.சூசைநாதன்
இயக்குனர்,
கியூடெக்,
கிளி/முல்லை மாவட்டம்.

## ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலனசபைத்தலைவரின் ஆசிச்செய்தி

கிளிநொச்சியின் கிராம நகரப்பகுதியிலிருந்த மக்களினதும், யாழ்மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களினதும் உடல் நலம், உளநலம் மற்றும் சமூக நலம் பேணும் வகையில் கிளி/ மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபையாக அமைக்கப்பட்ட சபை தனது நோக்கங்களை அடைவதற்கு பல சிரமங்களைத் தாங்கி செயற்பட்டது. இதன் இயக்கமாக தன்நலம் கருதாது பாடுபட்ட வைத்திய கலாநிதி ச.விக்கினேஸ்வரன் என் மனத்திரையில் நிழலாடுபவர். இவர் இம் மாவட்ட வைத்திய சாலையைத்தாங்கி நின்றபோது நாமும் எம்மாலான உதவிகளை வழங்க கிடைத்த சந்தர்ப்பத்திற்கு இறைவனுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இறையருளுடன் சேர்ந்த நற்பணியாகவே இதனைக் கொண்டோம். ஸ்கந்தபுரம் ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலனசபையினர் தம்மாலான உதவிகளை வழங்கி இம் மாவட்டத்தில் தஞ்சமடைந்த மக்களின் நோய் தீர்ப்பதில் பங்கேற்றமை சிறப்புடையதாகும்.

ஐந்தாண்டு காலப்பகுதி என்பது நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும். அக்கராயன் வைத்தியசாலையை பல மடங்காக வியாபிக்க வைத்ததில் ஆட்கொல்லி நோயாக 'கொலரா' எனும் வாந்திபேதி நோய் கொடூரமாகப் பரவிய காலத்தில் வருமுன் காப்பு பகுதிப் பொறுப்பாக இருந்த 'முதியோர் காவலர்' கந்தசாமி ஐயாவுடன் வைத்திய அதிகாரிகள் சபையினர் காட்டிய ஒத்துழைப்பால் உள்ளூர் நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், கூட்டுறவுச்சங்கங்கள், நலன் விரும்பிகள் பெரிதும் உதவினர். இதனால் பல இலட்சம் ரூபா பெறுமதியான கட்டடம் உருவாக்கியமை குறிப்பிடப்பட வேண்டியதாகும். இதில் மக்கள் கொண்ட பங்கேற்பு பாராட்டுக்குரியதாகும்.

இதன் செயற்பாட்டில் பல வேலைத்திட்டங்களுடன் மக்களுக்குக் கண்பார்வை வழங்கும் 'கண்ணொளி' என்ற திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டமையால் நூற்றுக்கணக்கானவர்கள் மீண்டும் பார்வை பெற்றுள்ளமை இச்சபையின் தொடர் நடவடிக்கைகளில் முக்கியமானதொன்றாகக் கருத வேண்டியுள்ளது. இப்பணிகள் சிறக்க யாவரும் தங்களால் இயன்ற உதவிகளை வழங்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இச்சபை பல்லாண்டு காலம் செயற்பட்டு மாவட்ட மக்களுக்கு சேவைகளைப் புரிய இறையாசி வேண்டுகின்றோம்.

'வாழ்க வளமுடன்'
'முழுவதும் உண்மை' -யோகர் சுவாமிகள்

நன்றி

திரு.விசுவலிங்கம் சின்னத்தம்பி,
தலைவர்,
ஸ்ரீ முருகன் ஆலயபரிபாலனசபை,
ஸ்கந்தபுரம்.

நன்றி

## முன்னாள் கிளி/மாவட்ட அரச அதிபரின் ஆசிச்செய்தி

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையானது தனது சேவையில் ஐந்து ஆண்டினை நிறைவு செய்து "5ம் ஆண்டு நிறைவு மலர்" ஒன்றினை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் இதற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதிலும் மேலும் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். இந்த வேண்டப்படாத யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து நலிவுற்ற மக்களது சமூக சுகாதார சேவைகளை தொய்யவிடாது சமூக விழிப்புணர்ச்சி மூலமும் உள்ளூர் வழங்களைத்திரட்டியும் இச்சபை பேரார்வத்துடனும் வினைத்திறனுடனும் செயலாற்றியதனை இக்காலகட்டத்தில் இம் மாவட்டத்தின் அரச அதிபராக இருந்தவன் என்ற வகையில் நன்கு அறிவேன்.

அரச வளங்கள் ஏன் அரச சார்பற்ற வளங்கள் கூட கிடைக்காத அல்லது மட்டுப்படுத்தப்பட்ட நெருக்கடியான காலகட்டத்தில் பெருமளவு மக்களது உயிர்களைக் காத்த பெருமை இச்சபைக்கு உண்டு. பாரிய வேலைத்திட்டங்களைக் கூட பொறுப்பேற்றுச் செய்த வினைத்திறமையை யான் அறிவேன். இதன் தலைவரான வைத்திய கலாநிதி ச.விக்கினேஸ்வரன் அவர்கள் தலைமையில் பல முகாமைக்குரிய உறுப்பினர்கள் தங்களது வேலையாக மிகவும் அர்ப்பணிப்புடன் இரவு பகல் பாராது இச்சபை மூலம் மக்களுக்கு அளப்பரிய தொண்டாற்றினர். தொடர்ந்தும் தொண்டாற்றி வருகின்றனர். இச் சபையின் பணி மென்மேலும் பெருகி எமது மக்கள் சமூக, சுகாதார நிலைகளை உயர்த்திக் கொள்ள தொடர்ந்தும் இச்சபை பல திட்டங்களைத் தீட்டி செயற்படுத்த வேண்டும் என விரும்புகிறேன்.

**"வளர்க நற்பணிகள்"**

திருதி.இராசநாயகம்,<br>
பணிப்பாளர்,<br>
மேற்கு மாகாண அபிவிருத்தி அமைச்சு,<br>
முன்னாள் அரச அதிபர்,<br>
கிளிநொச்சி.

## கிளி/மாவட்ட அரச அதிபரின் ஆசிச்செய்தி

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபை தனது ஐந்தாண்டு சேவையை 19.03.2002 அன்று பூர்த்தி செய்கின்ற வேளையில் அதனது ஐந்தாண்டு செயற்பாடுகள் உள்ளடக்கிய மலரொன்றை வெளியிட உள்ளது என்ற செய்தி மிகவும் வரவேற்கக் கூடியதும் பாராட்டக்கூடியதுமாகும்.

1995ம் ஆண்டு யாழ் குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களுடன் இம்மாவட்டத்தில் வாழ்ந்துவந்த மக்கள் 1996ம் ஆண்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள், உறவினர்களுடனும் வீதியோரங்களிலும் தங்கியிருந்த ஒரு காலகட்டத்திலே தான் கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் இம் மாவட்டத்தில் இரண்டு இலட்சத்திற்கும் மேலான மக்கள் தங்கியிருந்தனர். இம்மக்களது சமூக சுகாதார தேவைகளை இடம் பெயர்ந்த நிலையில் இயங்கிவந்த வைத்தியசாலைகளும், சுகாதார நிலையங்களும் பூர்த்தி செய்வதில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கிய நேரத்தில் தேவையின் காரணமாக ஆரம்பிக்கப்பட்ட இவ் அபிவிருத்திச் சபை அந்நோக்கத்தை நோக்கிச் செயற்பட்டுக் கொண்டு வருகின்றது, என்றால் அது மிகையாகாது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை இடம் பெயர்ந்து அக்கராயன் வைத்தியசாலையோடு அக்கட்டடத்தில் இயங்கிவருகின்றது. இடவசதி, சுகாதார வசதி, தளபாடவசதி பற்றாக்குறையாக இருந்த நேரங்களிலே அபிவிருத்திச்சபையின் செயற்பாடுகளினால் இப்பற்றாக்குறைகளை உடனுக்குடன் ஓரளவு தீர்க்கக்கூடியதாக இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மட்டுப்படுத்தப்பட்ட அரச நிதி ஒதுக்கீட்டினாலும் தாமதமாகக் கிடைக்கின்ற நிதியினாலும் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு அபிவிருத்திச் சபையே முகம்கொடுத்து உரிய நேரத்தில் தேவைகளை நிறைவேற்றி வருகின்றது, சுருங்கக் கூறின் மக்களின் சுகாதார தேவைகளை நிறைவேற்ற வைத்தியசாலைக்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது.

நடமாடும் சுகாதார சேவைகளை மேற்கொள்வதிலும் அபிவிருத்திச் சபை தனது செயற்பாட்டையும் போக்குவரத்து வசதி போன்றவற்றில் இணைத்து வருகின்றது. வைத்தியசாலையின் மின் விநியோகம், கட்டட வசதிகள், மலசல கூட வசதிகள் போன்ற அனைத்திலும் அபிவிருத்திச் சபை ஈடுபட்டு குறைந்த செலவில் மட்டுமின்றி உரிய நேரத்திலும் நிறைவேற்றி வருவது சுகாதார சேவை இடையூறு இன்றி நடைபெற உதவியாக உள்ளது.

பல வழிகளிலும் செயற்பட்டு இம்மாவட்ட மக்களின் சமூக சுகாதார தேவைகளை இக்கட்டான காலகட்டம் தொடக்கம் நிறைவேற்றி உதவி வரும் இவ்வபிவிருத்திச்சபை அதனது ஆறாம் ஆண்டு சேவையை ஆரம்பிக்கவுள்ளது. எதிர்வரும் காலம் இச்சபையின் சேவை மேலும் தேவைப்படுகின்ற ஓர் காலகட்டமாக அமையக் கூடிய நிலை தென்படுகின்றது. எனவே இச்சபையின் செயற்பாடுகள் மென்மேலும் விருத்தியாகி இம்மாவட்ட மக்களின் சமூக சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை இவ்வேளையில் வேண்டிநிற்கிறேன்.

**நன்றி**

திரு.இ.ஐயாத்துரை,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்
சபையின் 5ம் ஆண்டின் நிறைவில் வாழ்த்தி நிற்கிறோம்.



கரைச்சி தெற்கு
ப.நோ.கூ. சங்கம்

பிரதானசாலை~

கிளிநொச்சி



கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டின் நிறைவில் வாழ்த்துகின்றோம்.

கிளிநொச்சி –பனை தென்னை
வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்



கிளிநொச்சி.

*கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்*
*5ம் ஆண்டின் நிறைவில் வாழ்த்துகிறோம்.*



# யாழ் தாமரை இன் சுவை உணவகம்



- புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சி
- அம்பலப்பெருமாள் சந்தி, அக்கராயன்
- டிப்போ அருகாமை, கிளிநொச்சி



கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை மக்களின் சுகாதார சேவையை ஆற்றி 5 வயது தாண்டி, புகழ் பூத்து, 6வது வயது உதயமாகித் தொடர்ந்து சேவையை ஆற்றி புகழ் பூக்க எமது பாராட்டுதல்கள்...

# கூட்டுறவே நாட்டுயர்வு



**கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்**
**வட்டக்கச்சி, கிளிநொச்சி.**

கிளி/முல்லை
பிரதி மாகாண சுகாதார சேவைகள்
பணிப்பாளரின் ஆசிச்செய்தி.

கிளிநொச்சி மாவட்டம் விடுவிக்கப்படாத பிரதேசம் என அரசால் முத்திரை குத்தப்பட்டுச் சகல வளங்களும் மட்டுப்படுத்தப்பட்டதையடுத்து இம் மாவட்டத்திலும் ஏனைய அயல் மாவட்ட மற்றும் இடம் பெயர்ந்து இம் மாவட்டத்தில் வாழும் மக்களின் சுகாதாரப் பிரச்சினை, நலிவுற்ற மக்களின் சொல்லொனாத் துயராக உருவெடுத்த காலகட்டத்தில் இச்சபை உதயமாகியது. சமூகப்பற்றுள்ள மக்களின் முன்னெடுப்பாக இதனை அமைத்து மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்தியிலும் ஏனைய செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்து எத்தனையோ உயிர்கள் காப்பாற்றப்பட்டதை நான் அறிவேன். பல வகைப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. நோயாளர்களின் நோய்கள் இனங்கணப்பட்டு அவர்களுக்கு உடனடி நிவாரணங்கள் வழங்கப்பட்டன. பல நவீன கருவிகள் இயங்க வைக்கவும், நீர் விநியோகம், மின் விநியோகச் செயற்பாடுகளில் கணிசமான பங்கு பணியாற்றப்பட்டது. நோயாளர்களின் சேவைக்கென அமைக்கப்பட்ட அமைப்புக்கள் தமது சேவையை இலாப நோக்கில் முன்னெடுக்க முற்பட்ட வேளையில் கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபை சேவையே கொள்கையாகக் கொண்டு செயற்பட்டது போல் தொடர்ந்தும் செயற்பட வாழ்த்துகிறேன்.

வைத்திய கலாநிதி. எஸ். சிவமோகன்
பிரதி மாகாண சுகாதார சேவைகள்,
பணிப்பாளர், கிளிநொச்சி.`.முல்லைத்தீவு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

## கிளி/ வலயக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை ஐந்தாம் ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு வெளியிட இருக்கும் நிறைவு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறேன். உலகிலே பல்வேறு தாபனங்கள் பற்பல சேவைகளை வழங்கிக்கொண்டிருக்கின்றன. அச்சேவைகளுக்கெல்லாம் மகுடமாக விளங்குவது உயிர்காக்கும் பணி. அப்பணியை தன் தாரக மந்திரமாக நினைத்து அதற்கான தேவைகளை இயன்றளவு பூர்த்தி செய்து கொடுப்பதே கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையின் செயற்பாடாக அமைந்துள்ளது. கடந்த ஐந்து வருட காலமாக இச்சபை ஆற்றிவரும் பணிகளை நான் நன்கு அறிவேன். வைத்தியசாலையின் தேவைகளோ எண்ணிலடங்கா, கிடைக்கின்ற வளங்களோ அத்தேவைகளை எவ்வகையிலும் நிறைவு செய்ய முடியாத மட்டுப்படுத்தப்பட்டவை, நோயாளர்கள் தொகையோ நாளுக்கு நாள் அதிகம், நோய்களின் வகைகளோ தினம் தினம் அதிகரிப்பு. தேவையான வைத்திய அதிகாரிகளோ ஒருசிலர். வந்து சேரும் மருந்துகளோ நோயைத்தடுத்திட முடியாத பற்றாக்குறை. ஒரு சிறு தவறு நிகழ்ந்திட்டால் விமர்சனங்களோ எண்ணில் அடங்காதவை. இத்தனைக்கும் முகம் கொடுத்து “சேவை எமது பணி” எனும் நிலையில் வளர்ச்சி பல கண்டது மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபை.

அரசினால் கிடைக்கின்ற நிதி மிகக்குறைவு. கட்டட தளபாட வசதிகள் மிகப்பற்றாக்குறை தேவையான பணியாளர்கள் மிகக்குறைவு. இத்தனைக்கும் வைத்திய அதிகாரிகள் தொடக்கம் தாதிகள் பணியாளர்கள்

மருந்துக்கலவையாளர்கள் உட்பட அனைவரும் கண்ணியமும்
தியாகமும் உடையவர்களாய்
செயற்படும் முறையால் முன்னைய குறைகள்
குறைகளாக இல்லாமல் போய்விட்டன.

தேவைகளை உணர்ந்த அபிவிருத்திச் சபையானது தன்னாலான
உதவிகளை அளிப்பதால் பணியாளர்கள் தம் சிரமங்களை
மறந்து சேவையிலே ஒன்றிணைவதைக் காண்கின்றோம்.

அரசின் உதவிகள் மிகமிக மட்டுப்படுத்தப்பட்டபோதும்
வைத்திய அதிகாரி ச.விக்கினேஸ்வரனின் தலைமைத்துவம்,
ஆழுமை, நேரம் பாராசேவை, பொதுநல வாழ்வில் காட்டும்
ஆர்வம் இவையாவும் இச்சபைக்கு பெரும் ஊக்கமாக
அமைந்துள்ளமை மனம் கொள்ளத்தக்கது. ஒரு
குடும்ப உறவு இவ் வைத்தியசாலையிலே கடந்த ஐந்து
வருட காலமாக நிலவுவதை பல சந்தர்ப்பங்களிலே நான்
அவதானித்துள்ளேன். இந்த உறவு இச்சபையின்
செயற்பாட்டிற்கும் வைத்தியசாலையின் துரித
வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைந்துள்ளது.

இந்நிலையில் சேவையாளர்களைப் பாராட்டி தூய
இப்பணிக்குத் தலைவணங்கி ஐந்தாம் ஆண்டு
மலர் நிறைவுக்கு வாழ்த்துக்கூறி உயிர்காக்கும்
உத்தமரை உளத்திருத்தி நிறைவு காண்கிறேன்.

**நன்றி**

திரு.ப.அரியரத்தினம்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
கிளிநொச்சி.

## தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி.

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபை தனது ஐந்தாவது ஆண்டு நிறைவை மலர் மூலம் பதிவு செய்வதை அறிந்து அகமிக மகிழ்ந்து பெருமையடைகின்றேன்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திக்குழு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத்திட்டத்தின் கீழ் சுக நல மேம்பாட்டிற்காக ஆரம்பிக்கப் பெற்று இன்று புதுப்பெயருடன் பொலிவுடன் சேவை செய்வது போற்றுதற்குரியது.

சமூக சுகநல சேவைகளுக்கென தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிறுவிய சமூக நல சேவை நிலையங்கள், சித்த ஆயுள்வேத வைத்திய சேவைகள் இணையம், மூலிகை உற்பத்திக் கூட்டுறவாளர் சங்கம், என்பன மற்றைய நிறுவனங்களாகும்.

போர்ச்சூழல்கள் காரணமாக மக்களின் சுகநல நிலைப் பாதிப்புக்களை தவிர்க்கும் நோக்குடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிதியுதவியும், சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி மூலம் கடன் வசதிகளும், வட்டியில்லாக்கடனும் வழங்கி ஆக்கமும் ஊக்கமும் வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை தனது சேவை முத்திரைகளை கீழே தரப்பெறும் பணிகள் மூலம் நிலை நிறுத்தியது என்பது குறிப்பிடத்தக்கதும் பெருமைக்குரியதும் எனலாம்.

* சேவை விரிவாக்கத்திற்கு மேலதிக விடுதிகள் குறிப்பாக வயிற்றோட்டநோயாளர் விடுதி அமைத்தமை.

* வெளி நோயாளர் தங்கி நின்று வைத்தியம் பெற தற்காலிக வெளி நோயாளர் தங்கு மண்டபம் அமைத்தமை

* வைத்தியசாலைக் கழிவுகள் சுகாதார முறைப்படி எரிக்க எரியூட்டி உலைக்களம் அமைத்தமை.

* ஊடுகதிர் நிழற் படம் (X-ray), அசை சீர் துணுக்கி (Scann), அறுவைச்சிகிச்சை(Surgery) வசதிகள் மேம்படுத்தியமை.

*மருந்துத் தட்டுப்பாட்டுக் காலங்களில் தேவைக்கேற்ப மருந்துகளை மாற்று வழிகளில் பெற்று வழங்கியமை.

* தென்னிலங்கைக்கு நோயாளர்களை வைத்தியம் பெறுவதற்கென துரிதமாக அனுப்பியதுடன் அவர்கட்கான உதவு தொகையை வழங்கியமை. இவ்வாறு எத்தனையோ எடுத்தியம்பலாம்.

எனவே இத்தகைய பல பணிகளைச் செய்து வரும் எமது சமூக சுகாதார அபிவிருத்திச்சபை மேன்மேலும் தனது சேவை செய்ய எமது வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கிறோம்.

**நன்றி**

திரு.கே.பி.றெஜி
நிறைவேற்றுப்பணிப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,
யாழ் சாலை, கிளிநெச்சி.

# கரைச்சி உதவி அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில்
மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை
தனது செயற்பாட்டில் ஐந்தாம் ஆண்டு நிறைவினையிட்டு, நிறைவு மலரொன்றினை வெளியிட்டு விழாக்கொண்டாடுவதை அறிந்து மகிழ்வடைகிறேன்.
அத்துடன் அந் நிறைவுமலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதனையும் பெரும் பேறெனக் கருதுகிறேன்.

மாவட்ட சுகாதார சேவைக்கு ஆளணி, பொருளாதார வளம் மிக அருமையாக உள்ள இக்காலப்பகுதியில் மாவட்ட சூழ்நிலைக்கமைய தேவையான ஆளணியினரை
உருவாக்கி சுகாதார சேவைகளை வழங்கிய திறமையும், பெருமையும் இச்சபைக்கும் சபையின் நிர்வாகிகளுக்கும் நிறைய உண்டு, இதனால் பல உயிர்கள் காப்பாற்றப் பெற்றன. பல பாராட்டுக்களையும் பெற்றுள்ளது.

இவ் அபிவிருத்திச்சபையின் பணிகளுக்கு நாம்
அனைவருமே நன்றியும் கடமைப்பாடும் கொண்டுள்ளவர்களாவோம்.
மேன்மேலும் பின்தங்கிய இம் மாவட்ட மக்களுக்கு இச்சபை அரும்பணி ஆற்ற வேண்டும்.
அதற்கான சகல நலன்களையும் வளங்களையும் இறைவன் நல்குவானாக.

**வணக்கம்**

**பொன்.நித்தியானந்தம்,**
**உதவி அரசாங்க அதிபர்,**
**பிரதேச செயலகம்,**
**கரைச்சி, கிளிநொச்சி.**

05ம் ஆண்டு நிறைவு மலர்

# Congratulates for persistant efforts in seeking to Alleviate suffering

*Oxfam is pleased to provide the following message for your anniversary publication.*

*In recognition of the 5th anniversary of the Socio Health Development Society, Oxfam Sri lanka would like to wish the society to continue success in its efforts to assist the most Vulnerable of the Vanni in obtaining access to basic health services.*

*Oxfam SriLanka Congratulates the Socio Health Development Society for its persistent efforts in seeking to alleviate suffering.*

Yours Sincerely

Jane Thomsan
Programme Coordinator-North
OXFAM Sri lanka

# திடமுடை செயல்கள் வளர்கவே

**"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் அவரவர் கருமமே கட்டளைக் கல்"**

இவ் ஆன்றோர் வாக்கு வள்ளுவர் தந்த பொன்மொழியாகும். மேற்படி நிறுவனத்தின் செயற்பாடு என்னை இக்குறள்வழி மீட்டுச் செல்கின்றது. கட்டளைக் கல் என்பது உரைகல்லாகும். பொன்னின் தரத்தை உரைகல் கூறும், அதுபோல கிளி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின் செயற்பாடுகளும் இங்கு உரைக்கப்படுகின்றன. இன்று தமிழர் தேசத்தில் நிலவுகின்ற மருந்து, எரிபொருள் தட்டுப்பாடு வேளைகளில் இவர்கள் செயற்பாடு மிகப்போற்றுதற்குரியதாகும்.

உண்மையில் இவர்கள் செயல் வீரர்கள், இது பற்றிக்கூற எனக்கு வார்த்தைகட்குப் பஞ்சமாக இருக்கிறது. மனித வாழ்வில் மனிதனுக்கென ஒதுக்கப்பட்ட கடமைகளில் ஒப்புயர்வற்ற சேவை என்பது வைத்திய சேவை. நானும் அச்சேவையில் இருப்பதால் அதன் மேன்மையை உணர்கிறேன். இப்படி ஒரு நிறுவனம் எமது அனைத்து வைத்திய மனைகளிலும் இருந்திருப்பின் எத்தனையோ படிகளை நாம் தாண்டியிருக்கமுடியும்.

உனக்கென வாழாது பிறருக்கும் உதவ வாழ் என்ற முதுமொழியின் இலக்கணம் இவர்கள் "எமது கையும் பிறருக்கு உதவ வாழும் வாழ்வு மேலானது" என்ற கோட்பாட்டில் சமூக சுகாதார அபிவிருத்திச் சபையின் பாதையும் பரிபூரணமாக உள்ளது.

கடமையில் தவறாத கண்ணியமான மடமையை நீக்கிய மாண்புடையார் உடமை எல்லாம் உதவும் உத்தமர் தம் திடமுடை செயல்கள் வளர்கவே!

**நன்றி**

வைத்தியகலாநிதி ஞா.தர்மேந்திரா,
அரசினர் வைத்தியசாலை,
முழங்காவில்.

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டு நிறைவில் வாழ்த்தி நிற்கிறோம்.

அழகிய தங்கப்பவுண் நகைகள் செய்து பெற்றிட




# நகைப்பூங்கா

அசல் 22 கரட் அழகிய வேலைப்பாடுகள் குறித்த
தவணை உத்தரவாதம்

சுமங்கலி நகைப்பூங்கா
பிரதான சாலை, கிளிநொச்சி

## *Dedicated and meaning full services become g reat success*

It is a great pleasure for me to send this message of felicitation for the Kilinochchi District Socio Health Development Society for their completion of 5 years valuable service. To remedy the sufferings of people the Society has not hesitated to contact internation at non Govermental ogansations to obtain necessary assistance suited to the needs of the people and Hospital. FORUT has also procvided certain support to the benefit of the affected people.

I hope the socio Health Development society will continue their dedicated services and intervence in new health related fields, so that more support could be renderd to war affected people. The role of the society becomes even more important if the present peace proess prograesses further.

I wish the socio Health Development Society all the best for the future, and hope that your celebration of 5 years dedicated and meaningful services become a great success.

Lodve A svare

Project manager
Forut-vanni

# Congratulations

UNICEF congratulate the Kilinochchi District socio Health Development Society on their 5th Anniversary.

UNICEF have been happy to support this Organization in training of health Volunteers at the displaced Kilinochchi Hospital at Akkarayan.

The Kilinochchi Socio Health Development Society are also assisting Financially, poor patients who need to travel out side the vanni Districts for medical treatment, from their own funds and some UNICEF funds.

UNICEF is happy to support such an Organization in that assisting patients at community level.

We trust this Valuable service to the people will continue again congratulations.

**Thanks.**

Mrs penny Brune
Programme Officer
Children Affected by Armed
Conflict vanni

05ம் ஆண்டு நிறைவு மலர்

# அக்கராயன் உபதபாலதிபரின்
# ஆசிச்செய்தி

வன்னிப்பெருநிலப்பரப்பிலே கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கெதிராக அரசினால் முடுக்கி விடப்பட்ட பலவித அழுத்தங்கள், பொருளாதாரத்தடைகளுக்கு மத்தியிலும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மகத்தான சேவையை ஆற்றிவருவது அனைவரும் அறிந்ததே. அதற்கு உந்துசக்தியாக இருந்து பல வழிகளிலும் அதன் சமூக சுகாதார அபிவிருத்திச்சபை செயற்படுவது பாராட்டுக்குரியது.

அந்த வகையிலே வைத்தியசாலை அபிவிருத்திச்சபையானது நோயாளர்களின் நலன் கருதி நோயாளர் விடுதிகளை அமைத்துக் கொடுத்தது மட்டுமின்றி பொது நிறுவனங்கள், பொதுமக்களின் ஆதரவுடன் அன்பளிப்புக்களைப் பெற்று கண்ணொளித்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. அதன் மூலம் இன்று வரை நூற்றுக்கணக்கான நோயாளர்களுக்கு கண்பார்வையைப் பெற்றுக்கொடுத்துள்ளது. அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரனையுடன் நோயாளருக்கான உடுபுடவை இதர பொருட்களை வழங்கியும் மற்றும் வைத்தியசாலை ஊழியருக்கான விடுதி போன்றவற்றை அமைத்துக் கொடுத்தும் தனது பணியை வியாபித்துக்ககொண்டு செல்கிறது. இவ்வாறாக தனது பணியை ஆரம்பித்த காலம் தொட்டு நோயாளர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் பல சேவைகளை ஆற்றி அனைவரினது உள்ளங்களிலும் அழியாத இடத்தைப் பிடித்த சமூக சுகாதார அபிவிருத்திச்சபை மென்மேலும் தனது பணியைத் தொடர எல்லாம் வல்ல இறைவன் துணை புரிவாராக!

**நன்றி**

செல்வி ஞானறூபி ஞானசேகரம்
உப தபாலகம், அக்கராயன்குளம்.

## பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்களின் ஆசிச்செய்தி

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை சமூகத்தால் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ச.விக்கினேஸ்வரன் அவர்கள் தலைமையில் நிறுவப்பெற்ற உன்னத சமூக சுகாதாரப்பணிகளை 1997ன் முற்பகுதியிலிருந்து இன்று வரையிலான 5 ஆண்டுகளாக ஆற்றிவருவதன் மூலம் 50 ஆண்டு கால வளர்ச்சியை எய்தி நிற்கிறது, கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை. 1996ம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் யாழ்ப்பாணத்திலிருந்தும் கிளிநொச்சி, பரந்தன் நகரப்பகுதிகளிலிருந்தும் அவலப்பட்டு அல்லற்பட்டு இலட்சக்கணக்கில் இடம்பெயர்ந்து ஓடிவந்த தமிழ் மக்களோடு தானும் இடம்பெயர்ந்து வந்து அக்கராயனில் நிலைகொண்டு மக்கள் உயிர் காத்துவருகிறது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை. ஏழ்மை நலிக்கும் குடிமக்களின் நெருக்கத்தால் நோய்கள் நோயாளர்கள் பெருகி வசதிகள் பற்றாக்குறையாகி விட்ட நிலையில் அரசின் திட்டமிட்ட மருந்து, பொருண்மியத்தடைகளின் நடுவில், வறுமையாலும், நோய்களாலும் மக்கள் பேரழிவிற்கு முகம் கொடுத்து உயிர் காக்கப் போராடிக் கொண்டிருந்த நிலையில் அவர்களைக் காப்பாற்றும் இலட்சிய வீச்சுடன் எழுந்த நிறுவனக் கட்டமைப்பே இந்த சமூக சுகாதார அபிவிருத்திச் சபை. அதன்படி கிளிநொச்சி மாவட்டத்தில் நெருக்கடிக்குள்ளாகி குலைந்துகொண்டிருந்த சமூக, சுகாதார நிலைமைகளை மறுசீரமைக்கும் முயற்சியில் தீவிரமாக விடாப்பிடியாக உழைத்து வெற்றி கண்டது இச்சபை.

இம்மாவட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட பாரதூரமான மனித உயிரழிவு பெருமளவில் தடுக்கப்பட்டமைக்கு இச்சபையின் அயராத, கண்தூங்காத உழைப்பும் காரணமாயிற்று என்றால் அது மிகையன்று. "மக்கள் பணியே மகேஸ்வரன் தொண்டு" என்ற மனத்தெளிவுடன் செயற்படும் இந் நிறுவனம் பயனும் பண்பும் மிக்க தன் சேவையை; இன்றியமையாச் சேவையை மேலும் பல்லாண்டு பல்லாண்டு உறங்காத விழிகளுடன் ஆற்றி வரவேண்டி வாழ்த்துவோமாக! இச்சபையின் மனித நேயமனம் படைத்த தொண்டர்கள் சகல நலங்களும் பெற்று மக்கள் பணியைத்தொடரவேண்டும் என மக்கள் நெஞ்சங்களும் நிச்சயமாக வாழ்த்தும் என்பது உண்மையாகும்.

**நன்றி**

பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்
பலிகளின்குரல், முள்ளியவளை

# நிலம்

# வெளியீட்டகம்

**87,வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியா**

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டு நிறைவில் அதன் பணி தொடர வாழ்த்துகிறோம்.

துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்களை
மலிவாகப் பெற்றுக்கொள்ள சிறந்த நிறுவனம்

## தம்பையா எரிபொருள் உதிரிகள் வாணிபம்



(யசோ பல்பொருள் வாணிபம்)



முதன்மைச்சாலை, கந்தபுரம், கிளிநொச்சி.

# கிளி/பாரதி வித்தியாலய முன்னாள் அதிபரின் ஆசிச்செய்தி

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவினை ஒட்டி வெளிவருகின்ற சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை மனதிற்கொண்டு மகத்தான சேவையாற்றி வருகின்ற கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்தி சபையின் தலைவர் வைத்திய கலாநிதி ச.விக்கினேஸ்வரன் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை கடந்த ஐந்து வருடங்களாக ஆற்றி வருகின்ற பணி அளவிடற்கரியது.

யுத்தக் கொடுமைகளையும் நித்தம் சுமந்து... இடம் பெயர்ந்து.... இடம் பெயர்ந்து... ஏதிலிகளாய் வாழ்ந்த மக்கள் அனுபவித்த துயரங்கள் வார்த்தைகளால் வடிக்கமுடியாதவை,

போசாக்கின்மை

கொடிய தொற்று நோய்கள்

மலேரியாக்காய்ச்சல்

போன்றவற்றின் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு சங்கத்தின் உறுப்பினர்களும் தோளோடு தோள் நின்று உழைத்தனர். குறிப்பாக 1997-1998 ஆண்டு காலப்பகுதியில் உயிர் கொல்லி நோயான கொலராவின் பிடியிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக கொலரா நோயாளிகளுக்கான பிரத்தியேக நோயாளர் விடுதி ஒன்றினை அமைத்து நோயைத் தடுப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். பொதுமக்களின் அனுசரணையுடன் விடுதிகளை அமைத்துக்கொடுத்த தமிழீழ நிர்வாக சேவையினரும் நன்றிக்குரியவர்கள்.

இந்த வகையிலே கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை தனது ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வெளியிடுகின்ற சிறப்பு மலரை வரவேற்று அகமகிழ்வோடு ஆசி கூறி நிற்கின்றேன். தொடர்ந்து ஆண்டு தோறும் இம்மலர் வெளிவர வேண்டும் என்பது எனது அவா.

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபைத் தலைவரும் உறுப்பினர்களும் நீடூழி காலம் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்ந்து அரும்பணியாற்ற வேண்டும் என வாழ்த்தி, இறை அருள் இறைஞ்சி எனது ஆசியினை நவில்கிறேன்.

நன்றி.

திரு.அ.கனகரத்தினம்
முன்னாள் அதிபர்
பாரதி வித்தியாலயம், கிளிநொச்சி.

## அகவையில் அகமகிழுகிறோம்... நாம்

கால நீரோட்டத்தின் மத்தியிலே உலகில் ஏற்படும் அழிவுகளும், அனர்த்தங்களும், அபிவிருத்திகளும் தவிர்க்க முடியாதவை, ஆனால் எமது அழகிய நாடு போரினாலும், பொருண்மிய தடைகளினாலும் சீரழிந்து சின்னாபின்னப்பட்டுள்ளது ஒரு துர்ப்பாக்கிய நிலைமையே, இந்த துன்புறும் வேளையிலும் மானிடமும் அதன் வரலாறும் முற்றுமுழுதாக அழிந்துவிடவில்லை, ஒழிந்துவிடவில்லை என்பதை எடுத்துக் காட்டும் வகையில் இந்த மண்ணிலே சில மக்கள் நிறுவனங்கள் எழுந்து நின்று மக்களுக்கு உறுதியையும், நம்பிக்கையையும் கொடுத்து நின்றுள்ளது. அந்த நிறுவனங்களில் ஒன்று தான் இன்று 5ம் ஆண்டு அகவைகாணும் கிளி/ மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையாகும்.

ஈழத்தமிழர்களின் வாழ்வில் வரலாற்றில் மறக்கமுடியாத முக்கிய ஆண்டாக 1995ம் ஆண்டு அமைந்துள்ளது. இராணுவ நடவடிக்கையால் யாழ்ப்பாண குடா நாட்டிலிருந்து சுமார் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இரவோடு இரவாக வன்னி நோக்கி இடம்பெயர்ந்தார்கள். இதனைத் தொடர்ந்து 1996 ல் "சத்ஜெய" 1,2 இராணுவ நடவடிக்கையினால் கிளிநொச்சியில் நிரந்தரமாக இருந்த மக்களும் இடம் பெயர்ந்தார்கள். 1997ம் ஆண்டு பெப்ரவரி மாதம் "எடிபல" இராணுவ நடவடிக்கையினால் வவுனியா, மன்னார் மாவட்ட மக்களும் இடம் பெயர்ந்தார்கள். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற "ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கை 1997ம் ஆண்டு வைகாசி மாதம் 13ம் நாள் ஆரம்பிக்கப்பட்டது.




இப்படிப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக நடைபெற்றதால் அழிவுகளும், அனர்த்தங்கள் இடம்பெயர்வும் இடர்பாடுகளும், பசியும், பட்டினியும் தொடர்ந்து கொண்டேயிருந்தது. இதன் விளைவாக உயிர்ச்சேதங்கள், உடமைகள் இழப்பு, உறவினர்கள் பிரிந்த நிலை என்பன அதிகரித்து மக்கள் அத்தியாவசிய அடிப்படைத் தேவைகள் அற்ற நிலையில் மக்களின் வாழ்வு நிலைகளும், வாழ்வியக்கங்களும் தொடர்ந்து பாதிக்கபட்டுக் கொண்டேயிருந்ததால் இதன் விளைவு நோயும் நோயின் பெரும் பாதிப்புமாகியது.

இந்த பாதிப்பிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் பணியில் கிளிநொச்சி வைத்தியசாலையும், வைத்தியர்களும் வைத்தியம் சார் பணியாளர்களும் ஆற்றிய மனிதநேய பங்களிப்பை, சேவையை நாம் மறக்கமுடியாது, பாராட்டாமலும் இருக்கமுடியாது.

கிளிநொச்சி வைத்தியசாலையை பொறுத்தமட்டில் இடம்பெயர்வின் காரணத்தால் அக்கராயன் பகுதியை மையப்படுத்தி தனது சேவையை ஆற்ற வேண்டியுள்ளதால் வைத்தியர்கள், கட்டட வசதிகள், படுக்கைகள், தளபாட உபகரணங்கள், பணியாளர்கள், மருந்து போன்ற வசதிகளும் பெரும் குறைவாக இருந்த போதும் காலத்தின் தேவையுணர்ந்து, வசதி வாய்ப்புக்களை எதிர்பாராது “எம் கடன் பணி செய்வதே” என்ற உயரிய இலட்சியத்தில், தன்னம்பிக்கையில் நிலைத்து நின்று பணியாற்றுவதற்கு பெரிதும் பக்க பலமாக சகல வழிகளிலும் கைகொடுத்து நின்றது கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையாகும். இந்த வகையிலேதான் இந்த நிறுவனம் தனது 5ம் ஆண்டில், அதன் சிறப்பிற்கான மலர் வெளியீட்டையும் நடாத்தும் பெருமை பெற்றுள்ளது. இந்த பெருமைக்குரியவர்களை இந்த மலரின் ஊடாக நன்றியுடன் பாராட்டுவதிலும், சேவைகள் தொடர வாழ்த்துவதிலும் கூட்டுறவாளர்களாகிய நாம் பெருமைப்படுகின்றோம்.

**நன்றி**

சொலமன்.சூ.சிறில்,
தலைவர்,
கிளி/மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்.

# சுமை சுமந்தவர்கள்

1996ம் ஆண்டு யூலை மாதம் 17ம் திகதி கிளி/மாவட்ட வைத்தியசாலையை நோக்கி ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து மிகப்பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எறிகணைகள் பல வீசப்பட்டன. எறிகணை வீச்சுக்களால் வைத்தியசாலை அல்லோலகல்லோலப்பட்டது. கிளிநொச்சி நகரிலிருந்து எல்லா ஸ்தாபனங்களும், கடைகள், கோவில்கள், நகரைச் சுற்றியிருந்த கிராம மக்கள் அனைவருமே இடம்பெயரத் தெடங்கினர். குறிப்பாக கிளி/மாவட்ட வைத்தியசாலையின் நோயாளர்களில் இயலாமல் படுக்கையாக இருந்தவர்களைக் கூட கவனிக்காமல் வைத்தியர்களையும், வைத்தயசாலைப் பணியாளர்களையும் தவிர எல்லோருமே ஓடிவிட்டார்கள். யாழ்ப்பாண இடம்பெயர்வின்போது கிளிநொச்சிக்கு வந்து வைத்தியர்களாக பலர் பணிபுரிந்தனர். அந்நேரத்தில் கிளி/மாவட்ட வைத்திய அதிகாரியாக கலாநிதி சிவகுரு ஐயா அவர்கள் பணிசெய்து வந்தார். 17.07.96 பிற்பகல் 2 மணிக்கு எறிகணை ஒன்று வைத்தியசாலையின் பின்பகுதியாக, எமது நிறுவனத்தின் காரியாலயத் திற்கும் இடையில் வீழ்ந்து வெடித்தது. பாதுகாப்புத் தேடி வைத்திய சாலையின் பின்புற வாழை மரங்களின் கீழ் படுத்திருந்தவர்களில் பலர் காயப்படடனர். பெண் ஒருவர் முகம் முற்றாகவே சிதைந்த நிலையில் காயப்பட்டிருந்தார். எமது நிறுவனத்தின் ஆட்களுடன் சென்று அவரை வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடத்தில் சேர்த்தோம். அப்பொழுதும் எறிகணைகள் வைத்தியசாலை வளாகத்தில் வீழ்ந்து வெடித்தவண்ணமிருந்தது. இந்நேரத்திலும் பதில் மாவட்ட வைத்திய அதிகாரி அவர்களும் உதவியாளரும் காயமடைந்தவர்களுக்கு சத்திரசிகிச்சையை மேற்கொண்டிருந்தார்கள். எமது நிறுவனமும், செஞ்சிலுவைச் சங்கமும் இன்னும் பல நலன் விரும்பிகளும் இயலாத நோயாளர்களை அவர்களது வீட்டுக்குக் கொண்டு செல்லும் பணியைச் செய்துகொண்டிருந்தோம். மேற்படி நிலையில்தான் 26.04.1996 அன்று அக்கராயன் வைத்தியசாலைக்கு கிளி/மாவட்ட வைத்தியசாலை இடம்பெயர்ந்தது.

வைத்தியசாலைப் பொருட்களை ஏற்றுவதிலிருந்து சகல ஆவணங்களையும் கொண்டு வருவதில் வைத்தியசாலை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள், ஸ்தாபனங்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் பெரும்பங்காற்றினார்கள். எம்மக்கள் உயிர் காப்பதற்கு அன்றைய,அக்கராயன் சுற்றயற்கூறு இன்றைய கிளி:மாவட்ட வைத்தியசாலையின் தன்மையுடன் இயங்கத் தொடங்கியது. கிளி/மாவட்ட வைத்தியசாலையின் பொருட்கள் வைப்பதற்கு இடப்பற்றாக்குறையுடன், இன்னும் பல தேவைகளுடனும் பெரிய நெருக்கடியில் வைத்தியப் பகுதியினர் இயங்கினர். பரிபூரணமாக பெரிய அர்ப்பணிப்புடன் பணிசெய்தனர். பல வைத்தியசாலை ஊழியர்களும், வைத்தியர்களும் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் தங்கள் கடமையில் வேகமாக ஈடுபட்டிருந்தார்கள். தாங்களும் தங்கள் குடும்பங்களும் இடம்பெயர்ந்த நிலையிலும் இவர்கள் பணி மிகச் சிறந்ததாக இருந்தது.

அப்பொழுது கிளி/மாவட்ட அரச அதிபராக திரு.தில்லை நடராஜா அவர்கள் கடமையாற்றினார். அவருக்குப் பின்பு திரு.இராஜநாயகம் அவர்களின் காலம் எமது மாவட்டத்திற்குப் பொற்காலம் என்றே கூறவேண்டும். தானும் ஓடி மற்றவர்களையும் ஓடவைத்து பணிசெய்த பெருமைக்குரியவர். இவரது காலத்திலேயே கிளி:மாவட்ட வைத்திய அதிகாரி அபிவிருத்திச்சபையை மிகுந்த அக்கறையுடன் தலைவராக இருந்து வழிநடத்தினார். அபிவிருத்திச்சபை உருவாக்கப்பட்டபோது வைத்தியசாலையுடன் மிக நெருங்கிய தொடர்புகொண்டிருந்த நிறுவனங்களுடன் இன்னும் பல நலன்விரும்பிகளுடனும் இணைந்து இச்சபை உருவாக்கப்பட்டது. இதன் பொருளாளராக திரு.பொன்.வினாயகமூர்ததி அவர்களும், செயலாளராக திரு.பவானந்தன் அவர்களும் தலைவராக இருந்து செயற்படும் வைத்தியகலாநிதி விக்கினேஸ்வரனுக்கு பக்கபலமாக செயலாற்றுகிறார்கள். அபிவிருத்திச் சபையின் தொடக்கமே பெரும் சுமையோடும் பல வேலைப்பழுக்களோடும் பல நெருக்கடியுடனும் ஆரம்பமானது. பாதுகாப்புக் கருதி எமது மாவட்ட வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை பிரிவும் அதனோடு தொடர்புபட்டிருந்த எம்.எஸ்.எவ். குழுவினரும் எமக்குச் சொந்தமான மின்வழங்கி இயந்திரம், எக்ஸ் கதிர் இயந்திரம் அனைத்துமே மல்லாவி வைத்தியசாலையில் இயங்கிக் கொண்டிருந்தது. அபிவிருத்திச்சபை மேற்கொண்ட துரித நடவடிக்கையால் எமக்கான வெளிநோயாளர் பிரிவும், புதிய ஒ கதிர் அறையும் கட்டப்பட்டன.விடுதிகள் விஸ்தரிக்கப்பட்டன. மலகூடங்கள் கட்டப்பட்டன. குப்பைகூழம் எரிக்கும் பகுதியும் உண்டாக்கப்பட்டது. புதிய சத்திரசிகிச்சை கூடம் அமைக்கப்பட்டு எக்ஸ்ரே கருவி அனைத்தும் இங்கே இயங்க வைக்கப்பட்டது. வன்னி மக்களுக்கு பெரும் பாதிப்பை உண்டாக்கிய "கொலரா" நோயாளருக்கான விடுதி புதிதாக அமைக்கப்பட்டது. வைத்தியசாலையின் மின்சாரத் தேவைக்கு உழவு இயந்திரத்தின் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. வைத்தியசாலயின் அபிவிருத்திச் சபையின் கோரிக்கைக்கு அமைய சிறிய கொடுப்பனவுடன் 20 தொண்டர்களை கியூடெக் நிறுவனம் வழங்கியுள்ளது. அபிவிருத்திச் சபையின் பணியை மேற்கொள்ள ஒரு பணிமனையும் வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ளது. எங்களைப் பொறுத்தவரையில் நல்ல அர்ப்பணிப்புடனும் மிகுந்த தியாகத்துடனும் அபிவிருத்திச் சபையின் வேலைத்திட்டங்களிற்கும் மாவட்ட மக்களுக்கும் நிறைவோடு தங்களை அர்ப்பணித்து செயலாற்றிய, ஆற்றுகின்ற வைத்தியசாலை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள், தொண்டர்கள் எமக்காக சுமைசுமந்தவர்கள் என்பதை இம் மாவட்டம் என்றும் மறக்கமுடியாது என்றே கூறுவேன். ஆரம்பங்கள் மறக்கப்படக்கூடாது. சரித்திரப் புதைப்புக்கள் நடக்கக்கூடாது. நட்போடும், அன்போடும், சிரித்த முகத்தோடும் சிறப்பாக அனைவரையுமே வழிநடாத்தி எம்மக்களின் உயிர்களைப் பாதுகாத்த பெருமையும் சிறப்பும் அபிவிருத்திச்சபைக்கும் வைத்தியசாலை சகல பணியாளர்களுக்கும் அதனை வழிநடாத்திய திரு.விக்கினேஸ்வரன் அவர்களையுமே சாரும். தற்போது மீளவும் எமது வைத்தியசாலை புனர்நிர்மாணம் செய்யப்படவிருப்பதால் எமது அபிவிருத்திச்சபையானது பலத்தோடு செயற்பட எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து என் வாழ்த்தை நிறைவு செய்கிறேன்.

நன்றி.

திரு. இ. கணேசபிள்ளை,
நிவாரண புனர்வாழ்வு இணைப்பாளர்.
கியூ டெக் நிறுவனம்.

## சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின் பணிகள்

சி. பாலசுந்தரம்
மேற்பார்வையாளர்,
மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி.

கிளிநொச்சி மண்ணின் மருத்துவத்துறை சார்ந்த சேவையிலே பல்வேறுபட்ட பரந்த நோக்கோடு தனது சேவையினை மனமுவந்து ஆற்றியது மட்டுமல்லாது மாபெரும் திருப்பு முனையான பலரும் வியக்கத்தக்க செயற்பாடுகளையும் ஆற்றி வழர்ந்தும் மிக உயர்ந்தும் நிமிர்ந்தும் நிற்கும் கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையானது இம்மண்ணில் வாழ்கின்ற குறிப்பிடத்தக்க பல சமூக நலன் விரும்பிகளின் அயராத முயற்சியாலும் கடின உழைப்பாலும் 19.03.1997ம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்று அன்று தொடங்கிய மகத்தான சேவையின் வழியுயர்ந்து அதன் அகவை ஐந்து முடிந்தும் கூட ஆணிவேர் அறுபடாத ஆலமரம்போல் தன்சேவையினால் மக்களின் மனங்களில் ஆழப்பதிந்துள்ளது.

இந்நிறுவனத்தின் பரிபூரணமான அர்ப்பணிப்பான மிக மிக மகத்தான சேவையை நுனிப்புல் மேய்வது போல் மேலோட்டமாகச் சிந்திப்பதும் பார்ப்பதும் உத்தேசக்கண்கொண்டு நோக்குவதும் உண்மையை உருமறைப்புச் செய்யும் உலுத்தர்கள் செயலாகும். உள்ளங்கையில் வைத்தால் நெல்லிக்கனி எவ்வளவு மிகத் தெளிவாகத் தெரியுமோ அதேபோன்று மக்களின் உணர்வலை சிந்தும் ஆழ்ந்த கருத்துக்கள் இதன் உண்மைக்கும் நேர்மைக்கும் சேவைக்கும் வெளிச்சம் போட்டுக்காட்டும்.

அகவை 5 முடிந்து அகவை 6ல் தடம் பதிக்கும் இந் நிறுவனம் தனது தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கில் பல வளைவும், சுழிவும், நெளிவும் கண்டு இன்று நிமிரக்காரணம் வறுமையின் பிடியில் வாழும் எம் மக்களின் மருத்துவ சேவையும் வைத்தியசாலையின் நிர்வாகத்தில் பங்கெடுத்து வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள், தொண்டர்கள் பயிற்றப்பட்ட உதவித் தாதியர்கள் ஆகியோருடன் அன்றிலிருந்து இன்று வரை எல்லாவற்றிற்கும் தோளோடு தோள் கொடுத்து ஆற்றிய சேவைகளும் என்றால் மிகையாகாது. எனவே ஆழ்கடலில் பயணம் செய்ய எவ்வாறு அணையாத விளக்காய் கலங்கரை விளக்குத் துணைபுரிகிறதோ அதேபோல் தான் வைத்திய சாலை நிர்வாகம் நெருக்கடிகள் மத்தியில் எண்ணிகரற்ற தன்னிகரில்லாத சேவையைச் செய்ய இன்று இந் நிறுவனம் ஒளி கூட்டி நிற்கிறது.

கடந்த காலங்களிலான போர் காரணமாகவும் குழப்பநிலை காரணமாகவும் சீர்குலைந்தும் மறுக்கப்பட்டும் தட்டிக்கழிக்கப்பட்டும் போன வைத்தியசாலையின் புனரமைப்புப்பணிகள், பல கட்டட நிர்மாணப்பணிகள் மற்றும் பல சமூகப்பணிகள் என எல்லாம் உரிய காலத்தில் உரிய நேரத்தில் உரிய முறையில் தேவை ஏற்படும் போது இவற்றை எல்லாம் ஈடுசெய்த பெருமை கிளி/மாவட்ட சமூக சுகாரதர அபிவிருத்திசபையைச் சாரும். இதற்கு உதாரணமாக கணபதி மண்டபம், சமையலறை, விடுதியமைப்பு, ஊழியர்களின் இடர்க்கடன், ஊழியர் மரணக்கொடுப்பனவு, பந்தல் சேவை போன்றவற்றைக் கூறலாம்.

இதே போன்று இந் நிறுவனம் ஆற்றிய சேவையில் கண்ணை இமை காப்பதுபோல் ஒருவரது ஒளிமயமான வாழ்க்கைக்காப்பான

"கண்ணொளி" என்னும் சமூகப் பணி வன்னியின் வறிய மக்களுக்கு இனிமேல் ஒளியைக் காணமாட்டோமா என ஏங்கிய நூற்றுக் கணக்கானவர்களுக்கு ஒளியூட்டியது. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாள் போன்றது என்பார்கள். அத்தகைய ஏழைகள் கண்பார்வை இழந்தால் அவர்களின் வாழ்க்கையில் பகல் என்ற சொல்லுக்கே இடமில்லை. அவ்வாறானவர்களின் வாழ்க்கையில் மாபெரும் ஒளிமயத்தைக் காட்டிய திட்டத்தினை உருவாக்கியது இந் நிறுவனமே. "கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் ஏன்?" என எண்ணிய மனங்களின் வாழ்வில் "ஞான ஒளி" கொடுத்த பெருமை இந்த அபிவிருத்தி சபையையும் அதனைக் கட்டிக் காத்து உயிரூட்டி உரமூட்டி வளர்த்த அனைத்து உள்ளங்களையும் சாரும் இதன் துணைத் தூண்கள் என விளங்கும் வைத்தியசாலை நிர்வாகமும் இங்கு பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் பெருமையுடன் நன்றி கூற உரித்துடையவர்கள்.



மனிதர்களது வாழ்க்கையில் இன்பதுன்பம் சுகதுக்கம் என்பனவெல்லாம் சுழல் சக்கரம் போன்றது. இது எமது வைத்திய சாலை நிர்வாகத்திற்கு மாத்திரம் புறநடையானதல்ல, இயல்பானதே. இந்த வகையில் வைத்தியசாலை யில் கடமை புரியும் வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், ஏனைய சக ஊழியர்கள், தொண்டர்கள், பயிற்றப்பட்ட உதவித்தாதியர்கள் போன்றோருக்கு இத்தகைய துன்பங்கள் ஏற்படும் போது முன்னின்று உதவிய பெருமையும் கிளி/மாவட்ட சமூகசுகாதார அபிவிருத்திச்சபையையே சாரும்.

இந்த வகையில் ஊழியர் களுக்கான இடர்க்கடன் கொடுப்பனவு குறைந்த வட்டியில் கடன் கொடுப்பனவு, வங்கி வைப்புகள், என்பனவும் குறிப்பிடத்தக்கன. மருத்துவத் துறைகள் சார்ந்த கற்கை நெறிகள் விரிவுரை செய்பவர்களுக்கான கொடுப்பனவுகள் என்பனவற்றை சரியான திட்டமிடலுடன் நகர்த்தும் பெருமையும் சபையைச் சாரும்.

எமது வைத்தியசாலையில் மிக நீண்ட வரலாற்றிலே இரத்தக்கறை படிந்த நாளான 15.07.1997 அன்று ஆனையிறவு முகாமில் இருந்து வீசப்பட்ட எறிகணை வீச்சில் உயிர்நீத்த எமது வைத்தியசாலை ஊழியரான திரு.கணபதி அவர்தம் உறவுகளும் இறந்த போதும் பரிசாரகரான திரு. நாகலிங்கம் அவர்கள் சுகவீன காரணமாக திடீர் மரணமடைந்த போதும் நாகரத்தினம் குருநாதர் உயிர் துறந்த வேளையிலும் எவராலுமே தனித்துநின்று முகம் கொடுத்து ஈடுசெய்ய முடியாத சேவையை ஆற்றியது மட்டுமன்றி "நட்டாற்றில் கை விடப்பட்டது போல்" விடப்பட்ட அவர்களின் பிள்ளைகளின் பெயரில் நீண்டகால வைப்புக்களையும் வங்கிகளில் ஆரபித்து கொடுத்ததும் இந் நிறுவனத்தின் ஒப்பற்ற சேவை எனலாம்.

வைத்தியசாலை ஊழியர்களுக்கு விடுதிகள் அமைத்துக்கொடுத்தல், சிறப்பான முறையில் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் செல்பவர்கள், சேவையின் நிமித்தம் இடமாற்றம் பெற்றுச் செல்பவர்கள் மற்றும் புதிதாக நியமனம் பெற்று எமது வைத்தியசாலையில் வேவையின் நிமித்தம் பணிபுரிய வரும் வைத்தியர்கள் ஏனைய ஊழியர்களுக்காக நிகழ்த்தப்படும் விருந்துகள் என்பன இதன் கடந்தும் கழிந்தும் சென்ற காலத்தின் அழியாத பதிவுகளாக உள்ளன.

மாதாந்த, வருடாந்த கூட்டங்கள், மற்றும் பொதுக் கூட்டங்கள் சுகாதாரம் தொடர்பான கருத்தரங்குகள், உளவியற் கருத்தரங்குகள் நிகழ்த்துவதிலும் அதற்கான அனைத்துச் செயற்பாடுகளையும் செய்து தந்து நடாத்தி முன்னின்று உழைத்து "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்னும் உண்மையை உணர்த்தியது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பலர் சில செயல்களைத் தட்டிக்கழித்த வேளை யில் இந் நிறுவனம் தழுவி அணைத்தும் சிலர் கழுத்தறுத்த போதும், கை விரித்த போதும் கழுத்துக் கொடுத்து கை தழுவி அணைத்து மிகப் பாரிய அளவிலான செயற்றிட்டங்களை மிக வெற்றிகரமாக நிகழ்த்திய பெருமை இதனையே சாரும். இது இதன் நாக்குப்புரளாத உண்மைத்தன்மையினை உணர்த்துகின்றது.

“உறியில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைவது தவறு.” என்பதை உணர்த்துவது போல் கிளிநொச்சி மாவட்டத் திலுள்ள மாணவர்களில் வளமான மாணவ சமூகத்தினைத் தேர்ந்தெடுத்து மேற்கொள்ளப் பட்ட யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடனான உதவித் தாதிய பயிற்சி நெறியில் அம் மாணவர்களின் பல தேவைகளையும் நிவர்த்தி செய்வதிலும் இந்நிறுவனம் பெரும் பணியாற்றி உள்ளது. “சக்கரைப்பந்தலில் தேன் மாரி பொழிவதைப் போல” இருந்ததென பலர் போற்றிப் புகழ்ந்தது மட்டுமின்றி வைத்தியத் துறையிலே உள்ள பெருந்தொகையான கலைஞர்களை வெளியுலகத்திற்கு அறிமுகம் செய்த நலன் காக்கும் கரங்கள் என்னும் அரங்க நிகழ்விற்கும் “நலன் தரும் சுரங்கள்” இன்னிசை நிகழ்வும் கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின் அயராத உழைப்பின் பணியில் நிறைவேறியது.

சுடச்சுட ஒளிரும் பொன்போல தனது சேவை யினையும் தேவையினையும் மிக மிக விரிவாக வும் தெளிவாகவும் ஆற்றிவரும் அபிவிருத்திச் சபையானது, சர்வமக்கள் மத்தியிலும் “சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல்” பக்கம் சாராது அன்று போலவும் இன்று போலவும் என்றும் தனது பணியை ஆற்றவேண்டும். அதற்கு இந்நிறுவனத்தின் தலைவர், செயலாளர், பொரு ளாளர், ஆளுனர்சபை உறுப்பினர்கள் போன் றோரது அசையாத துணிவும் தளராத நம்பிக் கை, சேவை நோக்கம் கொண்ட மனமும், பரந்த நோக்கம் கொண்ட செயற்திறனும் முயற்சியுள்ள உள்ளங்களும் எந்தக் கருமங்களானாலும் எண்ணித் துணியும் துல்லியமான சிந்தனை சக்தியுடையவர்களும் காலச்சக்கரம் மாறிமாறிச் சுற்றிச் சுழன்றாலும் இதன் அருங்காவலர்களாகத் தொடர்ந்திருந்தால் “சந்திர சூரியன் உள்ள சதா காலமும்” இதன் சேவையும் தேவையும் “ஏணிப்படி” என வளர்ந்தே செல்லும். அகவை ஐந்து தாண்டிய கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்தி சபையே இன்று போல் உன்சேவை என்றும் தொடர என்றென்றும் எம் ஊழியர்கள் சார்பாக என் வாழ்த்துக்கள்.

□□

பலஸ்தீனப் பெண்கவிஞர்

**ஃபத்வா துக்கான்**

## எனக்குப் போதும்

எனது தேசத்து மண்ணில் சாவதே
எனக்குப் போதும்
அதற்குள் புதைக்கப்படுவது
எனக்குப் போதும்
உருகி
அந்த மண்ணுடன் கலந்து
மறைந்து போவது
எனக்குப் போதும்

பின்
ஒரு பூவாக மலர்ந்து
என் நாட்டின் குழந்தை ஒன்றினால்
விளையாடப்படுவது
எனக்குப்போதும்

என் நாட்டின் இணைப்பில் இருப்பது
எனக்குப் போதும்

எனது தேசத்தின் புனித முற்றத்தில்
ஒரு கைப்பிடியளவு புளுதியாய்
ஒரு புல்லின் இதழாய்
ஒரு பூவாய் இருப்பது
எனக்குப் போதும்.

□□

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டு நிறைவில் அதன் பணி தொடர வாழ்த்துகிறோம்.

# வெண்மதி இலத்திரனியல் சீர்களம்

(டிலான் இலத்திரனியல்)



மின், இலத்திரனியல் பொருட்களை சிறந்த முறையில் குறித்த தவணையில் சீராகத்திருத்தி பெற்றுக் கொள்ளவும், மின்கலங்கள்மின்னேற்றிக் கொள்ளவும், வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும் நீங்கள் நாட வேண்டிய நிறுவனம்

***வெண்மதி இலத்திரனியல் சீர்களம் கண்டி வீதி கிளிநொச்சி***

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டு நிறைவில் அதன் பணி தொடர வாழ்த்துகிறோம்.

நவீன வடிவமைப்பில் அழகிய தங்கவைர நகைகளை குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும், பம்பே டிசைன் வளையல்களை நவீன டிசைன்களில் செய்து பெற்றுக்கொள்ளவும் சிறந்த நிறுவனம்



# அச்சுதன் நகைமாடம்

**முதன்மைச்சாலை, கந்தபுரம், கிளிநொச்சி.**

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டு நிறைவில் வாழ்த்துகிறோம்

ஒலிப்பதிவுத்துறையில்

என்றும் நிலைத்திருக்கும் பெயர்

யாழிசை ஒலிப்பதிவுக்கூடம்

(ஸ்கைறோஸ்)





முதன்மைச்சாலை, கந்தபுரம், கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டு நிறைவில் வாழ்த்துகிறோம்



அம்மன் உணவகம்

யாழ் சாலை, கிளிநொச்சி



திரு. சி. கந்தசாமி,
ஸ்கந்தபுரம்.

# வன்னியில் வாழும் ஒரு பொது மகனின் பார்வையில்..

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆரோக்கியமாக வாழ்தல் எல்லாவற்றையும் விடஉயர்ந்த பேறு. ஆனால் யதார்த்த நிலை அப்படியல்ல. நோய்கள் மனித இனத்தின் பொது எதிரியாக வளர்ந்து வருகிறது. விஞ்ஞானம் வளர வளர புதிய புதிய சிகிச்சை முறைகளும் கண்டுபிடிக்கப்படுகின்றன. அவற்றால் எல்லா நோய்களையும் கட்டுப்படுத்த முடிகிறதா?. ஏனெனில் நோய்களும் புதிது புதியதாய் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இது இயற்கையின் விதியா? மனித இனம் தளராமல் நோய்க்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மக்களின் உச்சக்கட்ட சோதனையும் வேதனையும் நிறைந்த காலம் 26.07.1996 ல் சத்ஜெய இராணுவ நடவடிக்கையுடன் ஆரம்பமாகியது. ஆனையிறவில் நிலை கொண்டிருந்த இராணுவம் தெற்கு நோக்கி பரந்தன், கிளிநொச்சி பிரதேசங்களைக் கைப்பற்ற பாரிய இராணுவ நகர்வை அதிகாலை ஆரம்பித்தது. எறிகணைகளும், விமானக்குண்டு வீச்சுகளுமே இப்பிரதேச மக்களைத் துயில் எழுப்பின. எதுவித முன்னறிவிப்புக்களும் மக்களுக்கு கொடுக்கப்படவில்லை.

இராணுவத்தினரின் இக் கோழைத்தனமான செயல்களை ஏற்கனவே பல வருடங்களாக அனுபவித்து பாதிப்படைந்திருந்த மக்கள் ஏங்கிப்போய் வாழாவிருக்கவில்லை. அவர்களின் முதற்தெரிவு தது உயிரைக் காப்பாற்றுவதே அதற்கு வழி தூர இடத்திற்கு விரைவாக நகர்ந்து செல்வதே. இராணுவத்தினரின் அகோரமானகுண்டு வீச்சுக்களுக்கு முகம் கொடுத்தபடியே மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் கிளிநொச்சி நகர மத்தியில் அமைந்திருந்த மாவட்ட வைத்தியசாலை வரலாற்றில் சந்தித்திராத பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியது. நோயாளர்கள், பணியாளர்கள், வைத்தியர்கள், மருந்துகள், உபகரணங்கள் இவற்றை உடனேயே அப்புறப் படுத்த வேண்டும். முன்பு விமானக்குண்டு வீச்சினால் வைத்தியசாலைக் கட்டடங்கள் இடிந்து போனதும் அதற்குள் அகப்பட்ட நோயாளரின் உடல்களைத் தோண்டி எடுத்ததும் இன்னமும் மக்கள் மனதை விட்டகலவில்லை.

எந்நேரமும் வைத்தியசாலை மீது குண்டு விழலாம் என்ற பீதி எல்லோரையும் வாட்டிக் கொண்டிருந்தது. சில மணிகளில் கிளிநொச்சி நகர் துடைத்தெறியப்பட்டது. அசுரவேகத்தில் நகர்வுகள் மேற்கொள்ளப்பெற்று சுமார் பன்னிரண்டு மைல் தொலைவிலுள்ள அக்கராயன் வைத்தியசாலைக்கு மருந்துகளும், நோயாளர்களும் மாற்றப்பட்டனர். கட்டட வசதிகள்

குறைந்த சிறிய இவ் வைத்தியசாலை யில் இவற்றை உள்ளடக்குவது முடியாத காரியம். விடுதி நோயாளர்கள் படுப்பதற்கு போதிய கட்டில்கள் இல்லை. பலர் நிலத்தில் படுக்க வைக்கப்பட்டனர். வெளிநோயாளர் வரிசை வைத்தியசாலை வளவையும் தாண்டி வெளி வீதிக்கு வந்து விடும். அதிகாலையிலேயே முண்டியடித்துக்கொண்டு வரிசையில் மக்கள் காத்திருப்பது சாதாரண காட்சியாக்கப்பட்டது.

அரசின் பொருளாதாரத் தடையினால் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாடாக இருந்தது. வைத்தியர், பணியாளர் பற்றாக்குறை, இப்படிப்பல நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிய சூழல்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான மக்கள் கிளிநொச்சியில் வசித்து வந்தனர். வந்தவர்களும் இருந்தவர்களும் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்து பெரும்பாலா னோர் அக்கராயனிலேயே தங்கியிருந்தனர். காடுகளிலும், வீதியோரங்களிலும் குடியமைத்து வாழ்ந்தார்கள். சன நெரிசல் அதிகமாயிற்று. இதனால் பிரதேசம் மாசடைந்து நோய்கள் வேகமாக பரவத் தொடங்கியது. போரின் கொடுமையை நோயின் கொடுமை விஞ்சி நின்றது. வைத்தியசாலைப் பிரதேசத்தில் ஆயிரக் கணக்கில் மக்கள் வெள்ளம் கரை புரண்டோடியது.

மலேரியா, மூளை மலேரியா, குருதிச்சோகை போன்ற நோய்கள் மிகவும் அதிகரித்து காணப்பட்டது. எறிகணையாலும் மிதிவெடியாலும் அவயவங்களை இழந்தோர் தொகையும் அதிகரித்திருந்தது. பல வருடங்களாக புதிய நோய்களின் பாதிப்புக்கு ஆளாகாமல் இருந்த இவ்வூர் நிரந்தரவாசிகள் கூட நோய்களால் பாதிக்கப்பட்டனர். பல்வேறு வகையான பற்றாக் குறைகளுடன் உள்ள இந்த வைத்தியசாலை யால் இந்த அவல நிலையைக் கையாள முடியுமா?

ஆம்; வெற்றிகரமாக இந்த நிலை சமாளிக்கப் பெற்றது. மாவட்ட வைத்திய அதிகாரி அவர்களின் ஆலோசனைப் படி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபை நலன் விரும்பிகளின் துணையுடன் ஆரம்பிக்கப் பெற்றது. துரிதகதியில் பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அரசாங்கம் கை விரித்து விட்ட நிலையில் மக்களின் நிதியுதவியினால் இச்சபை வகுத்த திட்டங்கள் வெற்றிகரமாக செயலுருப் பெற்றன. சில கட்டடங்கள் அமைக்கப் பெற்றன. தன்னார்வ வைத்தியர்கள், பணியாளர் கள் நியமிக்கப் பெற்றனர். இவர்கள் ஓய்வின்றி பணியாற்றியதால் வைத்தியசாலை ஓரளவு சுமுகமாக இயங்க ஆரம்பித்தது.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல "கொலரா" நோய் திடீரென பரவ ஆரம்பித் தது. வன்னிப் பிராந்தியமே கதி கலங்கியது. இந்நோயாளருக்காக யுத்த கால செயற்பாடு போல இரவு பகலாக உழைத்து தனியான கட்டடம் அமைக்கப்பெற்றது. சபையின் இம் முயற்சிக்கு பல நலன்விரும்பிகள் உறவினர்கள், கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு ஏற்படுத்தி நோய் கட்டுப்படுத்தப்பட்டது.

இதனை அடுத்து பார்வை குறைந்தோர் நலனுக்காக "கண்ணொளி" திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. பல பேருக்கு தொடர்ந்து இலவசமாக மூக்குக் கண்ணாடி, வில்லை, சத்திர சிகிச்சை ஒழுங்குகள் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அரச நிதி உதவி இல்லாமல் ஒரு மாவட்ட வைத்தியசாலை இயங்குவது சாத்தியமில்லை. ஆனால் மக்களின் உதவியுடன் நிதியாதாரங் களை ஓரளவுக்குப் பெற்று முற்று முழுதாக அரசை நம்பியிராமல் வைத்தியசாலைத் தேவைகளை இயன்றளவாவது பூர்த்தி செய்து செயற்பட்டு வருகின்றது இச்சபை. இக்கட்டான காலத்தில் ஒரு இமாலய சாதனையை புரிந்திருக் கிறது இச்சபை. பாரிய போராட்ட காலத்தில் சபை உருவாக்கப்பட்ட ஐந்து வருட காலத்திலும் சமூகத்தில் ஏற்பட்ட சுகாதாரப் பிரச்சினைகளை விவேகமாகவும் அர்ப்பணிப்புடனும் இச்சபை கையாண்ட விதம் வரலாற்றில் பொன் எழுத்துக்க ளால் பொறிக்கப்படும்.

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின் 5ம் ஆண்டு நிறைவில் அதன் பணி தொடர வாழ்த்துகிறோம்.



# கிளிநொச்சி மாவட்டகூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்



பிரதான சாலை, கிளிநொச்சி

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

**கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்**
**5 ஆண்டு காலச்சேவையைப் பாராட்டுகின்றோம்.**

# சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி

# SOCIO ECONOMIC DEVELOPMEN BANK

இன்றைய சேமிப்பு என்றும் கைகொடுக்கும்

□□ இலகுவான சேமிப்புத்திட்டங்கள் □□ இலகுகடன் வசதிகள்

## சேமிப்புத் திட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| * | எதிர்கால எழில் | - | சிறார்களுக்கானது |
| * | தாருகம் | - | மாணவர்களுக்கானது |
| * | மகளீர் மான்மியம் | - | மகளீருக்கானது |
| * | தோட்டத்தேட்டம் | - | விவசாயிகளுக்கானது |
| * | உழைப்பின் ஊற்று | - | தொழில்புரிவோருக்கானது |
| * | வாழ்வின் வளம் | - | வலுவிழந்தோருக்கானது |
| * | நிலையான வைப்புக்கணக்குகள் | | |

□□ எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள், அதிக நன்மையினைப் பெறுங்கள்

* சேமிப்புகளுக்கு அதிக வட்டி
* சேமிப்புகளுக்கெதிராக கடன் பெறும் வாய்ப்பு
* குறைந்த வட்டியுடனான கடன்கள்
* உங்கள் வாசலிலேயே சேமிப்பைத் தொடங்கும் வசதி



"வாரீர் இன்றே சேமிப்போம்"

எமது கிளைகள்

□□ **புதுக்குடியிருப்பு** □□ **கிளிநொச்சி**

□□ **மல்லாவி** □□ **விசுவமடு**

□□ **முழங்காவில்**



கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டின் நிறைவை மகிழ்ச்சியுடன் வாழ்த்தி நிற்கிறோம்....

**துன்புறும் மக்கள் மத்தியில் தங்கள் சேவைகள் தொடர என்றும் எமது பாராட்டுக்கள்.....**



வட பிராந்திய பார ஊர்தி (லொறி) உரிமையாளர்
கூட்டுறவுச்சங்கம் (வரைவுள்ளது)
கிளிநொச்சி



# 5ம் வருட நிறைவில் கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை

1995ம் ஆண்டு இலங்கையைப் பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகும். குறிப்பாக மிகவும் முக்கியத் துவம் வாய்ந்த வரலாறு காணாத யாழ் மாவட்ட மக்களின் இடம் பெயர்வு இந்த ஆண்டில் தான் ஏற்பட்டது. ஐந்து இலட்ச த்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் ஒரு இரவில் தமது வாழ் விடங்களை விட்டு தத்தம் வாழ்வு நிலைகளை யும் வாழ்வியக்கங்களையும் இழந்து யாழ்ப்பாண மாவ ட்டத்தில் வலிகாமம் பகுதியிலிருந்து மாவட்டத்தின் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளையும், இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பெருநிலப் பரப்பு மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களை யும் நோக்கி இடம் பெயர்ந்தனர்.

சூரியக்கதிர் 01 இராணுவ நடவடிக்கையின் காரணமாக 1995 ஐப்பசியில் இடம் பெயர்ந்தவர்கள் மீண்டும் ஒரு இடமபெயர்வாக 1996 சித்திரையில் சந்திக்கும் சூரியக்கதிர் 02 இராணுவ நடவடிக்கையின் மூலம் ஏற்பட்டது. சூரியக்கதிர் 02 இராணுவ நடவடிக்கையின் விளைவு யாழ் மாவட்டத்தில் வடமராட்சி, தென்மராட்சியில் இடம்பெயர்ந்து தங்கியிருந்தவர் களையும் நிரந்தரமாக வாழ்ந்து வந்தவர்களையும் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பெருநிலப் பரப்பை நோக்கி இடம் பெயரவைத்து வன்னிப் பெருநிலப் பரப்பில் மக்களின் எண்ணிக்கையை அதிகரித்தது.

> “உதவி வழங்குபவர்கள், நலன் விரும்பிகள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், ஆலயங்கள், பொது மக்கள் எனப் பலரிடம் உதவிகள் கோரப்பட்டன. இவ்வுதவிகளைப் பெற்று துரிதகதியில் வைத்தியசாலை வசதி வாய்ப்புக்களை மக்களுக்கு ஏற்படுத்தி வழங்கும் வகையில் திட்டச் செயற்பாடுகள் வரையப்பெற்று ஒழுங்கமைக்கப்பெற்றன.”

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பெரு நிலப்பரப்பில் 06 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அத்தியாவசிய, அடிப்படை வசதிகள் குறைந்த நிலையில் நலன்புரி நிலையங்களிலும் பொது இடங்களிலும், மரநிழல்களின் கீழும் உற்றார் உறவினருடனும் வாழும் சூழ்நிலை உருவாகியது. இந்த மக்கள் நோய்த் தாக்கங்களினாலும் போசாக்கற்ற நிலைக்கும் பாதிக்கப்பட்ட போது வன்னிப் பெரு நிலப்பரப்பில் ஓரளவு வைத்திய வசதிகளுடன் கிளிநொச்சி நகரில் இயங்கி வந்த “கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை” இந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு உற்ற தோழனாக துணை நின்றது.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் குடித்தொகை

ரீதியாக பெருமளவு மக்கள் தொகையை கொண்ட மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் 1996 ல் இருநத்து குறைந்தளவு வைத்திய அதிகாரிகளுடனும், பணியாளர்களுடனும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வன்னிப் பெரு நிலப்பரப்பில் நிரந்தரமாக வாழ்ந்த மக்களுக்கும் நிறைவான சேவையை இம்மாவட்ட வைத்திய சாலை நிர்வாகம் வழங்கியது.

இந்தக் காலப்பகுதியில் தான் மக்களுக்கான சுகாதார மருத்துவ சேவையை வன்னிப் பெருநிலப்பரப்பில் வழங்கும் ஒழுங்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் "சுகாதார இணையம்" புத்துயிர்ப்புடன் செயற்பட ஆரம்பித்தது.

இந்த நிலையில் 1996 ஆம் ஆண்டு ஆடிப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டம் தனது வரலாறு காணாத இடம்பெயர்வை சந்திக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. சத்ஜெய எனப் பெயரிடப் பட்ட "உண்மை வெற்றி" என்ற இராணுவ நடவடிக்கை கட்டம் கட்டமாக 1996 ஆம் ஆண்டு ஆடியிலிருந்து புரட்டாதி வரை தொடர்ந்த போது கிளி/மாவட்ட வைத்தியசாலை இடம்பெயரும் சூழ்நிலை ஏற்பட்டது. இராணுவ நடவடிக்கை யால் கிளிநொச்சி நகரையும் அதன் சூழ' லை யும் சுற்றுப்புறங்களையும் சேர்ந்த மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 25 ற்கு மேற்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்குரிய இரண்டு இலட்சத்தி ற்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்திருந்தனர்.

சத்ஜெய இரணுவ நடவடிக்கை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையையும் தாக்கத் தவறவில்லை. இராணுவ நடவடிக்கையின் முன்பாக ஏற்கனவே விமானத் தாக்குதலுக்கு உள்ளாகி குழந்தைகள் உட்பட பல நோயாளி கள் இறந்த நிகழ்வைக் கண்ட வைத்தியசாலை 1996 ஆடியின் பின்னர் சத்ஜெய இராணுவ நடவடிக்கையின் விளைவாக ஆட்லறி தாக்குதல களுக்கு உள்ளாகி மீண்டும் பாதிக்கப்பட்டது. செல் தாக்குதல்களினால் பல நோயாளிகள் காயமடைந்திருந்த நிலையிலும், வெளியிலிருந்து காயமடைந்திருந்த பல பொதுமக்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலும், பல பணியாளர்கள் இடம்பெயர்ந்திருந்த நிலையிலும், மாவட்ட வைத்திய அதிகாரி அவர்களும் அவரது நிர்வாகத்திற்குட்பட்ட ஒரு சில பணியாளர்களும், பாதிக்கப்பட்டிருந்த நோயாளிகளுக்கு வைத்திய வசதியளித்து அவர்களை பாதுகாப்பாக இராணுவ நடவடிக்கை க்கிடையிலும் அப்புறப்படுத்திய நிழ்வும் மறக்க முடியாத நிகழ்வுகளாகும். இதே போன்று தான் நோயாளிகளை அப்புறப்படுத்திய நிலையிலும் தொடர்ச்சியான செல் தாக்குதலுக்கு மத்தியில் மாவட்ட வைத்திய அதிகாரியும் அவர்களது பணியாளர்களும் நலன் விரும்பி களும் வைத்தியசாலைப் பொருட்களையும் பாதுகாப்பாக அப்புறப்படுத்தியும் தமது மேலதிகாரிகளுக்கும், மேற்பட்ட முகாமைக்குரிய வர்ளுக்கும் தெரியப்படுத்தும் ஒழுங்கை மேற் கொண்டும் தொடர்ச்சியான செல் தாக்குதலு க்கும் யுத்த சூழ்நிலைக்கு மத்தியிலும் மாவட்ட வைத்திய சாலைக் கட்டடத்தை தவிர அநேகமானவற்றை அக்கராயன் சுற்றயல் கூறு வைத்தியசாலைக்கு இடம் மாற்றியிருந்தனர்.

அக்கராயன் வைத்தியசாலை ஒரு சில கட்டடங்களுடன் இயங்கிய சிறு வைத்தியசாலை ஆகும். சத்ஜெய இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்திருந்த பெருமளவு மக்கள் அக்கராயன் பகுதியிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் அடிப்படை அத்தியாவசிய வசதிகளற்ற நிலையிலிருந்தனர். வைத்திய சாலைப் பணியாளர்கள் இருப்பிடங்கள் அற்றும் அடிப்படை வசதிகள் அற்றும் இருந்தனர். இந்த நெருக்கடியான நிலையில் வைத்திய அதிகாரி களின் பற்றாக்குறையும், பணியாளர் களின் பற்றாக்குறைகளும் இருக்கையில் மருந்துப் பொருட்களும் பற்றாக்குறை ஏற்பட்ட போதும் பெருமளவு மக்கள் வைத்தியசாலையை நோக்கி நோய்த் தாக்கங்களினால் வந்த போதும் மாவட்ட வைத்தியசாலையை அக்கராயன் சுற்றயற்கூறு வைத்தியசாலையில் இயங்கு வைப்பதற்கு மாவட்ட வைத்திய அதிகாரியும், இதன் பணியாளர்களும், நலன் விரும்பிகளும், மேல் நிர்வாகத்தினரும் திடசங்கற்பம் பூண்டனர்.

வைத்தியசாலையை நாடி வந்த பாதிக்கப்பட்ட மக்களை அரவணைத்து ஆதரவழித்து அபயமளிக்கும் அன்பு இல்லமாக படிப்படியாக வைத்திய சாலையை வளரத்தெடுக்கும் திட்டங்கள் திட்டமிடப்பெற்றன. உதவி வழங்குபவர்கள், நலன் விரும்பிகள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், ஆலயங்கள், பொது மக்கள் எனப் பலரிடம் உதவிகள் கோரப்பட்டன. இவ்வுதவிகளைப் பெற்று துரிதகதியில் வைத்தியசாலை வசதி வாய்ப்புக்களை மக்களுக்கு ஏற்படுத்தி வழங்கும் வகையில் திட்டச் செயற்பாடுகள் வரையப்பெற்று

ரவி

ஆனைவிழுந்தான்.

ஒழுங்கமைக்கப்பெற்றன. இருக்கின்ற வசதி வாய்ப்புக்களையும் பணியாளர்களையும் வைத்திய அதிகாரிகளையும் கொண்டு மக்களுக்கு நிறைவான சேவையை வழங்கக் கூடிய ஒழுங்குகளை மாவட்ட வைத்தியசாலை நிர்வாகம் நெறிப்படுத்த ஆரம்பித்தது.

**வைத்தியசாலை அபிவிருத்திச்சபை உதயம்**

1996ம் ஆண்டு பிற்பகுதி வன்னிப்பெரு நிலப்பரப்பை பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டமாகும். பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்திருந்ததும், அத்தியாவசிய அடிப்படை வசதிகளற்றும், வசதிகள் குறைந்திருந்தும் வாழும் சூழ்நிலை ஏற்பட்டதும், தொழில்களை இழந்த நிலையில் வாழ்வு இயக்கங்கள் கேள்விக் குறியாக்கப்பட்டதும், திட்டமிட்ட பொருளாதாரத் தடையும், மருந்துத்தடையும் ஏற்படுத்திய உடல் நிலைப் பாதிப்புகளும். தொடர்சசியான போர்ச் சூழலும், இராணுவ நடவடிக்கைகளும் விமானத் தாக்குதல்களும் ஏற்படுத்திய உளப் பாதிப்புகளும், பெருமளவு மக்கள் நோயினால் பாதிக்கப் பட்டதும், அனேக குழந்தைகள், தாய்மார்கள் போசாக்கற்ற நிலைக்குள்ளாகியதும், அனேக மக்கள் இறப்புக்குள்ளாகியதுமான சூழ்நிலைகள் உருவாக வழிவகுத்தது.

இந்த நிலையில் 1996 மார்கழியில் மக்களைப் பாதுகாக்கும் வகையிலும் மக்களுக்கு சுகாதார சேவை வழங்கவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட "சுகாதார விழிப்புணர்வு வாரம்" சுகாதார மருத்துவ ரீதியான செயற்திட்டங்களும் கட்டமைப்புக்களும் உருவாக வழிவகுத்தது.

"கிராமிய ரீதியாக சுகாதார விழிப்புணர்வுக் குழுக்களும்" பிரதேச செயலர் பிரிவு ரீதியாக "சமூக சேவை நிலையங்களும்" வைத்திய சாலைகள் ரீதியாக "வைத்தியசாலை அபிவிருத்திச் சபைகளும்" உருவாகப்பெற்றன.

இந்த வகையில் தான் 1997ம் ஆண்டு மார்ச் 19 இல் "கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திக்குழு" உருவாக்கப்பெற்றது.

அன்று ஆரம்பிக்கப்பெற்ற இச்சபையானது இன்று கிளிநொச்சிமாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையாக மாற்றப்பெற்று தனது 05ம் ஆண்டுச் சேவையை நிறைவு செய்கிறது. அன்றிலிருந்து இன்றுவரை இச்சபையின் தலைவராக இருந்து நெறிப்படுத்திய மாவட்ட வைத்திய அதிகாரியான வைத்திய கலாநிதி ச.விக்கினேஸ்வரன் என்றும் மறக்கப்பட முடியாதவர் என்பதோடு பாராட்டப்பட வேண்டியவராவர். அத்துடன் அவருடன் இணைந்து நின்று சேவையாற்றிய சேவையாளர்களும், நலன் விரும்பிகளும், பணியாற்றிய வைத்தியசாலையினதும் சபையினதும் பணியாளர்களும் நன்றிக்குரியவர்களாவர். இந்த நிலையில் "கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை" தனது ஐந்து ஆண்டு நிறைவான சேவையையும் மக்களுக்கும் அனைவருக்கும் முன்வைத்து நிறைவடைகிறது.

# கிளி/மாவட்ட வைத்தியசாலையும் சமூக சுகாதார அபிவிருத்திச் சபையும்

வன்னிப் பெருநிலப்பரப்பில் செழுமையாக விளங்கிய கிளிநொச்சி பிரதேசத்தில் மிகவும் கம்பீரமாக பிரதான வீதி அருகில் தன்னால் இயன்றவரை உயிரிழப்பை குறைத்து வைத்திய வசதியை அங்குள்ள மக்களுக்கு வாரி வழங்கிக்கொண்டிருந்தது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை.

மிகத் துரிதமாகவும் அமைதியாகவும் தனது சேவையை செய்து கொண்டிருந்த வைத்தியசாலைக்கு 1996ம் ஆண்டு ஆடி மாதம் பதினேழாம் திகதி வந்தது பேரழிவு. முல்லைத்தீவு மாவட்டத்தை இராணுவக் கெடுபிடியிலிருந்து கைப்பற்றப்பட்டதன் எதிரொலி கிளிநொச்சி நகரத்தின் சோக ஒலியாக மாறியது. ஆடி மாதம் பதினேழாம் திகதி ஆனையிறவுப் பகுதியில் இருந்து வந்த ஆட்லறி செல்வீச்சினாலும், வான் படையின் இரக்கமற்ற குண்டு மழை பொழிவினாலும் கிளிநொச்சி நகரம் பெரும் பேதலிப்புக்குள்ளானது. வைத்தியசாலையையும் அதனை அண்டிய பகுதிகளிலும் பெரும்பாலும் ஆட்லறி செல்களும் குண்டுகளும் வீசி எறியப்பட்டது. மக்கள் பெரும் பீதியடைந்து தமது சொந்த உடமைகள் உறவுகளை விட்டு அரைகுறையாக தம் உயிர்களை மீட்டால் போதும் என்ற நிலையில் அயல் கிராமங்களுக்கு தஞ்சம்புக ஓடினர். மாவட்ட வைத்தியசாலையின் சிகிச்சைக் களங்களில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற நோயாளர்கள் வெளிநோயாளர்கள் பகுதியில் சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் அனைவரும் செல் சத்தம் கேட்டு பீதிக்குள்ளாகி தம் நோயை மறந்த நிலையில் வீடுகளுக்கும் பாதுகாப்பிடங்கள் தேடியும் ஓடலாயினர். அந்த நேரம் கடமையில் நின்ற ஊழியர்கள் தத்தமது வீட்டில் கணவன், பிள்ளைகள், உறவினர்கள் என்ன நிலையோ என எண்ணியபடி கடமையில் நிற்கும் தாம் எப்படி வெளியேறுவது என்று தெரியாமல் திகைத்து நின்றனர். அந்த நிலையிலும் ஆறு, சிகிச்சைக் களங்கள், கொண்டமைந்த கிளி/மாவட்ட வைத்தியசாலை அதனை மூன்று சிகிச்சைக் களங்களாக மாற்றி, செல் வீச்சினால் ஏற்பட்ட பெரும் சிரமத்தின் மத்தியிலும் தனது சேவையை ஆற்றிக் கொண்டிருந்தது. இவ் வேளையில் மீண்டும் 26ம் திகதி காலை, சிங்கள இராணுவம் ஆனையிறவு பகுதியிலிருந்து மீண்டும் ஆட்லறி எறிகணை வீச்சை தொடங்கியது. அதனைத் தொடர்ந்து வான்படை விமானங்களும் தமது பணியை துரிதமாக நிறைவேற்ற குண்டுகளை மாறி மாறி வீசிக்கொண்டிருந்தன.

ஆங்காங்கே மக்கள் வீதிகளிலும் தொழில் ஸ்தாபனங்களிலும் காயப்பட்டும் இறந்தும் வீழ்ந்து கிடந்தனர். கிளிநொச்சி நகரமெங்கும் ஒரே அவலக்குரல் உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் எஞ்சி இருந்த மக்களும் தம் உடமைகளை விட்டு கால்போன போக்கில் கிளி நகரை விட்டு ஓடிச்சென்றனர். "வந்தோரை வரவேற்கும் பண்பாடு தமிழன் பண்பாடு" இது தமிழனுக்கே சொந்தமான தனித்துவமான பண்பாடு என்பதை வலியுறுத்த உடமைகள், உறவுகளை இழந்து வந்த மக்களுக்கு வயல் வெளியும் வாய்க்கால்

சி.மகேந்திரராசா
தாதிய உத்தியோகத்தர்

கரையும் கொண்ட கந்தபுரம் தென்னைவளம் மிகக் கொண்ட அமைதியான அக்கராயன் கிராமங்களும் அபயம் அளித்து வதிவிடம் இழந்தவர்களுக்கு வாழ்விடம் கொடுத்தது, வீதிகளில் காயப்பட்ட நோயாளரை தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் துரிதமாக முதலுதவி சிகிச்சைகளை மேற் கொண்டு மல்லாவி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இந்நிலை தொடர்ந்தும் இரண்டு மூன்று நாட்கள் நீடித்தது. கிளிநொச்சி நகரில் வைத்தியசாலை வளாகத்தனுள் எந்நேரமும் செல் விழலாம் உயிர்ச்சேதம் ஏற்படலாம். என்ற அபாய நிலையிலும் அக்கால கட்டத்தில் கிளி/மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தமது உயிரை பெரிதென எண்ணாது வைத்திய சாலை உபகரணங்களை அப்புறப்படுத்தும் பணியில் மிகத்துரிதமாக ஈடுபட்டார். செல் வீச்சுக்கு இலக்காகி அழிந்த கட்டடப் பகுதி கள், உபகரணங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகள் குறிப்பாக என்றே கதிர்ப்படப் பிரிவு உபகரணங் கள், பற்சிகிச்சைக்கூட உபகரணங்கள், சத்திர சிகிச்சைக்கூட உபகரணங்கள், சிகிச்சைக்களக் கட்டில், வாங்குகள், மருந்து வகைகள் அதைவிட எந்நிலையிலும் தேவையான ஒரு பிரஜை தான் பிறந்ததை உறுதிப்படுத்த தேவையான பதிவேடு கள் என்பவற்றை பெரும் சொத்துகளாக மதித்து அப்போது லிகிதராக கடமையாற்றிய திரு.நா. தயாளன் இன்னும் சிற்சில ஊழியர் களின் உதவியுடன் இரவு பகலாக வாகனங்க ளில் ஏற்றி அனுப்பினார். இவ்வாறு வதிவிடம் இழந்து புகலிடம் தேடி வந்த வைத்தியசாலை உத்தி யோகத்தர்கள், ஊழியர்கள் பொருட்கள் அனைத்தையும் இது தனக்கு சிரமம் தமது அரச உடமைகளை என்ன செய்வது என்று சினத்தை காட்டது அக்கராயன் வைத்திய சாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் அருள்நேசன் அவர்களும் சக உத்தியோகத்தர்கள், ஊழியர் கள் அனைவரையும் இன் முகத்துடன் வரவேற்று அப்பொருட்களை சிறிய வைத்தியசாலையில் பாதுகாத்து வைக்க இடமளித்தார். அவ்வாறும் மிஞ்சிய சில பொருட்கள் மல்லாவி மருத்துவ மனையில் தஞ்சம் புகுந்து கொண்டது. போர் அனர்த்தத்தில் சேதமாக்கப்பட்டவை போக எஞ்சிய வைத்தியசாலை உபகரணங்களுடன் 01.08.1996 இல் அக்கராயன் வைத்தியசாலையில் கிளி/மாவட்ட வைத்தியசாலை செவ்வனே தனது பணியை தொடங்கியது. போர்ச்சூழலில் பாதிப்ப டைந்து உள்ளத்தாலும் உடலாலும் பாதிக்கப் பட்ட மக்கள் பெரும் தொகையாக சிகிச்சை பெற வந்தனர். அவ்வேளையில் பெரும் இட நெருக்கடியும் சிகிச்சை களங்களில் தங்கி நின்று சிகிச்சை பெறுவோர் போதிய படுக்கை வசதி யின்றியும், மலசல கூட வசதிகளின்றியும் பெரும் அவதிப்பட்டனர். அதைவிட வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் நிற்க இடமின்றியும் இருந்து வந்த ஒழுங்கு முறையில் சிகிச்சை பெறமுடியாமலும் அதி காலை 5 மணிக்கே வீதிவரை வரிசையில் நிற்கும் நிலை ஏற்பட்டது. அவ்வாறு வரிசையில் நின்று சிலர் திரும்பிச் செல்லும் நிலையும் ஏற்பட்டது. அந்நிலையில் பகலில் ஆதவன் கருணையால் வெளிச்சம் நிறையவே கிடைத்தது. கடமைக்கு இடையூறின்றி ஆனால் இரவுக் கடமையில் மின்சார வசதியின்றி விளக்கின் உதவியுடன் பெரும் சிரமப்படவேண்டியிருந்தது. கடமையாற்றும் ஊழியர்களும், உத்தியோகத்தர் களும் சிகிச்சைக்களங்களிலேயே தங்கி நிற்கும் நிலை ஏற்பட்டது. இவ்வாறு பல இன்னல்களை அனுபவித்து மனவேதனையுடன் வரும் மக்களு க்கு (நோயாளர்களுக்கு) மன நிறைவான திருப்தி கரமான சிகிச்சையை எவ்வாறு வழங்குவது எனத் தெரியாமல் திணறிய வேளை கிளி/மாவட்ட வைத்திய அதிகாரி அவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டர் ஸ்தாபனங் கள், பொதுநலன் விரும்பிகள் அனைவரையும் அணுகி அவர்களின் ஒத்துழைப்புடன் கிளி/மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபையை நிறுவினார். அது இன்னல்கள் பலவற்றை தனது சேவையின் மூலம் தீர்த்துள்ளது. அவற்றில் சிகிச்சைக் கள இடநெருக்கடியைத் தீர்த்ததுடன் இரவு, பகல் கடமையின் போது தேவைக்கேற்ப மின்சார வசதியும் குடிநீர் வசதியும் மலசலகூட வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. அதைவிட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் வதிவிடம் அமைக்கப்பட்டது. அவற்றுடன் பெருமளவு மக்கள் பயன்பெறக்கூடியவாறு மின் உபகரணங் களை சீரான நிலையில் வைத்துப் பொருத்தி அவற்றை இயங்க வைத்துள்ளது. இந்த

வகையில் எக்ஸ் கதிர்ப்பட பிரிவு உபகரணமும், பற்சிகிச்சைக்கூட உப கரணங்களும் அமைக்கப் பட்டுள்ளன. அத்துடன் ஸ்கானிங் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கண்ணிழந்தோர் புனர் வாழ்வுக்கான கண்ணொளித் திட்டத்தை அறிமுகப்படுத்தி உதவியளித்துக் கொண்டிருக் கிறது. நோயாளர்களுக்கு உடை, பால்மா, போக்குவரத்து கொடுப்பனவு போன்றனவற்றை வழங்குதல், ஊழியர் இடர்கடன் உதவி அளித் தல். இப்படிப் பல உதவிகளை வழங்கித் தன் பணியைத் தொடர்ந்து ஆற்றிக் கொண்டிருக் கிறது. கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபை அதன் பணியில் சிறந்து இம்மண்ணின் விடிவிற்கான சிறந்த தரத்திலான வைத்தியசாலை ஒன்றையும் அனைத்து வசதிகளுடன் ஏற்படுத்திக் கொடுக்கும் இலக்கை நோக்கி செயற்பட வேண்டும். இதற்காக நாம் எல்லோரும் சேர்ந்து ஒன்றிணைந்து செயற்படுவோம்.

"மனிதர்களின் மீது பின்னப்பட்ட சமூகத்தின் சக்திகளையும் ஆற்றல்களையும் எதிர்த்தும், அதோடு இணைந்தும் போராடிவரும் மனித உறு தியின் வெளிப்பாடே சிறந்த படைப்பிலக்கியமாகும்"

—ஆர்தர் மில்லர்



# ஊழியர் உள்ளத்திலிருந்து..

**திரு.சு.க. தர்மகுலசிங்கம்,**

எழுதுநர்,மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை 1996 இடம்பெயர்ந்து அக்கராயன் வைத்தியசாலை கட்டடத் தொகுதியில் இயங்க ஆரம்பித்த போது இடம்பெயர்ந்த ஊழியர்களுள் சொல் லொணாத் துயரங்களோடு கடமைக்கு முகம் கொடுத்த அந்த வேளை அரச சார்பற்ற நிறுவனங்களின் அனு சரணையுடன் விடுதிகள் அமைத்துத் தந்தும் அரசாங்கத்தின் நிதி கிடைக்க காலதாமதம் ஏற்பட்ட போது ஊழியர்களின் கஷ்ட நிலையைக் கருதி கட னாக சம்பளத் தொகையினை வழங்கி உதவியும், ஊழியர்களுக்கு நேரும் அவசர இடர்களுக்கு கடனுதவி வழங்கியும் ஊழியர்கள் உற்சாகத்துடன் கடமையாற்ற உந்துசக்தியாக கிளிமாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை இயங்கி வந்துள்ளது.

மேலும் வைத்தியசாலை கட்டட வசதிகள் இல்லாத போது கட்டடங்கள் அமைத்தும் அரசின் பொருளாதாரத் தடைகள் இருந்த போது வைத்தியசாலைக்கு மின்வழங்கியும் நீர் விநியோகத்தினையும் வழங்கி உதவியளித் தும் ஊழியர்கள் ஓய்வுபெறும் போதும் இடமாற்றம் பெற்றுச் செல்லும்போதும் பிரியா விடை வைபவங்களை நடத்தியும் வைத்திய சாலை ஊழியர்களின் மனதில் நிலையான நன்றி யுணர்வை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டின் நிறைவில் வாழ்த்துகின்றோம்

# மயிலன்ஸ்
# பல்பொருள் வாணிபம்



அம்பலப் பெருமாள் சந்தி
அக்கராயன்

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டின் நிறைவில் வாழ்த்துகின்றோம்



# தங்க நிலா நகையகம்
(சிறீ லக்சுமி நகைமாடம்)

## தங்க வைர நகை வடிவமைப்பில்
## இன்றைய முன்னோடிகள்



முதன்மைச்சாலை, கந்தபுரம், கிளிநொச்சி.

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார
அபிவிருத்திச்சபையின் 5ம் ஆண்டின் நிறைவில்
வாழ்த்துகின்றோம்.



*அழகிற்கு அழகூட்டும் அழகுப் பொருட்களை வாங்கிட*

# வரதா அழகுச்சோலை

யாழ் சாலை, கிளிநொச்சி.

**கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார**
**அபிவிருத்திச்சபையின்**
**5ம் ஆண்டின் நிறைவில் வாழ்த்துகின்றோம்**

சகலவிதமான
மருந்து
வகைகளையும்
பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய
சிறந்த நிறுவனம்



# அம்மன் மருந்தகம்

**பிரதான வீதி, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.**






கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபை அலுவலகம்



1998ல் வைத்தியசாலையினுள்ளான வீதி புனரமைப்பு, நீர் விநியோகம்,
வடிகால் சீரமைப்பு






சத்திரசிகிச்சைக்கூடத் திறப்பு விழா-1998

## கிளிநொச்சி மாவட்ட
## சமூக சுகாதார அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகள் 1997-2002

1. கிளி மாவட்ட வைத்தியசாலைக்குரிய எக்ஸ் கதிரியக்கப் பிரிவுக்கு படச்சுருள்கள் கொள்வனவு செய்து கொடுக்கப்பட்டது.

2. வைத்தியசாலையின் தேவைக்காக மருந்து சுற்றும் தாள்கள், பைகள் என்பன கெள்வனவு செய்து வழங்கப்பட்டன.

3. வைத்தியசாலையின் மேற்கு, வடக்குப்புற வேலிகள் சீர் செய்யப்பட்டது.

4. ஊழியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவுகளும், அறவீடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கான சுழற்சி நிதியாக ரூபா ஐம்பதாயிரம் (50000) ஒதுக்கீடு செய்யப்பட்டது.

5. வைத்தியசாலையில் பணிபுரியும் தாதியர்களுக்கான இரட்டை விடுதிகள் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரனையுடன் அமைக்கப்பட்டது.

6. வைத்தியசாலை வளவில் தொடர்ந்து அத்துமீறல் குடியேற்றங்கள் தடை செய்யப்பட்டதுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவன் உதவியுடன் அவர்களுக்கு குடியிருப்பு அமைத்து கொடுக்கப்பட்டு அத்துடன் வர்த்தகர்களின் அனுசரணையுடன் அவர்களுக்கான மலசலகூடம் அமைக்கப்பட்டது, போரூட் உதவியுடன் புதிய கிணறும் அமைக்கப்பட்டது.

7. வைத்தியசாலை நோயாளர்கள் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களின் மாற்று உடுப்புகளுக்கு வசதியற்றோர்களுக்கு மாற்று உடுப்புகளும் பாய்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

8. அபிவிருத்திச்சபைக்கு வருமானம் தேடும் முயற்சிக்காக 50 அடி நீளமான தகரப்பந்தல் ஒன்று உருவாக்கப்பட்டதுடன் 100 கதிரைகளும் கொள்வனவு செய்யப்பட்டது. அத்தோடு தட்டச்சு, றோனியோ சேவைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

9. வைத்தியசாலை வளவில் வடகிழக்குப் பக்கத்தில் பிரதான வாய்க்கால் கரைவேலியும் போரூட் உணவு வேலைத்திட்ட அனுசரணையுடன் அணைக்கட்டும் அமைக்கப்பட்டது.

10. எக்ஸ் கதிர் படப்பிடிப்பாளருக்கு 118 நாட்களுக்குரிய கொடுப்பனவாக ரூபா11800 வழங்கப்பட்டது.

11. மாற்றலாகி வந்த மருத்துவ மாது ஒருவருக்கான விடுதியினை ரூபா 7000 செலவு செய்து சீரமைத்துக் கொடுக்கப்பட்டது.

பொது நூலகம்
யாழ்ப்பாணம்.

12. நோயாளர் விடுதிக்கான கட்டில் தளபாடங்களின் ஒரு தொகுதியினைப் பெற்று வழங்கியது.

13. கழிவுநீர் செல்லும் வடிகால்த் தொகுதி வேலி பராமரிப்பு என்பன செய்யப்பட்டது.

14. அபிவிருத்திச் சபையின் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபட்டு ஆதரவளித்த வைத்தியசாலை உத்தியோகத்தரான திரு.நா.தயாளன் அவர்களுக்கு சேவைநலன் பாராட்டு வைபவம் மேற்கொள்ளப்பட்டது.

15. சபையின் உறுப்பினரான திருவாளர் மு.கந்தசாமி அவர்களுக்கும் பொது நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் சேர்ந்து சேவைநலன் பாராட்டு வைபவம் மேற்கொள்ளப்பட்டது.

16. வைத்தியசாலையில் கடமையாற்றிய திரு.நாகலிங்கம், திரு.நாகரத்தினம் என்பவர்கள் காலமானதையிட்டு அவர்களின் பிள்ளைகளுக்கு தலா 2000 வீதம் ஐந்து பிள்ளைகளுக்கும் ரூபா 10000 நன்கொடையாக வழங்கப்பட்டது.

17. புதிய விடுதி அமைப்பு ("கொலரா வாட்") கிளிநொச்சி மாவட்டத்தின் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் பொது நிறுவனங்களின் அனுசரனையுடன் சுமார் 2300000 செலவில் புதிய விடுதி அமைக்கப்பட்டு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டது. இதில் 600000 வரையில் அபிவிருத்திச்சபையால் செலவு செய்யப்பட்டது.

18. புதிய விடுதிக்கு அருகாகவும் ஏனைய விடுதிகள் அலுவலகத்திற்கு அருகாகவும் பூந்தோட்டமும் வாழைத்தோட்டமும் அமைத்து பராமரிக்கப்பட்டது.

19. மல்லாவியில் தற்காலிகமாக இயங்கிய எக்ஸ் கதிர் பிரிவினை அக்கராயனுக்கு மாற்றும் வகையில் புதிய எக்ஸ் கதிர் அறை வடிவமைப்பு செய்து கொடுக்கப்பட்டதுடன் மேற்படி எக்ஸ் கதிர் பிரிவும் மின் பிறப்பாக்கியும் அக்கராயனுக்கு கொண்டு வந்து இயங்கவைக்கும் பணியை சபை மேற்கொண்டது.

20. வைத்தியசாலையினதும் விடுதிகளினதும் மின் இணைப்பு வேலைகள் துரிதப்படுத்தியமை.

21. சத்திர சிகிச்சைக் கூடத்திற்கும், விடுதிகளுக்கும் மின் விசிறிகள் வழங்கப்பட்டது.

22. வைத்தியசாலை நீர் வழங்கலை மேம்படுத்தும் வகையில் ஒரு குழாய்க்கிணறு அமைக்கப்பட்டது. (போரூட் உதவியுடன்)

23. பொது விடுதிகள் உட்பட வைத்தியசாலை ஊழியர்கள் அனைவரதும் விடுதிகள் சிறப்பான முறையில் திருத்தம் செய்து கொடுக்கப்பட்டதுடன் சீமெந்திலான 5 மலசல கூடங்கள் அமைத்துக் கொடுத்தமை.

24. வைத்தியசாலை எல்லைக்குள் பி.மா.சு.சே. அலுவலகத்திற்கும் பிரேத அறைக்குமான பாதையைச் சீர் செய்தமை.

25. பல்வைத்தியருக்கான விடுதி ஒன்று வாடகை அடிப்படையில் பெற்று திருத்தம் செய்து மலசல கூடம் அமைத்து வழங்கியது.

26. வைத்தியசாலை எல்லைக்கு அருகாக ஒரு வீட்டுடன் கூடியகாணியை வாங்கிஆண் ஊழியர்களுக்கான விடுதியாகப் பாவிக்க ஆவன செய்தது.

27. வைத்தியசாலை அவசரத் தேவைகள், திருத்த வேலைகள் என்பனவற்றிற்கு முற்பணம் வழங்கி உடனடியாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

28. அபிவிருத்திச் சபையால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கான பாவனை அறை, அலுவலக மண்டபம் ஆகியவற்றுக்கான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது.

29. 1999 ஆம் ஆணடுக்கான கட்டட ஒப்பந்த வேலைகள் நிதி பெறாத நிலையிலும் செய்து முடிக்கப்பட்டது.

30. 1997 யூலை 15 அன்று வைத்தியசாலை எல்லைக்குள் வீழ்ந்த எறிகணை வெடித்ததனால் இறந்த ஊழியர் கணபதியின் பிள்ளைகள் பெயரில் வங்கி வைப்புச் செய்யப்பட்டதுடன் அவ்வூழியரின் நினைவாக வைத்தியசாலைக்கான நிரந்தர பொது ஊழியர் மண்டபம் அமைக்கப்பட்டது.

31. இலங்கை செஞ்சிலுவைச் சங்க கரைச்சிக்கிளையின் உதவியுடன் வைத்தியசாலை விடுதி இலக்கம் 4 (A)யிற்குரிய மலசல கூடம் சீர் செய்தமை.

32. யுனிசெவ் நிறுவன ஆதரவுடன் 30 தாதிய உதவியாளர்களுக்கு முதலாம் கட்ட பயிற்சி முடிவுறுத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. தொடர்ந்து அவர்களுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சியும் முடிவுறுத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டு அவர்கள் ஒப்பந்த அடிப்படை யில் வேலைகளில் அமர்த்தப்பட்டு ஊக்குவிப்பு கொடுப்பனவும் வழங்கி வருகிறது.

33. மின் விநியோகத்தை சீர் செய்யும் வகையில் உழவு இயந்திரம், டைனமோ, கியர்பொக்ஸ் என்பன கொள்வனவு செய்யப்பட்டு வைத்தியசாலையினுடைய அனைத்து செயற்பாடுகளுக் கும் வைத்தியசாலை ஊழியர்களின் விடுதிகளுக்கும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, பிராந்திய மருந்தகம், பி.மா.சு.சே.ப. பணிமனை ஊழியர்களின் விடுதி களுக்கும் சீரான மின் விநியோகம் கிடைக்க ஆவன செய்யப்பட்டது.

34. திரவப்பணத் தட்டுப்பாடு ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் ஊழியர்கட்கான கொடுப்பனவு திரவப்பணமாக வழங்க தமிழீழ வைப்பகத்தின் ஊடாகவும் மக்கள் வங்கி கிளிநொச்சி ஊடாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

35. தென் பகுதிக்கான போக்குவரத்து தடைப்பட்டிருந்த காலப்பகுதியில் அக்கராயன் ப.நோ.கூ.சங்கத்தின் உதவியுடன் ஊழியர்களுக்கு கடனாக பொருட்கள் பெற்று கொடுக்கப் பட்டதுடன் தொண்டர்களுக்கு இலவசமாக உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

36. வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் வறிய நோயாளர்களின் நலன் கருதி அவர்கட்கான பால்மா வகையினை கியுடெக் நிறுவனத்திடமிருந்தும் உதவி அரசாங்க அதிபர் கரைச்சி பிரிவிடமிருந்தும் பெற்று வழங்கப்பட்டது.

37. புத்தாயிரமாம் ஆண்டில் வைத்தியசாலை ஊழியர்களின் சேவை நலன் பாராட்டும் முகமாகவும் இலவச இரத்ததானம் வழங்கியோரை கௌரவிக்கும் முகமாகவும் 20.01.2000 திகதி பாராட்டு வைபவம் ஒன்று நடத்தப்பட்டது.

38. வைத்திய அதிகாரி ஒருவருக்கு விடுதி ஒன்று ஒழுங்மைப்பு செய்து கொடுக்கப்பட்டது.

39. வைத்தியசாலையில் சிகிச்சை நிலையங்கள் பார்வையிடும் வைத்தியர்களுக்கு ஒவ்வொரு சிகிச்சை நிலையத்திற்கும் ரூபா 250 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

40. வைத்தியசாலை எல்லைக்குள் இருக்கின்ற சிகிச்சை நிலைய மண்டபங்கள் வைத்தியசாலை ஊழியர்களின் விடுதிகள் என்பன ஒரு பகுதி அரச நிதி உதவியுடனும் அபிவிருத்திச் சபையின் உதவியுடனும் வேய்ந்து கொடுக்கப்பட்டது.

41. கிளி/மாவட்ட வைத்தியசாலையில் சேவை புரிந்து ஓய்வு பெற்றுச் செல்கின்ற திருமதி மரியாம்பிள்ளை அவர்களுக்கு விருந்துபசார வைபவம் நடைபெற்றது.

42. தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த நோயாளர்கட்கு உதவி அரசாங்க அதிபர் கியூடெக் நிறுவனம், போருட் நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் உடுபுடைவை, பால்மா என்பன பெற்று வழங்கப்பட்டன.

43. வைத்தியசாலையில் நீர் விநியோகம், மின் விநியோகம் ஆகியவை சடுதியான இயந்திரக் கோளாறுகள் காரணமாகத் தடைப்பட்ட வேளைகளில் உடன் திருத்த வேலைகளும், மாற்று ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்பட்டது.

44. வைத்தியசாலையில் கடமை புரிந்து நோய் காரணமாக மரணம் அடைந்த திரு.சி.குருநாதன் என்பவரின் மரணச் செலவுக்கு அவரின் குடும்பத்தினரிடம் ரூபா 5000 மரணச் செலவாக வழங்கப்பட்டது.

45. சத்திர சிகிச்சை கூடத்திற்கான கூலர், மின்விறிசி என்பன கொள்வனவு செய்து வழங்கப்பட்டன.

46. கிளி/மாவட்ட வைத்தியசாலை தாதிய விடுதிக்கான சமையல் கூடம் புதிதாகத் திருத்திக் கொடுக்கப்பட்டது.

47. புதிதாக உள்ளகப் பயிற்சி முடித்து இம்மாவட்டத்திற்கு வருகை தந்த வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்கட்கு, வரவேற்பு நிகழ்வும் பல்வைத்திய நிபுணர் செல்வி செ.புவனேஸ் வரி அவர்கட்கு சேவை நலன் பாராட்டு விழாவும் 21.02.2001 அன்று நடைபெற்றது.

48. கண்ணொளி நிதியம் 21.02.2001 இல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 102 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

49. கிளி/மாவட்ட வைத்திய அதிகாரி அவர்கள் விடுப்பில் நின்ற காலப்பபகுதியில் உருத்திரபுரம் நோயாளர்களைப் பார்வையிடுகின்ற வைத்தியர்கட்கு ஒரு தரிசிப்பிற்கு ரூபா 250 வீதம் 6 தரிசிப்பிற்கும் ரூபா 1500 வழங்கப்பட்டது.

50. கிளி/மாவட்ட வைத்தியசாலை ஊழியர்களுக்கு உளவளத் துணையாளர்களின் கருத்தரங்கு களும், பட்டறைகளும் (உளவளத் துணை சம்மந்தமான) மூன்று நாட்கள் நடத்தப்பட்டது.

51. கிளி/மாவட்ட வைத்தியசாலை தொண்டர்களுக்கான கருத்தரங்குகளுக்காகவும், வைத்திய

சாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்கட்கு நோய் சம்மந்தமான வீடியோ படக் காட்சி காண்பிப்பதற்காகவும் புதியதொரு தொலைக்காட்சிப் பெட்டியொன்றும், ஒளிப் பதிவுக் கருவி ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டது.

52. கண் பார்வை வழங்கும் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட அன்பளிப்புக்களையும், கிளி/றொட்டறி கழகத்தினதும் உதவிகளைப் பெற்று 23 பேருக்கு முதற்கட்ட கற்றாக் சத்திர சிகிச்சை வழங்கியது.

53. கட்டம் ஒன்று கிளி/மாவட்ட வைத்தியசாலை திறப்பு விழாச் செலவினை சபையே பொறுப்பு ஏற்று அதற்குரிய ஒழுங்கமைப்புகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

54. கட்டம் ஒன்று கிளி/மாவட்ட வைத்தியசாலையினுடைய வைத்தியக் கலாநிதி சிதம்பரநாதன் அவர்களுக்கு ஆரம்பத்தில் கொடுப்பனவு வழங்கப்படாததன் காரணத்தால் சபையிலிருந்து ரூபா 10,000 கடனாக வழங்கப்பட்டது.

55. வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு இலவசக் கண்ணாடி வழங்கப்பட்டது.

56. கிளி/மாவட்ட வைத்தியசாலையில் நீண்ட காலம் கடமை புரிந்து ஓய்வு பெற்றுச் செல்கின்ற திருமதி அருளானந்தம், திரு கதிர்காமன் அவர்களுக்கு விருந்துபசார வைபவம் நடாத்தப் பட்டது.

57. கிளி/மாவட்ட வைத்தியசாலையில் கடமை புரிந்து இடம் மாறிச் செல்கின்ற திரு சிலுவைதாசன் என்பவருக்கும்,தாதிய உத்தியோகத்தர் அன்ரன் அவர்கட்கும் பிரிந்துபசார நிகழ்வு நடத்தப் பட்டது.

58. போரூட் நிதியுதவியுடன் விடுதி இலக்கம் 04 B இல் உள்ள மூன்று மலசல கூடங்களும் ஒரு சல கூடமும் புனரமைப்பு செய்து கொடுக்கப்பட்டது.

59. போரூட் நிதியுதவியுடன் வைத்தியசாலையின் நீர்த் தொட்டிகள் புனரமைப்பு செய்யப்பட்டன.

60. வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியர்ஒருவரின் மலசலகூடம் திருத்தம் செய்யப் பட்டது.

61. மாவீரர் நினைவுத் தூபி கட்டுவதற்கு ஒரு பை சீமெந்து வழங்கப்பட்டது.

62. கிளி/மாவட்ட வைத்தியசாலையின் பாவனைக்கென குளுக்கோ மீற்றர் வழங்கப்பட்டது.

63. ஒக்ஸ்பாம் நிறுவன உதவியுடன் விடுதி இலக்கம் 4 A யின் மலசல கூடங்கள் புனரமைப்பு செய்யப்பட்டன.

64. ஒக்ஸ்பாம் நிறுவன உதவியுடன் பாவனையிலிருந்த சமையலறை புனரமைக்கப்பட்டது.

65. புதிய நிரந்தர சமையலறை முற்றாக செய்து முடிக்கப்பட்டது.

66. வெளிநோயாளர் பிரிவிற்கான இணைப்பு நடைபாதை அமைக்கப்பட்டு வருவதுடன் புதிய பற்சிகிச்சைக் கூடம், ஆய்வு கூடம், மருந்தகம் என்பவற்றையும் அவசர சிகிச்சை பிரிவையும் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

19.03.1997 தொடக்கம் 17.05.1997 வரை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள்

01. வைத்திய கலாநிதி ச.விக்கினேஸ்வரன் மாவட்ட வைத்திய அதிகாரி
02. திரு. மு. கந்தசாமி பதில் சுகாதார வைத்திய அதிகாரி
03. திரு.வே.சுப்பிரமணியம் தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
04. திரு.நா.நமசிவாயம் காணி உத்தியோகத்தர் கரைச்சி

17.05.1997 தொடக்கம் 24.05.1998 வரை செயற்குழு உறுப்பினர்கள்

தலைவர் வைத்தியக் கலாநிதி ச.விக்கினேஸ்வரன் மாவட்ட வைத்திய அதிகாரி

செயலாளர் திரு.சி.பவானந்தன் கிராமசேவை அலுவலர் அக்கராயன்

பொருளாளர் திரு.பொன் விநாயக மூர்த்தி இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி

**செயற்குழு அங்கத்தவர்கள்**

01. திரு.மு.கந்தசாமி பதில் சுகாதார வைத்திய அதிகாரி
02. திரு.சதா தனபாலசிங்கம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
03 திரு.அ.அருட் செல்வன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம்
04. திரு.கு.இராமச்சந்திரன் வர்த்தக சங்கம் அக்கராயன்
05. திரு.கி.நவரட்னராஜா வர்த்தக சங்கம் கந்தபுரம்
06. திரு.நா.நமசிவாயம் கரைச்சி பிரதேச செயலகம்
07. திரு.ச.சந்திரவர்மன் நோயாளர் நலன்புரிச் சங்கம்
08 திரு.ச.கிருஸ்ணபிள்ளை அக்கராயன் ப.நோ.கூ.சங்கம்
09. திருமதி.வ.மரியாம்பிள்ளை மாவட்ட வைத்தியசாலைப் பணியாளர்

24.05.1998 தொடக்கம் 28.6.1999 வரை செயற்குழு உறுப்பினர்கள்

தலைவர் வைத்தியக் கலாநிதி ச.விக்கினேஸ்வரன் மாவட்ட வைத்திய அதிகாரி

செயலாளர் திரு.சி.பவானந்தன் கிராம சேவை அலுவலர் அக்கராயன்

பொருளாளர திரு.பொன் விநாயமூர்த்தி இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி

**செயற்குழு உறுப்பினர்**

01. திரு.வே. சுப்பிரமணியம் தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
02. திரு.க.சந்திரவர்மன் நோயாளர் நலன்புரிச் சங்கம்
03. திருமதி.வ. மரியாம் பிள்ளை மாவட்ட வைத்தியசாலைப் பணியாளர்
04. திரு.இ.கணேசபிள்ளை கியூடெக் நிறுவனம்
05. திரு.அ.அருட்செல்வன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம்
06. திரு.சூ.சிறில் கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியம்
07. திரு.மு.கந்தசாமி பதில் சுகாதார வைத்திய அதிகாரி
08. திரு.கு.இராமச்சந்திரன் வர்த்தக சங்கம் அக்கராயன்
09. திரு.கி.நவரட்ணராஜா வர்த்தக சங்கம் கந்தபுரம்
10. திரு.ம.பத்மநாதன் கல்வித் திணைக்களம்
11. திரு.அ.கோபாலச்சந்திரநாயகன் இலங்கை வங்கி
12. திரு.கா.சாந்தலிங்கம் போரூட் நிறுவனம்
13. திரு.கு.பகீரதன் பொது மக்கள் சார்பு
14. திரு.ச.கிருஸ்ணபிள்ளை அக்கராயன் ப.நோ.கூ.சங்கம்



குருதிக் கொடையளித்தோர் கௌரவிப்பு 2000.




கணபதி நினைவு மண்டபம்



28.06.1999 தொடக்கம் 23.10.2000 வரை செயற்குழு உறுப்பினர்

தலைவர்: வைத்தியக் கலாநிதி ச.விக்கினேஸ்வரன் மாவட்ட வைத்திய அதிகாரி

செயலாளர்: திரு.சி.பவானந்தன் கிராமசேவை அலுவலகர் அக்கராயன்

பொருளாளர்: திரு. பொன் விநாயகமூர்த்தி இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் கிளிநொச்சி

உபதலைவர: வைத்தியக் கலாநிதி எஸ்.எவ்.அருள்நேசன் வைத்தியர் அக்கராயன்குளம்

உபசெயலாளர்: திரு.ந.தயாளன் மாவட்ட வைத்தியசாலை

01. திரு.ச.கிருஸ்ணபிள்ளை அக்கராயன் ப.நோ.கூ.சங்கம்

02. திரு.கு.இராமச்சந்திரன் வர்த்தக சங்கம் அக்கராயன்குளம்

03. வைத்தியக் கலாநிதி சுயந்தன் சுகாதார வைத்திய அதிகாரி

04. திரு.மு.கந்தசாமி தலைவர் யோகர்சுவாமிகள் திருவடி நிலையம்

05. திரு.கா.சாந்தலிங்கம் போரூட் நிறுவனம்

06. திருமதி.ம.மரியாம்பிள்ளை தாதி மாவட்ட வைத்தியசாலை

07. திரு.சி.விபுலேந்திரன் இணைச் செயலாளர் தமிழர் புனர் வாழ்வுக்கழகம்

08. திரு.இ.கணேசபிள்ளை இணைப்பாளர் கியூடெக் நிறுவனம்

09. திரு.சோ சிறில் தலைவர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்

10. திரு.கு.பகீரதன் வர்த்தக சங்கம் அக்கராயன்

11. திரு.சி.நவரட்ணராஜா வரத்தக சங்கம் ஸ்கந்தபுரம்

12. திரு.எஸ்சீ.எஸ்.சிதம்பரநாதன் தமிழர் புனர் வாழ்வுக்கழகம்

13. திரு.சதா தனபாலசிங்கம் நிர்வாக செயலாளர் தமிழர் புனர் வாழ்வுக்கழகம்

14. திரு.சு.சபாரத்தினம் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்

15. திரு.அ.கனகரத்தினம் அதிபர் பாரதி வித்தியாலயம்

16. திரு.சி.பாலசுந்தரம் மேற்பார்வையாளர் மாவட்ட வைத்தியசாலை

**23.10.2000 தொடக்கம் 11.11.2001 வரை செயற்குழு உறுப்பினர்கள்**

**தலைவர்** வைத்தியக் கலாநிதி ச.விக்கினேஸ்வரன் மாவட்ட வைத்திய அதிகாரி

**உபதலைவர** வைத்தியக் கலாநிதி ச.பி.அருள்நேசன் வைத்தியசாலை அக்கராயன்குளம்

**செயலாளர** திரு.சி.பவானந்தன் கிராம சேவை அலுவலகர் அக்கராயன்

**உப செயலாளர** திரு.கு.இராமச்சந்திரன் வர்த்தக சங்கம் அக்கராயன்

**பொருளாளர்** திரு.பொன் விநாயமூரத்தி இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி

**செயற்குழு உறுப்பினர்கள்**

01. திரு.ச.கிருஸ்ணபிள்ளை தலைவர் அக்கராயன் ப.நோ.கூ.சங்கம்
02. திரு.சி.பாலசுந்தரம் மேற்பார்வையாளர் மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சி
03. திரு.கி.நவரட்ணராா வர்த்தக சங்கம் கந்தபுரம்
04. திரு.சு.சபாநாதன் தமிழர் புனர் வாழ்வுக்கழகம்
05. திரு.ப.அரியரட்ணம் கல்விப் பணிப்பாளர்
06. வைத்தியக் கலாநிதி திரு.கே.சுதாகரன் மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சி
07. திரு.வி.சின்னத்தம்பி முருகன் ஆலயம் ஸ்கந்தபுரம்
08. திரு.எஸ்.சீ.எஸ். சிதம்பரநாதன் அக்கராயன்
09. திரு.ந.செல்வநாதன் வர்த்தக சங்கம்
10. திரு.கு.பகீரதன் வர்த்தக சங்கம் அக்கராயன்
11. திரு.மு.கந்தசாமி முதியோர் இல்லம்
12. திரு.சூ.சிறில் கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியம்
13. திரு.செ.தம்பையா உப தபாலகம்
14. திரு.அ.கனகரத்தினம் அதிபர்
15. திரு.சி.கந்தசாமி கந்தபுரம்
16. வைத்தியக கலாநிதி கே.சுஜந்தன் சுகாதார வைத்திய அதிகாரி
17. டாக்டர் ச.முருகானந்தன் வைத்தியசாலை வன்னேரிக்குளம்
18. திருமதி.சி.மகேந்திரராஜா பிரதம தாதி
19. திரு.ஞா.அந்தோனிப்பிள்ளை சமாதான நீதவான்




கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையினர்
நடாத்தும் வரவேற்புபசாரமும் சேவைநலன்பாராட்டும்





ம் ஆண்டு நிறைவு விழாவில் அமரர். மு. கந்தசாமி அவர்கள்



தொண்டர் பயிற்சி நெறி ஆரம்பவிழா

கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சங்க செயற்குழு 11.11.2001

தலைவர்: வைத்தியக் கலாநிதி ச.விக்கினேஸ்வரன் மாவட்ட வைத்திய அதிகாரி

உபதலைவர்: வைத்தியக் கலாநிதி ச.பி.அருள்நேசன்

செயலாளர்: திரு.சி.பவானந்தன் கிராமசேவை அலுவலர் அக்கராயன்

உபசெயலாளர்: திரு.கொ.இராமச்சந்திரன் வர்த்தக சங்கம்

பொருளாளர்: திரு.பொன் விநாயகமூர்த்தி இலங்கை செஞ்சிலுவைச் சங்க செயலாளர்.

01. திரு.வி.சின்னத்தம்பி தலைவர் முருகன் ஆலயம் ஸ்கந்தபுரம்

02. திரு.சி.நவரட்ணராஜா வர்த்தக சங்கம் ஸகந்தபுரம்

03. திரு.இ.கணேசபிள்ளை இணைப்பாளர் கியூடெக் நிறுவனம்

04. டாக்டர் ச.முருகானந்தம் வன்னேரிகுளம்

05. திரு.ச.கிருஸ்ணபிள்ளை அக்கராயன்

06. திரு.சூ.சிறில் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்

07. திரு.கே.பி.ரெஜி இணைச் செயலாளர் தமிழர் புனர் வாழ்வுக்கழகம்

08. திரு.அன்பு பிரதேச இணைப்பாளர் தமிழர் புனர்வாழ்வுக்கழகம்

09. திரு.இனியவன் பிரதேச இபை்பாளர் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

10. திரு.கேசவன் பிரதேச இணைப்பாளர் தமிழர் புனர் வாழ்வுக் கழகம்

கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையின் பணியாளர்கள்

எழுதுவினைஞர் திரு.கந்தசாமி சௌந்தர்ராஜன்

தட்டெழுத்தாளர் செல்வி தேவராசா கருணானந்தி

உதவியாளர் திரு கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணானந்தா

# உதவும் கரங்களை எதிர்பார்த்து.....

"காலத்ததால் செய்த உதவி சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" வளம் கொழிக்கும் கிளிநொச்சி மாநகரில் மக்கள் தேவை கருதி இயங்கி வந்த கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலை சத்ஜெய இராணுவ நடவடிக் கைக்குப் பின் சொல்லொணாத் துன்ப ங்களைத் தாங்கி அக்கராயன் வைத்தியசாலையிலிருந்த வசதிகளுடன் அவ் வைத்தியசாலையுடன் இணைந்து 1996ம் ஆண்டு ஆவணி மாதம் தொடக்கம் செயற்பட்டு வந்தது. இக் காலப்பகுதியில் வைத்தியசாலையின் பல முன்னேற்ற நடவடிக்கைகட்கு கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையானது பல முனைப்பு வழிகளிலும் அயராது பாடுபட்டு செயலாற்றி வந்தது.

இக் காலப்பகுதியில் வைத்தியசாலையின் புதிய கட்டட வேலைகள், பழைய கட்டடங்கள் திருத்தம் என்பவற்றை செய்து வந்த போது திடீரென கொலரா நோயின் தாக்கம் பரவலாக அதிகரிக்கப்பட்டமையால் நோயாளர்களை தங்க விடுவதற்கான விசேட கொலரா விடுதியை பலரின் ஒத்துழைப்புக்களையும் பெற்று மிகவும் துரித கதியில் சிறப்பான முறையில் அமைத்து நோயாளர் தேவைக்கு தக்க தருணத்தில் உதவியது. இவற்றுடன் தாதியர்கட்கான விடுதிகள், மின் பிறப்பாக்கி கொள்வனவு போன்ற வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது. பல் வைத்தியரே இல்லாத இடத்து பல் வைத்தியரைக் கொணர்ந்து அவருக்கான விடுதி வசதியை அபிவிருத்திச் சபையால் விசேடமாக ஏற்பாடு செய்து கொடுத்து மக்களுக்கு அரும் பணியாற்றியது. கண் ஒளி எனும் திட்டம் மூலம் பலரிடம் இருந்தும் அன்பளிப்பு நிதிகளைப் பெற்று 100 இற்கு மேற்பட்டோரிற்கு வவுனியாவிற்கப்பால் அனுப்பி கற்றாக் சிகிச்சை வசதியை ஏற்படுத்திக் கொடுத்தது. யுனிசெவ் நிறுவன உதவியுடன் உதவித் தாதிகள் பயிற்சி கியூடெக் நிறுவன உதவியுடன் தொண்டர் தாதியர்கட்கான கொடுப்பனவு உதவிகள் வறுமைக்கோடிற்குட்பட்ட குழந்தைகட்கான பால்மா போன்வற்றையும் ஏற்பாடு செய்து கொடுத்தது. கிளினிக் பார்வையிடும் வைத்திய ஊக்குவிப்பு போன்றவற்றையும் ஏற்படுத்திக் கொடுத்ததுடன் மேலதிக சிகிச்சைக்காக வெளி மாவட்டத்திற்கு செல்ல வேண்டிய வறுமைப்பட்ட நோயாளர்கட்கான உதவிக் கொடுப்பனவு வைத்தியசாலை ஊழியர்கட்கான இடர்காலக் கொடுப்பனவு, ஓய்வு பெற்று மாற்றலாகிச் சென்ற வைத்தியர், ஊழியர்கட்கான பாராட்டு நிகழ்வுகள் போன்ற இன்னோரன்ன தேவைகளையும் பல சிரமங்களிற்கும் அரசின் அசமந்தப் போக்கிற்கும் மத்தியில் மாவட்ட மக்களின் நலன் கருதி நிறைவேற்றிக் கொடுத்துள்ளமையை இட்டு நெஞ்சம் நிறைவுறுகிறது. இவ்வனைத்து செயற்பாடுகளிற்கும் ஆக்கமும் ஊக்கமும் அன்பளிப்பு உதவிகளையும் தருணமறிந்து கையளித்த குறிப்பிட்டுக் கூறமுடியாத அனைத்து அன்புள்ளங்கட்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம். மேலும் இவ் வைத்தியசாலையின் தேவைகளையும் மென்மேலும் எடுத்துச் செல்லவும் அனைத்து உதவிக் கரங்களையும் அன்புடன் எதிர்பார்த்து உதவுவார்கள் என்ற நம்பிக்கையுடன் எமது சேவையை கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையினரான நாம் தொடர்வதில் மகிழ்வுறுகின்றோம்.

**பொன் விநாயக மூர்த்தி**
பெருளாளர்
கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை
கிளிநொச்சி மாவட்டம்






'கண்ஒளி' நிதிய அங்குரார்ப்பணம்- 2001


கணபதி நினைவு மண்டபம் திறப்புவிழா-2000

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டின் நிறைவில் வாழ்த்தி நிற்கின்றோம்.

# சிவனருட் செல்வன் அரிசி ஆலை

(சம்மந்தன் அரிசி ஆலை)

தரமான அரிசி (நாடு), (சி.பச்சை), புரியாணிஉணவைத் தயாரிக்க உகந்த
சம்பா அரிசி மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
கூடிய விலையில் நெல் கொள்வனவு, குறைந்த செலவில் நெல்குற்றவும்,
மிளகாய்த்தூள், மாவகைகள் அரைக்கவும்



**S**
**S.R.M**
**M**

நாடவேண்டிய இடம்

**சிவனருட்செல்வன் அரிசி ஆலை**

**பிரதான வீதி, இல, 93 ஸ்கந்தபுரம்.**

ஐந்து ஆண்டுகள் அரும்பணி ஆற்றி ஆறாவது ஆண்டில்
காலடி பதிக்கும் கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார
அபிவிருத்திச்சபையின் பணி மேலும் சிறப்புற.....
எமது நல்லாசிகள்



**முகாமையாளர், ஊழியர்கள்,**
**இலங்கை வங்கி,**
**கிளிநொச்சி.**



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக் கட்டடம் 01 ஆரம்ப நாள்




தாதிய உதவியாளர் பயிற்சி நெறி- சான்றிதழ் வழங்கும் வைபவம்



[illegible] 2002

கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை 31.12.2001 இல் ஐந்தொகை

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா | | 41, 000.00 | நிலையன சொத்து | 555, 410.00 |
| சேமம் ஒதுக்கீடு | | 76, 035.51 | முற்பணங்கள் | 189, 207.50 |
| சில்லறைச் சென்மதி | | 32, 500.00 | கடன்கள் | 38, 000.00 |
| கிளி அபிவிருத்தி அகதிகள் | | | | |
| புனர்வாழ்வுக்கழகம் சென்மதி | | 41, 250.00 | வங்கி சேமம் | 24,037.60 |
| தமிழீழ நிர்வாக சேவை சென்மதி | | 100, 000.00 | ச.ப.அபிவிருத்தி வங்கி | 75.00 |
| ச.பொ.அபிவிருத்தி வங்கி சென்மதி | | 200, 000.00 | வைப்பக மீதி | 4, 400.46 |
| | | | வங்கி இருப்பு | 99, 157.76 |
| செலவை மிஞ்சிய வரவு | | | கையிருப்பு | 98, 119.54 |
| சென்ற வருடம் | 410, 834.51 | | | |
| இவ்வருடம் | 106, 788.54 | | | |
| | | 517, 623.50 | | |
| | | 1008, 408.56 | | 1008, 408.56 |

## மூளை மலேரியா

மூளைமலேரியா மூளையைக் குழப்ப
முதியவர் சிறியவர் உடல் வலு குறைக்க
பரவிடும் காச்சலை அடியுடன் தறிக்க
அறிவுரை வழங்கும் வைத்தியர் அணுக
பல வித மருந்துகள் முறையுடன் கொடுக்க
போடும் முறைமையைத் தவறியே எடுக்க
நடந்து திரிந்தவர் படுக்கையில் கிடப்பர்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

## கறுப்பு றோட்டாம்

கறுப்பு றோட்டுக்கண்டு கனகாலம்
ஆகிப்போச்சு
செந்தமிழர் என்பதனால்
சிகப்பாக மாறியதோ
நாயின் எச்சங்கள் நடுறோட்டில் நசிந்திட
வெயிலில் வெந்து புழுதியாக
வாகனங்கள் எழுப்பிவிடும் புழுதியினை
(சு)வாசிக்கும் எங்களுக்கு என்ன வரும்.?

# மக்கள் மாமணி அமரர் கந்தசாமி ஐயாவும் கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையும்

கிளிநொச்சி மாவட்டம், யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு புறக்கணிக்கப்பட்ட பகுதியாக இருந்த காலகட்டத்தில் இப்பகுதி மக்களின் மருத்தவ தேவைகளும் புறக்கணிக்கப்பட்டிருந்தன. வைத்தியர்கள், மற்றும் சுகாதார திணைக்களத்தின் அதிகாரிகளும், அலுவலர்களும் இப்பகுதிக்கு சேவையாற்ற வரப்பின்னடித்துக் கொண்டிருந்தார்கள்.

புதிய மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் பிர கடனப் படுத்தப் பட்ட பின்னரும் மக்களின் சுகாதாரத் தேவைகளில் முன்னேற்றம் காண முடியவில்லை. அவ்வப்போது சில மருத்துவர்கள் வந்தாலும், விரை விலேயே மாற்றம் பெறறு செ ன்று விடும்



நிலைமையே இருந்தது.

மாவட்டத்தின் வைத்திய சேவைகள் பதிவு மருத்துவர்கள், உதவி மருத்துவர்கள் பணியுடனேயே பெரும்பாலும் நடந்து வந்தது.

யானைகளுக்கும், பாம்புகளுக்கும், நுளம்புகளுக்கும் பயந்து வன்னி மண்ணைப் புறக்கணித்தவர்கள் ஒட்டுமொத்தமாக இங்கே தஞ்சம் கோரி வந்த இடம்பெயர்வின் பின் சுகாதார சேவைகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியது. ஐந்து இலட்சம் மக்கள் ஒரேயடியாக இங்கு வந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் குடியேறிய போது இங்கே விரல்விட்டு எண்ணக்கூடிய வைத்தியர்களே பணியிலிருந்தனர். மாவட்ட வைத்தியசாலை இடம்பெயர்ந்து அக்கராயன் குளத்திற்கு வந்த வேளையில் டாக்டர் விக்கினேஸ்வரன் பதிவு வைத்தியர்களான டாக்டர் அருள்நேசன் தம்பதியினரும், இவர்களோடு வந்து இணைந்து கொண்ட டாக்டர் திருச்சிற்றம்பலம், டாக்டர் திருமதி முத்துத்தம்பி முதலானோர் மாத்திரமே மாவட்டத்தின் ஒரேயொரு வைத்திய சாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இதர ஊழியர்களும் பற்றாக்குறை, மருந்துக்கும் தடை. மாவட்டத்தின் இதர பகுதிகளிலும் வைத்திய சேவை ஸ்தம்பிதமடையும் நிலை கிளிநொச்சி கிழக்குப் பகுதியில் டாக்டர் திருமதி. வீரபத்திரப்பிள்ளை யும் மேற்கே முழங்காவில் டாக்டர் சீவரட்ணமும், வேரவில் டாக்டர் சிவபாதசுந்தரமும், வன்னேரிக்குளத் தில் டாக்டர் முருகானந்தனும் பகல் என்றும் இரவென்றும் பாராது அயராது உழைத்து பிற ஊழியர் களுடனும் இணைந்து சிகிச்சைப் பிரிவைக் கவனித்து வந்தனர்.

இடப்பெயர்வினால் சுகாதார சேவை களுக்கு சில இடம்பெயர்ந்த எம்.பி.பி. எஸ். வைத்தியர்கள் கிடைத்தமை ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் வைத் திய சேவைக்கு மேலும் உரமூட்டி யது.

டாக்டர் சுதாகர்,சுஜந்தன் டாக்டர் தர்மேந்திரா இவர்களுடன் இன்னும் சில மருத்துவ மாணவர்களும் பணி யில் இணைந்து கொண்டு பெரு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அளப்பரிய சேவை ஆற்றி வருகின் றனர்.

அப்போதைய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சிவகுருவுக்கு சிகிச்சைப் பிரிவிலும் பார்க்க வருமுன் காப்புப்பிரிவு பெரும் சவாலாக அமைந்தது.அப்பிரிவில் பணியாற்றி ய அமரர் கந்தசாமி ஐயா அவர்க ளின் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத, தன்னலம் கருதாத சேவை, வரு முன் காப்புப்பிரிவை ஊழியர்

களினதும், தொண்டர்களினதும் உதவியுடன் சிறப்பாகப் பணி செய்து மிளிர வைத்தது.

இருகுழல் துப்பாக்கியின் இரு துவாரங்கள் போல் மாவட்ட வைத்தியர் விக்கினேஸ்வரனும், சுகாதார வைத்தியர் கந்தசாமியும் பணியாற்றியதை மாவட்ட மக்கள் பெரிதும் போற்றினர்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் தற்போதைய சமூக சுகாதார அபிவிருத்திச்சபை, மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபையாக ஆரம்பிக்கப்பட்ட போது மாவட்ட வைத்தியருக்கு ஆதரவாக பல நல்லிதயம் கொண்ட மக்கள் கை கெடுத்தனர். அன்று முதல் இச் சபையில் இணைந்த கந்தசாமி ஐயா அவர்கள் இறுதிவரை இச் சபையின் ஆலோசகராகவும், பங்காளியாகவும் இருந்து மாவட்ட வைத்தியரின் கைகளைப் பலப்படுத்தினார். மாவட்ட வைத்தியர் மேற்கொண்ட சகல பணிகளிலும் அவரின் பங்களிப்பும் இருந்ததாகக் கூறினால் அது மிகை ஆகாது.

இம் மாவட்டத்திலே கொலரா அபாயம் ஏற்பட்ட போது அதை விரட்ட சுகாதார திணைக்களம் மேற்கொண்ட பணியில் டாக்டர் விக்கினேஸ்வரன் டாக்டர் தர்மேந்திரா ஆகியோருடன் இணைந்து அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இலங்கையின் சிறந்த பெண்மணியாகத் தேசிய விருது பெற்ற குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி பசுபதிப்பிள்ளை யோகேஸ்வரி, கந்தசாமி ஐயாவைப் பற்றிக் குறிப்பிடும் போது கந்தசாமி ஐயா காட்டிய வழியில் பணிபுரிந்தமையினாலே இவ்விருது தனக்கு கிடைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபை ஆற்றிய அளப்பரிய பணிகளை பலரும் தமது கட்டுரைகளில் விபரித்துள்ளார்கள். ஒரு அரசு செய்ய வேண்டிய, ஒரு திணைக்களம் நிறைவேற்ற வேண்டிய பணிகளை ஒருசபை சாதித்துக்காட்டியிருக்கிறது என்றால் அதன் பெருமை சபையின் தலைமைக்கும் சபை உறுப்பினர்களுக்கும் கைகொடுத்து உதவிய மக்களையே சாரும்.

இச்சபை காலத்தின் தேவை கருதி சமூக, சுகாதார அபிவிருத்திச்சபை என்று பெயர் மாற்றப்பெற்ற பின்னர் இதன் பணிகள் மேலும் விரிவடைந்து ஆதரவற்றவர்களுக்கு பார்வை ஒளியூட்ட கண் ஒளித் திட்டம், வருமுன் காப்புப் பிரிவில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திட கலை நிகழ்வுகள், வீடியோ பதிவுகள் என்று சபையின் பணிகளைப் பட்டியல் இட்டுக்கொண்டு போகலாம்.

அண்மையில் தமிழ்ச்சங்கம் சமூகப்பணிகளுக் கான விருது வழங்கும் நோக்கில் ஒருவரைத் தெரிவு செய்ய ஆராய்ந்த போது இச்சபையின் உறுப்பினர்களில் நால்வருடைய பெயர்கள் முன்மொழியப்பட்டமையும் இறுதியில் இவ்விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவரும் இச் சபையின் உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆம், இவ்விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு "மக்கள் மாமணி" என்று கௌரவிக்கப்பட்டவர் அமரர் கந்தசாமி ஐயா தான். தனிமனிதன் விருட்சமாக முடியுமா? ஆம் என்று காட்டிச் சென்றவர் கந்தசாமி ஐயா. இன்னும் எம்முடன் காட்டி நிற்பவர் எமது சபையின் தலைவர் டாக்டர் விக்கினேஸ்வரன்.

இச்சபையின் குறிக்கோளான மக்களுக்கான சிறந்த சுகாதார சேவை கிடைக்க வேண்டுமானால் அரச மற்றும் அரச திணைக்கள உதவி கள் மட்டும் போதாது. இங்கு பணியாற்ற சேவைப்பற்று மிக்க வைத்தியர்களும் பிற உத்யோகத்தர்களும் முன்வர வேண்டும். குறிப்பாக இம் மண்ணின் மைந்தர்கள் டாக்டர் சத்தியமூர்த்தி, டாக்டர் தவராசா வழியிலே தொடர்ந்து இங்கு வரவேண்டும்.

இம்மாவட்டத்தில் இருபது வருடங்களாக பல நெருக்கடிகளுக்கு மத்தியில் பணியாற்றி வரும் என் பெரு விருப்பும் வேண்டுகோளும் இது தான், அப்போதுதான் கந்தசாமி ஐயாவின் கனவு நிறைவேறும். இச்சபையின் குறிக்கோளும் ஈடேறும். காலம் கனியுமா?..

வைத்திய கலாநிதி
ச. முருகானந்தன்

# நெஞ்சம் மறக்குமா?

**வைத்திய கலாநிதி**
**ச. விக்கினேஸ்வரன்**
மாவட்ட வைத்திய அதிகாரி
மாவட்ட வைத்தியசாலை
கிளிநொச்சி.



ஆதிக்கத்தின் பிடியில் சிக்காது எமது மண்ணில் இன்னல்கள் எது வந்த போதும் எதிர்கொண்டு வாழ்வோம் எனும் வீறாப்புடன் தான் எம்மக்கள் காலம் காலமாக கட்டிக்காத்த செல்வங்கள் எல்லாவற்றையும் விட்டு காலத்துக்குக்காலம் அன்னியபாதம் அழுத்தப்பட்ட இடங்களிலிருந்து நகர்ந்தார்கள். நகர்வுகள் 1995 இல் வலிகாமத்திலிருந்து முழுப்பெயர்வாக மாறியது. 1996 சித்திரையில் வன்னிக்கான இடப்பெயர்வானது. ஆதிக்க சக்திகட்கு அடிபணிய விரும்பாதவர்கள்; அரிய உயிரை அநியாயமாக கொடுக்க விரும்பாதவர்கள் என பலவகையானவர்களின் பெயர்வுகள் நடைபெற்று வன்னிக்கு வரும் போது இருந்தவர்களில் இரண்டாவது வகையினர் ஒரிரு மாதங் களில் மெல்ல மெல்ல தெற்கு நோக்கிப் பறந்தனர்.

**ஆ**திக்கத்திற்கு அடி பணிய மறுத்தவர், அடுத்தவன் கால்களில் விழ மறுத்தவர், தன்மானம் தான் உயிரெனக் கருதியவர் பலர் நின்றார். நிமிர்வோம் என நம்பினர். அலை ஒன்று எழுந்து வந்த போது அவர்கள் இறுமாப்பு அடைந்தனர். அவ்வேளை மாவட்ட வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய வைத்தியகலாநிதி சிவகுரு அவர்கள் நோய் வாய்ப்பட்டு சிகிச்சைக்கு சென்றார். எவருமே பொறுப்பேற்க முன்வராத நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைப் பதில் மாவட்ட வைத்திய அதிகாரி எனும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டு இருந்தது.

17.07.1996 அன்றைய நாளில் ஆத்திரமுற்ற படைகள் எறிந்த கணைகள் கிளிநொச்சி நகரின் பல பகுதிகளை துவம்சம் செய்து கொண்டிருக்கிறது. நான் அன்றைய மாலை நேரக் கடமைக்காக உதயநகரில் இருந்த எனது உறவினர் வீட்டிலிருந்து எனது துவிச் சக்கர வண்டியில் சீரான வேகத்தில் வைத்திய சாலையை நோக்கி நகர ஆரம்பிக்கிறேன். நகர்ப்புறமாக எறி கணைகள் வெடிக்கும் ஓசை கேட்கிறது. மக்கள் பதற்றத்துடன் வேகமாக பல்வேறு கத்தல்கள், கூக்குரல்களுடன் கண்டி வீதியால் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இடையிடையே காயம் அடைந்தவர்கள் சிலரையும் வாகனங்களில் கொண்டு செல்கின்றார்கள்.

எறிகணை வீச்சின் அகோரம் குறிப்பாக வைத்தியசாலையை சூழ அதிகமாக இருந்தது. இதனால் அங்கிருந்து நோயாளர், ஊழியர், பார்வையாளர்கள் என அனைவருமே சிதறி ஓடி வந்து கொண்டிருந்தனர். நான் பஸ் நிலையத்தை அண்மிக்கும் போது ஓர் எறிகணை புகையிரதப் பாதைப் பக்கமாக வீழ்ந்து வெடித்துப் புகை கிளம்புகிறது. தொடர்ந்து வேகமாக துவிச்சக்கர வண்டியை மிதித்து வைத்தியசாலை வாயிலை அடைகிறேன். வெளி நோயாளர் பிரிவு, நலன்புரிச்சங்கம், சிற்றுண்டிச்சாலை ஓரிடமும் சனநடமாட்டத்தை காணமுடியவில்லை. ஆனால் விடுதிப் புறமிருந்து முனகல் ஒலிகள் கேட்கின்றன. ஆண்கள் விடுதிக்கு ஓடுகின்றேன். அங்கே ஓர் கட்டிலில் ஓர் வயோதிபர் முனகிக்கொண்டு கிடக்கிறார். அருகில் போகிறேன், கட்டிலிலிருந்து குருதி வழிந்தோடி என் பாதணியை நனைப்பதை உணர்கிறேன். அவருக்கு வலது தொடையில் பாரிய காயம் என்பு முறிந்து குருதிப் பெருக்கெடுத்த வண்ணம் முனகிய வண்ணம் கிடக்கிறார். சற்றுத்தள்ளி ஓர் முதியவர்

தரையில் கிடக்கிறார். அவருக்கு தலையிலும் முதுகிலும் காயங்கள் ஆனால் அவரைவிட்டு அப்போது தான் உயிர் பிரிந்திருந்தது.

பெண்கள் விடுதியில். ஓர் பெண் முகம் முழுவதும் இரத்தத்தில் தோய்ந்த நிலையில் மூக்கு, வாய், கன்னம் என இனங்காண முடியாத கிழியல்களுடன் அந்தக் குருதிப் பரப்பில் தோய்ந்த இரு கண்கள் மட்டுமே தெரிய கத்தக்கூட முடியாமல் அனுங்குகிறார். அவருக்காக அவரருகே இரு பெண் பிள்ளைகள் நின்று கதறுகிறார்கள் உண்மையிலேயே மிகப்பயங்கரமான அவலக்காட்சி. இவர்களுக்கெல்லாம் ஏதாவது சிகிச்சை செய்யலாமா? எனப்பார்க்கிறேன். உதவிக்கு விபரம் தெரிந்த எவருமில்லை. சத்திரசிகிச்சை கூடத்தை நோக்கி ஒடுகிறேன். அப்போது மகப்பேற்று விடுதியிலிருந்து ஓர் பெண் ஊழியர் ஓடிவர தொடர்ந்து அப்போது எமது வைத்தியசாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த அருட்சகோதரி இமாகுலேற்றாவும், அவருடன் கடமையாற்றிய தாதியும் வந்தனர். பின்னால் இன்னுமொரு பெண் ஊழியரும் வருகிறார். அவர்களைக் கண்டதில் எனக்குள் உற்சாகம் பிறந்தது. "என்ன எல்லோரும் ஓடி விட்டார்கள் நீங்கள் மட்டும்..?.." என நான் கேட்க "ஒரு அம்மாலேபர் (Labour) இல் இருந்தவ விட்டிட்டு போக முடியவில்லை. இப்ப டெலிவர் (Deliver) பண்ணிற்றா" என்று அருட்சகோதரி சொன்னார். அச்சந்தர்ப்பத்தில் ஒரு ஆண் மகன் கூட இல்லாது ஓடிவிட ஐந்து இறப்புக்களையும் பத்துக்கு மேற்பட்டோர் காயப்படவும் கூடிய வகையில் வீசப்பட்ட எறிகணைகள் மத்தியில் தம்மை நம்பி வைத்தியசாலைக்கு வந்த அந்தப் பெண்மணியை அப்படியே விட்டுவிட்டு ஓடாது மகப்பேற்று அறையினுள் தம்முயிரை துச்சமென மதித்து ஓர் உயிரின் பிறப்புக்காக நான்கு பெண் உயிர்கள் நின்று போராடியது என்னுள் ஒரு வேகத்தை அத்தருணத்தில் தூண்டியது. இன் றும் அருட்சகோதரியின் அந்த கட மை உணர்வு எனக்கு வழிகாட்டி யாக இருக்கின்றது.

"வாட்களில் இருந்த நோயாளர் சிலர் காயப்பட்டு பார்க்க எவரும் இல்லாமல் கிடக்கினம் உடன எடுத்து ஏதாவது செய்யோணும்... ஒரு வயோதிபர் இறந்திட்டார்... தியேட்டரும் பூட்டிக்கிடக்கு திறப்பு ஆரிட்ட?..." என்று கேட்க ஓர் பெண் தொழிலாளி "எம்.எஸ்.எவ் காரரிட்ட" என்று கூறுகிறார். "அவையள் எங்க" ?...... "குவாட்டஸ் பக்கமாக ஓடினவ" ..... "பேசன்சை தியேட்டருக்கு கெண்டு போங்கோ நான் திறப்பை வாங்கிக்கொண்டு வாறன்" என்று கூறிவிட்டு விடுதிகளுக்கான பொது வாயில் வழியாக வந்து "பிள்ளையாரப்பா ஏன் இப்படி எல்லாம் நடக்குது இவர்களுக்கு எதுவும் பாரதூரமாக நடக்காது காப்பாற்று" என்று வேண்டிக்கொண்டு விடுதிகளுக்கு இடையேயான ஒற்றையடிப் பாதையால் எம்.எஸ்.எவ். (M.S.F) இனரின் விடுதியை அடைந்து கதவைத் தட்டுகிறேன். எவரையும் காணவில்லை. ஆனால் இடதுபுறம் கருங்காலிமரம் ஒன்றின் கீழ் இருந்த பதுங்கு குழியிலிருந்து சீட்டிகை ஒலி கேட்கிறது. அதன் அருகே செல்ல; ஓர் வெள்ளையர் வெளியே எட்டிப்பார்த்து "ஹலோ" என்கிறார். அப்போது தான் அவர்கள் வானொலிச் செய்திப் பரிமாற்றத்திற்காக சீட்டிகை ஒலிச் சங்கேதத்தை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது புரிந்தது. நான் திறப்பைத் தரும்படி கேட்டேன். உடனே தந்துவிட்டார்கள். நான் வேறு விபரங்கள் எதுவும் கதைக்க விரும்பாது விரைவாக சத்திரசிகிச்சைக் கூடத்துக்கு வர ஓரிரு ஆண் பார்வையாளர்கள், சுகாதாரத் தொழிலாளி ஒருவர் என சிலர் சத்திர சிகிச்சைக் கூடத்தினருகே வந்திருந்தனர். அவசரமாக சிகிச்சையளிக்க வேண்டிய நோயாளர் மூவர் ஸ்ரெச்சர்களில் சத்திர சிகிச்சைக்கூட வாசலில் கிடக்கிறார்கள். சுற்றுப்புறங்களில் காயப்பட்ட மேலும் நால்வர் பொது மக்களால் கொண்டு வரப்படுகிறார்கள். சத்திர சிகிச்சைக்கூடம் திறக்கப்பட்டு அனைவருக்கும் துரிதமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது.

முகத்தில் காயமடைந்த பெண்மணியின் பகுதிகள் இனங்காணப்பட்டு இணைத்து அப்பெண்ணுக்கு ஒரு மூக்கு, ஒரு வாய், இரு கண்கள் என சீர்செய்யப்படுகிறது. வயோதிபரின் காயத்துக்கு கட்டுப்போடப்பட்டு பீ.ஓ.பீ. போடப்படுகிறது. நெஞ்சில் காயம் அடைந்த ஓர் பெண்ணுக்கு குழாய்போட்டு நெஞ்சுக் குழியிலிருந்து குருதி வெளியேற்றப் படுகிறது. அங்கு நின்ற அனைவரும் பம்பரமாகச் சுழன்று வேலை செய்கிறார்கள். தேவையானவர்களுக்கு நாளம் மூலம் திரவம் ஏற்றப்படுகிறது. அவ்வேளை வவுனியா சென்ற அம்புலன்ஸ் வண்டி திரும்பி வந்துவிட நோயாளரை ஏற்றி மல்லாவி வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டு இறந்த வயோதிபரின் சடலத்தை பிரேத அறைக்கு கொண்டு செல்ல ஆவன செய்கிறேன். பின் அருட சகோதரி ஏனைய பெண் ஊழியர்களையும் அனுப்பி விட்டு இரவுக்கடமைக்கு வந்தவர்களிடம் விடுதிகளை சீர் செய்து வெளி நோயாளர் பிரிவில் மட்டும் அவசர சிகிச்சை செய்ய ஒழுங்கு செய்து விட்டு நிலைமையை அரச அதிபருக்கும், அரசியற்துறையினருக்கும் அறிவிக்கச் செல்கிறேன். பின் மீண்டும் வைத்தியசாலைக்கு வந்து நோயாளர் நலன்புரிச் சங்க வளாகத்தின் பின்புறமிருந்த எனது தங்கும் அறைக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொள்கிறேன். மறுநாள் வைத்தியசாலைக்கு வந்து வருகை தந்த ஊழியர்களைக் கொண்டு இரு விடுதிகளையும், வெளி நோயாளர் பிரிவையும் மட்டும் இயங்கும் வகையில் ஒழுங்கு செய்துவிட்டு அலுவலகத்துள் சென்று கோப்புக்களைப் பார்வையிடுகின்றேன். கடிதங்களுள் ஒன்று எனக்கு மாவட்ட வைத்திய அதிகாரி நியமனம் வழங்கப் படுவதாக தெரிவிக்கிறது. அதுவும் நான் வெடியோசை மத்தியில் உயிர் காக்கப் போராடிய 17.07.1996 இல் இருந்து என குறிப்பிடப்பட்டிருந்தது. "முறையான பதவி ஏற்பு"என என்னுள் நினைத்துக் கொள் கிறேன்.

# சுவடுகள்

மலையும், மழையும் சேர்ந்த அந்த அழகான இடம் தான் கண்டி மாநகர் இந்த மார்கழி மாதத்துக் குளிர் உடலை வாட்டினாலும் சூரியன் தெரிகின்ற அந்த இடைக்காலத்துப் பொழுது அற்புதமானதே.

சோமாவதி வீட்டுக்கருகில் இருக்கும் பச்சைப் புல்வெளியில் பிளாஸ்ரிக் கதிரையில் அமர்ந்த படி அந்த உயர்ந்த மரத்தில் அமர்ந்திருக்கும் சோடிக் கிளிகளை மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

சோமாவதியும், பியசேனாவும் நீண்ட காலம் காதலித்து திருமணம் செய்தவர்கள். பியசேனாவுக்கு பல காலமாய் ஒரு நிரந்தரத் தொழில் கிடைக்காமல் இருந்தது. இறுதியில் வேறு வழியில்லாமல் இராணுவத்தில் சேர்ந்தான். பியசேனாவிற்கோ, சோமா வதிக்கோ இந்தத் தொழில் பிடித்திருக்கவில்லை.

பியசேனா இராணுவப் பயிற்சியை பூர்த்தி செய்து யாழ்ப்பாணத் திற்கு அனுப்பி வைக்கப்பட்டான். இராணுவ வீரர்களோடு பழகப்பழக பியசேனாவுக்கும் குடிப் பழக்கமும் சிகரெட் புகைக்கும் பழக்கமும் தொற்றிக் கொண்டது. சோமாவதி இதை அறிந்து மிக்க கவலை கொண்டாள்.

பலாலியிலிருந்து யாழ் நகரை பிடிப்பதற்காக சிங்கள அரசு ரிவிரச எனும் படை நடவடிக்கையை மேற்கொண்டது. பியசேனாவும் இந்த நடவடிக்கையில் பங்கு பற்றினான். ரிவிரசவிற்குப் பிறகு பியசேனா எப்படியாவது இராணுவத்திலிருந்து விலக வேணும் என்ற முயற்சியில் இருந்தான்.

நவாலி தேவாலயத்தில் குண்டு போட்டு அகதியாய் தஞ்சம் புகுந்திருந்த மக்களை கொன்று குவித்த சம்பவத்தை தானும் ஒரு இராணுவ வீரனாய் இருந்தும் கூட அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. நாகர் கோயிலில் பாடசாலைச் சிறுவர் களைக் குறிவைத்து குண்டு போட்டு கொன்றதை சகிக்க முடியாமல் குடிப்பழக்கத்தை இன்னும் அதிகரித்துக் கொண்டான். பலாலியிலிருந்து அடிக்கிற ஒவ்வொரு செல்லும் குறைந்தது ஒரு அப்பாவித் தமிழனை இலக்கு வைப்பதை இராணுவ அதிகாரிகளின் கதைகளிலிருந்து தெரிந்து கொண்டான். யாழ் நகரை ஆக்கிரமித்து வீடுகளிலிருந்த தளபாடங்கள், நகைகள், விலையுயர்ந்த பொருட்களையெல்லாம் இராணுவ அதிகாரிகள் கப்பல் கப்பலாக தங்கட தங்கட வீடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

பியசேனா விளங்கிக் கொண்டான். தமிழ் மக்களின் வாழ்வு எப்படிப்பட்டது. எவ்வளவு பெரிய உழைப்பாளிகள் உழைத்து உழைத்து சேகரிச்சு சேகரிச்சு வைச்ச பொருட்களை, தங்கள் உரிமையான நிலத்தை விட்டு பாவம் எங்கு அகதிகளாய் இருப்பார்கள். எங்களுக்கு இப்படியொரு நிலை வந்தால்



காணாமல் போதல்

"ஆனால் வழமை மாதிரி தந்த எல்லா உடலோடும் சேர்த்து எரிச்சாச்சு. எங்கட அரசாங்கங்கள் இராணுவ வீரருக்கு உரிய மரியாதை கொடுக்கிறதில்லை. அரசியல் தலைவர்களின்ரை பிள்ளைகள் இராணுவத்தில் சேருவதும் இல்லை தானே."

வைத்திய கலாநிதி கா. சுயந்தன்
சுகாதார வைத்திய அதிகாரி, கிளிநொச்சி

எப்படியிருக்கும்? எல்லா நிலவரங்களையும் சோமாவதிக்கும் தனது மனச்சுமையை போக்கக் கடிதத்தில் எழுதிக் கொண்டான்.

ரிவிரெச 2, ரிவிரெச 3 நடவடிக் கையிலும் பியசேனா பங்கு பற்றினான். யாழ்ப்பாணம் முழுவதையும் அரச துருப்புகள் ஆக்கிரமித்த போது பியசேனா தொடர்ந்து சோமாவதிக்கு கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தான்.

இங்க இருந்து இராணுவத்தினர் உயிரோட திரும்பி வாறது ஐமிச்சம். எப்படியும் விடுதலைப் புலிகள் தங்கட சொந்த நிலத்தை மீளக் கைப்பற்றுவார்கள். தமிழ் மக்களின் முழு ஆதரவும் மனசுகளும் அவர்களுக்கு இருக்கிறது. தர்மம் தானே வெல்லும். ரிவிரெச 2, ரிவிரெச 3 இற்குப் பிறகு யாழ்ப்பாண மக்களுக்கு அரசாங்கம் சொல்லொணாத் துயரங்களைக் கொடுக்கத் தொடங்கிச்சு. யுவதிகளை இராணுவம் பாலியல் வல்லுறவு செய்து கொல்வதையும் இளைஞர்களை அடிச்சு சித்திரவதை செய்து கொல்வதையும் தனது கடமையாய்ச் செய்கிறது. இதற்கு அரசாங்கம் முழு அளவிலான ஒத்துழைப்பும் வழங்குகிறது.

பியசேனாவால் இவற்றைப் பார்க்க முடியவில்லை. அவனிடம் தனது சகோதரர்களுக்கு இப்படி நடந்தால் எப்படியிருக்கும் என்ற கேள்வியே மேலோங்கிக் கொள்ளும். ஒரு நாள் காலையில் 15 வயது மதிக்கத்தக்க பாடசாலை மாணவனை பாடசாலைச் சீருடையுடன் கொண்டு வந்தார்கள்.

இராணுவ அதிகாரி பியசேனாவை துப்பாக்கியால் அந்த மாணவனை அடிக்குமாறு கட்டளையிட்டான். பியசேனா மறுத்துவிட்டான். ஆத்திரமுற்ற இராணுவ அதிகாரி பியசேனாவின் வலது தொடையில் துப்பாக்கியால் குறிவைத்துச் சுட்டான். இராணுவ அதிகாரி தனது மேலதிகாரிக்கு தன்னை இவன் அடிக்க வந்ததாகவும் அதனால் தான் சுட்டதாகவும் கதைவிட்டான். அதுதான் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பியசேனா பல தடவைகள் லீவு கேட்டிருந்தும் அவனுக்கு லீவு வழங்கப்படவில்லை. அதிஸ்டவசமாக இக்காயத்தால் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டான். காயம் மாறியதும் வைத்தியசாலையிலிருந்து தலைமறைவாகி சோமாவதியிடம் வந்து சேர்ந்தான்.

பியசேனா கதிரை பின்னும் தொழில் செய்தான். சோமாவதியும் அவனுக்கு உறுதுணையாய் இருந்தாள். வாழ்வு அழகாகவும், அமைதியாகவும் இருந்தது. ஒரு நாள் காலையில் இருவரும் கிரிபத்தும் கட்டைச் சம்பலும் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் பியசேனா இராணுவத்தால் கைது செய்யப்பட்டான். பியசேனாவிட்டயிருந்து சாப்பாட்டுக் கோப்பை பறித்து எறியப்பட்டது. பியசேனா தாக்கவும் பட்டான். சோமாவதியும் அழுவதைத் தவிர வேறெதுவும் செய்யமுடிய வில்லை. பியசேனா எதுவும் செய்ய முடியாத நிலையில் அவர்களுடன் போனான்.

காலம் நகர்ந்தது. பியசேனா மீண்டும் இராணுவத்தில் சேர்க்கப்பட்டான். அவனிடம் அவன் மதவாச்சிக்கு கொண்டு போவதாய் சொல்லிவிட்டு யாழ்ப்பாணத்திற்கே கொண்டு சென்றார்கள். ஆனையிறவில் கடமைக்காக அமர்த்தப்பட்டான்.

பியசேனாவிடமிருந்து இடைக்கிடை சோமாவதிக்கு கடிதங்கள் வந்தவண்ணமிருந்தன. அவன் சிலவற்றை தெளிவாக திரும்பத் திரும்ப எழுதிக் கொண்டிருந்தான். தமிழர்களுக்கு என்று தனியான மொழி உண்டு, கலாச்சாரம் உண்டு, நீண்ட வரலாறு, சொந்த நிலம் உண்டு. அவற்றை அவர்களிடமே என்று விட்டுவிடுகிறோமோ அன்று தான் சிங்கள மக்கள் முழுச் சந்தோசமாய் வாழமுடியும். அதுவரை நாம் செய்யும் வினைகளுக்கு நாமே வினையறுத்துக் கொண்டிருப்போம்.

விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் மூன்று ஆரம்பமாகியது. அது தமது சொந்த நிலங்களை விடுவித்தபடி நகர்ந்து கொண்டிருந்தது. ஆனையிறவை விடுதலைப் புலிகள் மீட்ட பிறகு பியசேனாவிடமிருந்து எந்தக் கடிதமும் சோமாவதிக்கு வரவில்லை.

அரசாங்கம் நீண்ட காலமாய் பியசேனாவைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இப்ப காணாமற்போன பட்டியலில் சேர்த்திருக்கு. சோமாவதியின் அண்ணன் பண்டார அவனும் ஒரு இராணுவ அதிகாரியாய் கொழும்பில் இருக்கிறான். அவன் சொன்னான் நங்கி பியசேனாவின் உடலை புலிகள் அரசாங்கத்திட்ட ஒப்படைத்தது. ஆனால் வழமை மாதிரி தந்த எல்லா உடலோடும் சேர்த்து எரிச்சாச்சு. எங்கட அரசாங்கங்கள் இராணுவ வீரருக்கு உரிய மரியாதை கொடுக்கிறதில்லை. அரசியல் தலைவர்களின்ரை பிள்ளைகள் இராணுவத்தில் சேருவதும் இல்லை தானே.

புலிகள் அப்படியில்லை. புலிகள் தங்களின்ரை மாவீரர்களை தெய்வமாய்ப் பார்க்கிறார்கள். உலகத்தில் யாரும் இப்படிச் செய்வதில்லை. அவங்களின்ரை மாவீரர் நாளை மிக மரியாதைக்குரிய நாளாய் கொண்டாடுவார்கள். எங்கட இராணுவ உடல்களுக்குக் கூட உரிய மரியாதை வழங்குகிறார்கள்.

சோமாவதியின் கன்னங்களில் நீர் பாதை அமைத்தது. சூரிய ஒளியில் காய்ந்திருக்கும் அந்த அழகான உயர்ந்த மரத்தில் ஒரு கிளி மாத்திரம் அமர்ந்திருந்தது. உச்சிச் சூரியன் கிட்டிய தூரத்தில் இருப்பது போல் இருந்தது. ■

# கடந்து வந்த 5 ஆண்டுகளின் ஒரு ஆய்வு

1996ம் ஆண்டு ஆடி மாதம் கிளிநொச்சியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சத்ஜெய இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து; அதுவரையும் கிளிநொச்சியில் இயங்கி வந்த கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை உடனடியாகவே இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டது. மாவட்டத்திலே முதல்தர வைத்தியசலையாக இருந்த இந்த வைத்தியசாலையை உடனடியாகவே வேறொரு இடத்தில் இயங்கவைப்பது மிகவும் சுலபமான செயற்பாடல்ல. அதுவும் கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் வைத்தியசாலைக்குரிய உடமைகளையும் ஆவணங்களையும் மிக மிக சிரமத்தின் மத்தியில் சுற்றயற் கூறு அக்கராயன் குளத்திற்கு இடம்மாற்றி அதை உடனடியாகவே இயங்க வைக்க வேண்டிய தேவை அப்போது ஏற்பட்டது. 1205 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட சனத் தொகையையும் (1996) கொண்டிருந்த கிளி மாவட்டத்தில் ஓரளவு வசதிகளை கொண்டிருந்த இந்த வைத்திய சாலையையே 42 படுக்கைகளைக் கொண்டிருந்த சுற்றயற்கூறு அக்கராயன் குளத்துடன் இணைத்து படுக்கைகள் 128 ஆக உயர்த்தி புதிய கட்டட நிர்மாண வேலைகளையும் உடனடியாகவே செய்து வைத்தியசாலை தனது சேவையை ஆரம்பித்தது.

இந்த இக்கட்டான காலப்பகுதியில் மக்களின் இடப்பெயர்வும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடிகளின் விளைவாக நோய்த் தாக்கம் அதிகரித்ததனால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து சென்றது. இந்நிலையில் வைத்திய சாலையால் வழங்கப்பட்ட சேவைகளின் விபரங்க ளை புள்ளிவிபரங்களுடன் இங்கு சமர்ப்பிப்பது பொருத்தப்பாடாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**வைத்திய கலாநிதி ச.பி.அருள்நேசன்,**
**வைத்தியசாலை,**
**அக்கராயன்குளம்.**

### வெளிநோயாளர்களுக்கான சிகிச்சைகள்

வெளி நோயாளர்களின் வருகையில் ஏற்பட்ட உயர்ச்சி பெரும் இட நெருக்கடியைத் தோற்றுவித்தது. உடனடி தேவையைக் கருத்தில் கொண்டு வெளிநோயாளர் களுக்கான மண்டபம் ஒன்று உடனடியாக நிர்மாணம் செய்யப்பட்டது. 1997 பெப்ரவரியில் தனது சேவையை ஆரம்பித்தது. இருந்தும் அப்போதைய நோயாளர்களின் தொகைக்கு ஏற்ற வகையில் ஈடுகொடுக்கக் கூடியவாறு புதிய வெளிநோயாளர் பிரிவு அமையவில்லை. இதனால் நோயாளர்கள் மிக நீண்ட வரிசைகளில் கால் கடுக்கவும் கொழுத்தும் வெயிலிலும் காத்து நின்று சிகிச்சை பெற வேண்டியிருந்தது.

| ஆண்டு | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|
| வெளிநோயாளர் தொகை | 280571 | 237061 | 216094 | 211178 | 162019 |
| மாதாந்த சராசரி நோயாளர் | 23380 | 19755 | 18009 | 17598 | 13501 |

இங்கு குறிப்பிடக்கூடிய விடயம் யாதெனில் 1996 மார்கழியில் மாத்திரம் வெளிநோயாளர் பிரிவில் திடீரென 36955 நோயாளர்கட்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இது ஏனைய ஆண்டுகளின் மாதாந்த வெளிநோயாளர் பிரிவு எண்ணிக்கையை விட மிகக் கூடுதலானதாகும். பின்பு இத் தொகை படிப்படியாகக் குறைவடைந்து செல்கிறது. தற்போது கிளிநொச்சி நகரை நோக்கிய மக்களின் மீழ் குடியேற்றம் காரணமாக நோயாளர் தொகை 2001 இல் குறைவடைந்துள்ளது. மலேரியாக் காய்ச்சல், சாதாரண காய்ச்சல், வயிற்றோட்ட நோய் களினால் பாதிக்கப்பட்டோர்களே கூடுதலாக வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.



**உள் அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள்**

| ஆண்டு | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் | 12,427 | 9458 | 9602 | 9614 | 10049 | 51148 |
| சராசரியாக மாதாந்தம் அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் | 1036 | 788 | 800 | 801 | 837 | |

சராசரியாக மாதம் ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் தொகை 800 வரையாக இருந்த போதும் 1996 மார்கழியில் அசாதரண உயர்ச்சி காணப்பட்டது. அதாவது 1700 நோயாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இதனால் ஏற்பட்ட இட நெருக்கடியை கருத்திற் கொண்டு 2 நோயாளர்கட்கான விடுதிகள் அமைக்கப்பட்டிருந்த போதும் பெருந்தொகையான நோயாளர்கள் இடங்களின்றி பாயில் படுத்திருந்தே சிகிச்சை பெற்றிருந்தனர். விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றோரில் பெரும்பாலானோர் மலேரியா, சாதாரண காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல், சுவாசத் தொற்று நோய்கள், வயிற்றோட்டம், குருதிச் சோகை பலவகையான நஞ்சூட்டல் நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

| ஆண்டு | 1997 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|
| மலேரியா | 4038 | 2693 | 2181 | 1755 |
| சாதாரண காய்ச்சல் | 402 | 273 | 73 | 150 |
| வயிற்றோட்டம் | 802 | 303 | 212 | 234 |
| நெருப்புக் காய்ச்சல் | 271 | 74 | 48 | 24 |
| சுவாசத் தொற்று | 753 | 279 | 761 | 538 |
| குருதிச் சோகை | 210 | 241 | 135 | 191 |
| நஞ்சூட்டல் | ------ | 27 | 53 | 46 |

**பிறப்புக்களும் அது தொடர்பான புள்ளி விபரங்களும்**

| ஆண்டு | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| உயிருடன் பிறந்தது | 1411 | 1196 | 1710 | 1405 | 1646 | 7368 |
| இறந்து பிறந்தது | 31 | 35 | 29 | 28 | 28 | 152 |
| நிறை குறைந்த பிறப்புக்கள் | 322 | 309 | 315 | 281 | 165 | 1402 |
| மாதாந்தம் பிறப்புகள்(சராசரி) | 117 | 100 | 142 | 117 | 137 | |

இங்கு 1996ம் ஆண்டு மார்கழியில் உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 190 இத்தொகை ஏனைய மாதங்களுடன் ஒப்பிடும் போது மிக உயர்ந்ததாகும்.

**இறப்புகள்**

| ஆண்டு | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| தாய் மரணம் | 02 | - | 06 | 02 | 02 | 12 |
| சிசு மரணம் | 24 | 06 | 30 | 23 | 11 | 94 |
| தற்கொலை மரணம் | 45 | 12 | 16 | 14 | 03 | 90 |
| ஏனையவை | 158 | 164 | 72 | 92 | 88 | 574 |
| மொத்தம் | 229 | 182 | 124 | 131 | 104 | 770 |

**சிகிச்சை நிலையங்கள்**

| ஆண்டு | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|
| சிறுவர்களுக்கான சிகிச்சை - | 1360 | 1129 | 1164 | 1992 | 1435 |
| சத்திர சிகிச்சை - | 1960 | 2282 | 3559 | 4220 | 2189 |
| உயர்குருதி அமுக்கம் - | 6173 | 6231 | 5664 | 6627 | 5232 |
| பொது மருத்துவம் - | 9339 | 8389 | 8968 | 8768 | 9060 |
| பெண் நோயியல் - | 566 | 590 | 481 | 550 | 509 |
| பற் சிகிச்சை - | 7080 | 4218 | 7743 | 9293 | 5845 |
| குடும்பக் கட்டுப்பாடு - | 1172 | 1812 | 2037 | 1036 | 1433 |
| கண்சிகிச்சை - | 678 | 1179 | 2154 | 3522 | |

இங்கு சிகிச்சை நிலையங்களில் மருத்துவ அதிகாரியும் பதிவு வைத்திய அதிகாரியுமே நோயளர்களைப் பார்வையிட்டு சிகிச்சையளித்து வருகின்றனர்.

வைத்தியர்கள் பற்றாக்குறை காரணமாக வெளி இடங்களிலிருந்து வைத்தியர்கள் இங்கு தொண்டர்களாக வந்து கடமை செய்துள்ளனர், அத்துடன் பற்சிகிச்சையைப் பொறுத்தமட்டில் இங்கு நிரந்தரமான பல் வைத்தியர் எவரும் நியமிக்கப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் இவர்கள் இங்கு சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் 1997ல் இருந்து இற்றைவரை மூன்று பல்வைத்தியர்கள் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றியுள்ளனர். இவர்களின் நியமனங் களின் போது ஏற்படும் தாமதங்களால் சில சமயங்களில் பற்சிகிச்சை நீண்ட நாட்களுக்கு நடைபெறாமல் இருந்ததும் குறிப்பிடத்தக்கது. ஏனைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்எண்ணிக்கையும் அக்கராயனின் சுற்றயற் கூறு, உருத்திரபுரம் மத்திய மருந்தகமும் மகப்பேற்றுமனையும் கிளி/ மாவட்ட வைத்திய சாலை ஆகிய மூன்று வைத்தியசாலை ஊழியர்களின் எண்ணிக்கையையும் சேர்த்துப்பார்க்கும் போதும் பற்றாக்குறை நிலவியதை பக்கம் 63ல் உள்ள அட்டவணையை அவதானிப்பதன் மூலம் தெரிந்துகொள்ளலாம்.



## சொர்க்கம் தருவித்த சொந்தம்

ஐந்தாண்டை பூர்த்தி செய்யும்
அபிவிருத்தி சபைதனுக்கு
பண்போடு நான் சூடும்
பாமாலை... இப் பாட்டு

மனிதப் பிறவியிதன்
மகத்தான வாழ்வியலில்
மருத்துவம் செய்த பணி
மறக்காது
பிறக்காத பிள்ளைக்கு
பேர் வைத்தல் பொருந்தாது... போல
சிறக்காத வாழ்விற்கு
சிறகேது?
மண்ணின் மேல் மலர்ந்து
மனதைப் பறிக்கின்ற
மலருக்காய் மண்ணுள் தனை மறைத்து
மகிழ்கின்ற வேர் போல;
உன்னை மறைத்த உந்தன்
உயர்ந்த பணி வாழ்க
கண்ணின் ஒளி குறைந்து
கவலையுற்ற வறியவர்க்கு இலவசமாய்
கண்ணாடி தந்த பணி
முன்னோடி பின்னாளில்
சுபீட்சம் நிறைந்ததொரு
சுகந்த வாழ்வதற்காய் நீ செய்யும்
சுகாதாரப் பணி நீழ்க
புலராப் பொழுதுகளின்
பின்னொருநாள் மக்களெல்லாம்
"கொலரா" என்கின்ற
கொடு நோயால் மரணித்தார்
அயரா நீ உழைத்தாய்
அப்பணியின் விளைவான
"கொலரா வாட்
கொடையை
மறவா(து)
மக்கள் மனந்தொட்டு
மகிழ்வித்த உன் பணிக்கு
சொர்க்கம் தருவித்த
சொந்தமென்ற உன் நிலைக்கு...
துக்கம் தொலைத்த எங்கள்
தூய நெஞ்சுள் நிறுத்தி வைத்தோம்
வாழ்க... நீ வாழ்க
நின் பணியும் வாழியவே...

க. இளந்தளிர்

| ஊழியர்/உத்தியோகத்தர் வகை | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | | | | தற்போதுள்ள ஊழியர்களின் மொத்தம் | பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|
| | மா. வை கிளி | அக் கரா யன் | உருத் திர புரம் | மொத் தம் | | |
| மாவட்ட வைத்திய அதிகாரி | 01 | - | - | 01 | 01 | - |
| பொறுப்பு வைத்திய அதிகாரி | - | 01 | - | 02 | - | 01 |
| வைத்திய அதிகாரி | 04 | 01 | - | 05 | 01 | 04 |
| பல் வைத்திய நிபுணர் | 02 | 01 | - | 03 | 01 | 02 |
| மேற்பார்வை தாதியர் | 01 | - | - | 01 | - | 01 |
| தாதிய உத்தியோகத்தர் 1 விசேடம் | 02 | - | - | 02 | - | 02 |
| தாதிய உத்தியோகத்தர் தரம் 1 | 02 | - | - | 02 | 04 | - |
| தாதிய உத்தியோகத்தர் தரம் 2 | 24 | 08 | - | 32 | 07 | 25 |
| றேடியோ கிறாபர் | 01 | - | - | 01 | - | 01 |
| ஈ.சீ.ஜீ. பதிவாளர் | 01 | - | - | 01 | - | 01 |
| ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01 | - | - | 01 | 01மீள் நியமனம் | - |
| இயன் மருத்துவவியலாளர் | 01 | - | - | 01 | - | 01 |
| வை.சாலை மேற்பார்வையாளர் | 01 | - | - | 01 | 01 | - |
| உணவு எழுதுநர் | 01 | - | - | 01 | - | 01 |
| சமையலாளர் | 02 | 01 | - | 03 | 01 | 02 |
| விடுதி எழுதுநர் | 01 | - | - | 01 | - | 01 |
| சாரதி | 02 | 01 | - | 03 | 01 | 02 |
| மலேரியா தடைப்பிரிவுகள் உதவியாளர் | 01 | 01 | - | 02 | 01 | 01 |
| மலேரியா தடை பருவகால ஊழியர் | 01 | 01 | - | 02 | 01 | 01 |
| நுண் கருவியிலாளர் | 03 | 01 | - | 04 | 02 | 02 |
| பதிவு வைத்திய அதிகாரி | 03 | 02 | 01 | 06 | 03 | 03 |
| மருந்துக் கலவையாளர் | 02 | 01 | 01 | 04 | 02 | 02 |
| மருந்தாளர் | 02 | - | - | 02 | - | 02 |
| குடும்ப நல மாது | 06 | 03 | 02 | 11 | 04 | 07 |
| வைத்தியசாலை பரிசாரகர் | 34 | 12 | 04 | 50 | 23 | 27 |
| சாதாரண தொழிலாளி | 18 | 05 | 02 | 24 | 10 | 14 |
| சாதாரண தொழிலாளி (அமையம்) | - | - | - | - | 16 | - |
| சுத்திகரிப்புத் தொழிலாளி | 20 | 07 | 02 | 29 | 18 | 11 |

**கண்சிகிச்சை**

1997ஆம் ஆண்டு முதல் கண் நோய்களை இனங்காணவும் மேலதிக சிகிச்சை ஒழுங்குகளை மேற்கொள்ளவும் கண்சிகிச்சை நிலையம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பார்வை இழந்தவர்கட்கு பார்வை வழங்கும் நோக்குடன் பல்வேறு நிறுவனங்களினதும் தனியாரினதும் உதவியுடன் கண்ணாடி வழங்கல், கற்றாக் சத்திரசிகிச்சைக்கான செலவுகள் வழங்கல் என்பன 1998ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் இதனை மேலும் விரிவுபடுத்தும் முகமாக 'கண்ணொளி' என்னும் திட்டம் 2001- பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்டு நிதி சேகரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. தற்போது இத்திட்டத்திற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிதியினை (மாதாந்தம் 25,000/= வீதம்) வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இற்றைவரை 102 நோயாளர்கள் கண் சத்திர சிகிச்சைக்காக வவுனியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அத்துடன் 2000 ஆண்டில் 140 பேருக்கும் 2001 ஆண்டில் 151 பேருக்கும் மூக்கு கண்ணாடிகள் வழங்க சிபாரிசு செய்யப்பட்டது. இதில் 29 பேருக்கு இலவசமாக கண்ணாடிகள் வழங்கப்பட்டது.

**சத்திர சிகிச்சைக்களம்**

ஆரம்பத்தில் சத்திரசிகிச்சைக்கான கூடம் இல்லாத நிலையில் சிறிய அறை ஒன்றிலேயே சிறிய சத்திர சிகிச்சை வேலைகள் செய்யப்பட்டு வந்தன. பின்பு பிரசவ அறையானது சத்திர சிகிச்சைக் கூடமாக மாற்றப்பட்டு இரத்த வங்கியுடன் புதிய சத்திர சிகிச்சை கூட தொகுதி ஒன்று 1999 வைகாசியில் திறந்து வைக்கப்பட்டது.

| | | சத்திரசிகிச்சை | | |
|---|---|---|---|---|
| ஆண்டு | | பெரியவை | சிறியவை | தொகை |
| 1997 | - | - | 980 | 980 |
| 1998 | - | 16 | 413 | 429 |
| 1999 | - | 10 | 997 | 1007 |
| 2000 | - | 24 | 942 | 966 |
| 2001 | - | 93 | 940 | 1033 |
| மொத்தம் | | 143 | 4272 | 4415 |

**ஆய்வு கூட பரிசோதனைகள்**

கடந்த 5 ஆண்டுகளாக ஆய்வு கூடமானது சிறிய அறையிலேயே இயங்கி வருகின்றது. இங்கு பலவகைப்பட்ட நோயாளர்கள் இனம் காணப்பட்டனர்.

| | |
|---|---|
| இரத்தப் பரிசோதனை செய்தோர் | 91700 |
| சிறுநீரகப் பரிசோதனை செய்தோர் | 194700 |
| சளிப்பரிசோதனை செய்தோர் | 3500 |

அத்துடன் அரசாங்க ஊழியர்களுக்கான மருத்துவ பரிசோதனை 567 பேருக்கு செய்யப்பட்டன.

**விசேட பரிசோதனைகள்**

**எக்ஸ் கதிர்ப்படம் எடுத்தல்**

மாவட்ட வைத்தியசாலைக்குரிய எக்ஸ் கதிர் எடுக்கும் இயந்திரம் ஆரம்பத்தில் மல்லாவி வைத்தியசாலையில் செயற்பட ஆரம்பித்தது. பின்பு இவ்வியந்திரத்தை இங்கு கொண்டு வருவதற்கு

பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பின்பு 1999 மே மாதம் கொண்டு வரப்பட்டு இங்கு எக்ஸ் கதிர் படமெடுக்கும் சேவை செயற்பட்டு வருகிறது.

**ஆண்டு எக்ஸ் கதிர்ப்பட எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| 1996 | - | 1076 |
| 1997 | - | 1976 |
| 1998 | - | 2595 |
| 1999 | - | 2533 |
| 2000 | - | 1426 |
| 2001 | - | 3143 (ஐப்பசி 2001 வரை) |
| மொத்தம் | - | 12741 |

**மிகை ஒலி பரிசோதனை**

மேற்படி பரிசோதனைக்குரிய இயந்திரமானது 01.12.1999 திகதியில் இருந்து செயற்பட்டு வருகின்றது. இதன் உதவியுடன்

| | |
|---|---|
| 1999 இல் | 43 |
| 2000 இல் | 934 |
| 2001 இல் | 1732 |

நோயாளர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள் இது நோய்கள் இனங்காண்பறகும் தரவுகள் பெறுவதற்கும் மிக மிக முக்கியமானதாகும்.

**இரத்த வங்கி**

1998 ஆண்டில் இருந்து செயற்பட்டு வருகிறது. இரத்தம் அவசரமாக தேவைப்படும் நோயாளர்களுக்குரிய இரத்தம் ஏற்றப்படுவதற்கு முன்பு பரிசோதனை செய்யப்படுகின்றது. இந்தப் பரிசோதனைகள் இங்கு செய்யப்பட்டு இரத்தம் சேகரிக்கப்பட்டு உரிய நோயாளர்களுக்கு உடன் ஏற்றப்படுகின்றது. அல்லது சேகரித்து வைக்கப்பட்டு தேவையின் போது பயன்படுத்தப்படுகின்றது.

| | குருதியினங்கானல் | குருதி மாற்று | குருதிஒருங்கொட்டுச் சோதனை |
|---|---|---|---|
| 1998 | 654 | 176 | 233 |
| 1999 | 537 | 136 | 148 |
| 2000 | 685 | 179 | 247 |
| 2001 | 668 | 154 | 259 |
| மொத்தம் | 2544 | 645 | 887 |

**புதிய நிர்மாண வேலைகள்**

பல வேலைத்திட்டங்கள் இக்காலப்பகுதியில் நடைபெற்ற போதும் குறிப்பாக சிலவேலைகள் சம்மந்தமாக குறிப்பிட்டே ஆகவேண்டும். 1998 வன்னியில் திடீரென பரவிய கொலரா அபாயத்தினால்

இருந்த போது தனியாக விடுதி ஒன்று அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அரச உதவிகள் எதுவும் அந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு மற்றும் பொது நிறுவனங்கள், நலன்விரும்பிகளிடமிருந்தும் நன்கொடைகள் பெற்று சுமார் 23,000000 ரூபா செலவில் விடுதி ஒன்று மிகக்குறுகிய காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. மற்றும் வெளிநோயாளர் பிரிவில் ஆய்வுகூடம், பற்சிகிச்சைக் கூடம் என்பனவற்றை உள்ளடக்கிய புதிய கட்டடமும் நிர்மானம் செய்யப்பட்டுள்ளனவற்றில் குறிப்பிடக் கூடியனவாகும். தற்போதைய நிலையில் புதிய நிர்மான வேலைகள் எதுவும் செய்யப்படுவதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. மக்கள் கிளிநொச்சியை நோக்கி மீள குடியமர ஆரம்பித்து விட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் கட்டம் 01 அங்கு 2001 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இங்கு ஆரம்பிக்கப்பட்டு முடிவுறாத நிலையில் சில வேலைகள் உடனடியாக செய்யப்பட வேண்டியவையாக உள்ளன.

# சந்தளின் இரவு

**15.07.1997**

இரவு நேரம் 7.00 மணி

எமது வைத்தியசாலையில் இரவு நேரக்கடமைகள் துரிதமாக நடந்து கொண்டிருந்தது. நோயாளர்கள் மருந்துகளை வாங்குவதற்கு காத்துக் கொண்டிருந்தனர். சிறு குழந்தைகள் தங்களுக்கு போடப்பட்ட ஊசிகளின் வேதனை தாங்க முடியாது வீரிட்டு அழுது கொண்டிருந்தனர். அவர்களை சமாதானப்படுத்துவதற்கு தாய்மார் பெரும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்த வேளை வைத்தியர் இரவுக்கடமைக்காக விடுதியுள் பிரவேசித்தார். நோயாளிகளை பார்வையிட்ட பின் அடுத்த விடுதியையும் பார்வையிட வேண்டிய நிலை அவருடையது. எனவே அவரது கடமையை விரைவாக முடித்துக் கொண்ட பின் நேரம் இரவு 8.00 மணி

பிரத்தியேகமாக பரீட்சைக்கு தோற்றவிருந்த தாதியராகிய எம்மில் சிலருடன் பாடங்கள் சம்மந்தமாக கலந்துரையாடலை நடாத்திக்கொண்டிருந்த வேளை விடுதிகளில் நோயாளர் தமக்கு எனக் கொடுக்கப்பட்ட கட்டில்களில் சிலரும் சிலர் கட்டில்களுக்கு அடியிலும் சிலர் விறாந்தையிலுமாக தமது குழந்தை பூமியையெட்டிப் பார்க்க ஆயத்தமாகும் போது தமக்கு உண்டாகும் வேதனையை தாங்கமுடியாது வலியால் துடித்துக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் அதனைச் சகித்துக் கொண்டிருந்தனர். சிறுவர் விடுதியில் சிறுவர்களைப் படுக்க வைக்க தாய்மார் பாட்டு பாடிக்கொண்டும், மின்சார விசிறியையும், விளக்கையும் காட்டி குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டும் இருந்தனர். இவ்வேளையில் வைத்தியரும் பரீட்சைக்கு ஆயத்தமாகும் தாதியர் சிலரும் பாடங்கள் பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். விடுதித் தாதியர்கள் மின்சார விளக்குகள் தமது உயிர்மூச்சை விடுவதற்கு இனனும் ஒரு சில மணி நேரங்களே இருப்பதால் அவசர அவசரமாக தமது விடுதியில் தங்கியிருக்கும் நோயாளிகளின் மருத்துவச் சிட்டைகளை பார்வையிட்டுக் கொண்டிருந்தனர்.



8.30 மணி

யாரோ விடுதியில் வைத்திருந்த வானொலிப் பெட்டியில் செய்திகள் வாசிப்பதற்கான ஆரம்ப

இசை நடைபெற்றுக் கொண்டிருந்தது. செய்தியைக் கேட்டு பாடத்தை ஆரம்பிப்போம் என்று வைத்தியர் கூறி முடிப்பதற்குள் நீண்ட நாட்களின் பின் பாரிய ஓர் செல்சத்தம் சிறிது தூரத்தில் கேட்டது. பூமி ஒருதரம் அதிர்ந்தாற்போல் இருந்தது. நாம் எங்கோ செல் விழுந்து விட்டது. நோயாளர் வரக்கூடும் என்று கூறுவதற்குள் காதைப் பிளக்கும் சத்தம் எமது வைத்தியசாலை வளவினுள் கேட்டது. உடனே "எல்லோரும் படுங்கள், விழுந்து படுங்கள்" என்று கூறிய வண்ணம் நிலத்தில் விழுந்து படுத்தோம்.

தொடர்ச்சியாக இரண்டு மூன்று செல் சத்தங்கள் கேட்டதும் விடுதிகளில் நோயாளர் கத்திக்குழறும் சத்தமும் வானைப் பிளக்கும் அளவு கேட்டது.மெதுவாக தலை நிமிர்த்திய பொழுது ஒருவர் இரத்தம் ஒழுகிய நிலையில் ஓடுவதைக்காண நேர்ந்தது. "ஓட வேண்டாம் படுங்கள்" என்று கூறியபோதும் அவர் தொடர்ந்தும் விடுதியைவிட்டு ஓடினார். சில நிமிட நேரங்கள் சத்தம் இல்லை என்றவுடன் மெதுவாக எழும்ப ஆரம்பித்தோம்.

**இரவு 8.45 மணி**

செல் எங்கே விழுந்தது என்ற விபரம் ஏதும் புரியாத நிலையில் காயப்பட்டு ஓடியவர் எங்கே நிற்கிறார் என்று கேட்ட வண்ணம் விடுதிக்கு வெளியில் குரல் கொடுத்தவண்ணம் ஓடினோம். இறுதியாக சில நிமிடங்களின் பின் சுகாதார சேவை பணிமனை முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வாகனத்துக்கு அருகில் முனகல் சத்தம் கேட்டது. நாம் அவ்விடத்தை விரைவாக அணுகிய போது மயங்கிய நிலையில் ஓர் இளைஞன் காயப்பட்டிருந்தார் அவரைத்தூக்கி விடுதிக்கு கொண்டு வந்தோம். விடுதியில் வைத்து பரிசோதித்த போது அவரது காலின் தொடைப்பகுதி பாரிய காயத்துக்குள்ளாகி இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. விடுதியில் உள்ள நோயாளர்கள் மழையில் நனைந்த கோழிக்குஞ்சுகள் போன்று உடல் நடுங்கிய வண்ணம் தமது உடைமைகளை கையில் இறுகப் பற்றிய வண்ணம் கட்டிலுக்கு அடியிலும் அலுமாரிகளின் பின்னும் பதுங்கி இருந்தனர். காயமடைந்த இளைஞனுக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கும் வேளையில் வைத்தியசாலை முன்பகுதியில் ஆண்கள் விடுதியிலிருந்து காயமடைந்த நோயாளர்கள் வந்து கொண்டிருக்கின்றனர். ஓடிவாருங்கள் என்ற குரல் கேட்டு அந்த இளைஞன் உடன் ஒருவரை விட்டு விட்டு ஏனையோர் விடுதியில் முன்பக்கம் ஓடினோம்.

ஆண்கள் விடுதியின் அருகில் உள்ள சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு வந்தபோதுதான் எமது வைத்தியசாலை ஊழியர் ஒருவரின் விடுதியின் முற்றத்தில் செல் விழுந்ததாகவும் அதன் பகுதிகள் ஆண்கள் விடுதியிலும் வைத்திய சாலையின் சில பகுதிகளிலும் விழுந்ததாகவும் அறிய நேர்ந்தது. காயப்பட்டவர் களையும் இறந்தவர்களையும் கொண்டுவந்து கட்டிலிலும் நிலத்திலும் போடப்பட்டிருந்தது. இருவர் உடனேயே இறந்து விட்டதால் அவர்களை விட்டு விட்டு காயமடைந்தவர்களுக்கு எமது வைத்தியர்

**தாதிய உத்தியோகத்தர்கள்**
விடுதி 01, 02

கள் சிகிச்சை அளித்துக் கொண்டு அவர்களை உயிருடன் காப்பாற்ற பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தனர். என்ன முயன்றும் அவசர சிகிச்சை மட்டுமே இங்கு செய்யக்கூடிய சூழல் இருந்தது. எனவே அவர்களை மல்லாவி வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடு துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது எமது ஊழியர் கணபதியின் வீட்டில்தான் செல் விழுந்தது என்று தெரியவந்தது. எங்கே கணபதி என்று தேடிய போது கணபதியின் உடல் இறந்தவர்களின் உடல்களுடன் கிடத்தப்பட்டிருந்தது. கணபதியும் அவரது மாமன் இருவரும் இறந்திருந்தனர். ஆனால் கணபதியின் கையில் இருந்த மணிக்கூடு மட்டும் தன்பாட்டில் துடித்துக் கொண்டிருந்தது. நேரம் 11 மணியைக் காட்டிய வண்ணம்.

**இரவு 11 மணி**

இறந்த ஊழியர் கணபதியின் மாமனார் உடல் சிதறி இறந்திருந்தார். அவரது மனைவி பாரிய

காயத்துக்குள்ளாகியிருந்தார் மகள் ஒரு காலை இழக்க வேண்டிய நிலை, மகன் ஒருவர் நெஞ்சில் காயப்பட்ட நிலை இறந்தவர்களை விட்டு மிகுதிப்பேரை மல்லாவி வைத்திய சாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தோம். விடுதியில் உள்ள ஏனைய நோயாளர்களைத் தேடி உறவினர் வந்து குவிந்து ஒரு பதற்ற நிலையுடன் தம் வீடுகளுக்கு அழைத்துச் சென்றுவிட்டனர். தம் உயிர் அங்கு பிரிந்தாலும் ஒன்று தான் என்ற நிலையில் 6, 7 நோயாளர்கள்

மட்டுமே விடுதிகளில் மிகுதியாக இருந்தனர். வைத்தியசாலை மயான அமைதியாக இருந்த வேளை அக்கராயன் கிராம மக்கள்



வைத்தியசாலைக்கு வந்து திரும்பிக் கொண்டிருந்தனர்.

**இரவு 12 மணி**

வைத்தியர்களும் நாமும் மனம் சோர்ந்த நிலையிலும் காயப்பட்டவர்களின் நிலை தமது செயலுக்கு மிஞ்சி விட்டதாலும் கவலையுடன் தமது விடுதிகளுக்குச் சென்றனர். நாமும் நேரில் கண்ட கோரக் காட்சி மனதை விட்டகலாத நிலையில் இக் குடும்பத்தினரின் துயரை நெஞ்சில் சுமந்த வண்ணம் எமது விடுதிகளுக்குத் திரும்பினோம். கடந்த நிகழ்வு பற்றி கதைத்தபடியிருந்த வைத்தியசாலை ஊழியர்கள், நோயாளர்கள் மட்டுமல்ல அக்கராயன் கிராமமே மயான அமைதியாக காட்சியளித்தது.

**நேரம் காலை 5 மணி**

பொழுது மெலிதாக புலர்ந்து கொண்டிருந்த வேளையில் மீண்டும் ஒரு அதிர்ச்சி மல்லாவிக்குக் கொண்டு சென்ற நோயாளர்களில் கணபதியின் மனைவியும், மகனும் காலமாகி விட்டதாகவும் அத்துடன் மகளின் கால் துண்டிக்கப்பட்டு விட்டதாகவும் அறிந்த அதே வேளை எம்மால் அவசர சிகிச்சை செய்து அனுப்பப்பட்ட இளைஞன் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் அறிந்தோம்.

**நேரம் காலை 7 மணி**

ஓரிரவில் பல அனுபவங்களை அனுபவித்துக் கொண்ட எமது வைத்தியசாலை மீண்டும் தனது பணியை ஆரம்பித்துக் கொண்டது. எமது வைத்தியசாலையில் தனது கடமையைச் செய்து எமது வைத்தியசாலையின் ஊழியர்கள் விடுதியில் தங்கியிருந்த ஒரு ஊழியர் குடும்பம் நான்கு உயிர்களை இழந்து ஒரு இரவின் சில மணி நேரத்தில் சின்னாபின்னப்பட்டது.

இவ்வாறான சோகங்கள் இம்மக்களிற்கு பழகிய ஒன்றாய் இருந்ததால் பன்னிரு மணித் துளிகள் மறைவதற்குள் மீண்டும் வைத்தியசாலைக்கு நோயாளர்கள் வருகை தர வைத்தியசாலை வழமைபோல் இயங்க ஆரம்பிக்கிறது. ஆனால் காலையில் விசிலடித்துக் கொண்டே விடுதிகளை கழுவும் கணபதி மட்டும் மாமனுடன் பிரேத அறையில் மீளாத் துயிலில்...

# எளிமை வேண்டும்

தலைமை என்ற பதம் பலருக்கு தலைக்கனத்தை தானாகவே தரவல்லது. தலைக்கனமல்லாத தலைமையைத் தான் முகாமைத்துவ சிந்தனைப் படிமங்கள் வலியுறுத்துகின்றன. எனினும் பதவிகளின் உச்சம் மேலே செல்லச் செல்ல கடுமைப் போக்கு, சிரிப்பின்மை, வாய் திறந்து பேசாமை என்பன போன்ற குணாதிசயங்கள் தலைமைப் பதவியுடையவர்களிடம் ஒட்டிக் கொள்வது தவிர்க்க முடியாதது போலும்.

சதா. தனபாலசிங்கம்

''வைத்திய கலாநிதி திருநாமம் மேலதிக பணிப்பாளர் சுகாதார சேவைகள் உள்'' என்ற பெயர்ப்பலகை மும்மொழிகளிலும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகியவற்றில் பணிமனையில் அவர் இருப்பது உறுதி செய்யப்படுகிறது. தலைமை ஏவலாளி (Peon) தன் மேசையில் இருந்து அன்றைய நாளிதழைப் பார்க்கிறார். தனக்கு முன் நிற்பவரைப் பற்றி சிறிதளவேனும் சிரத்தையோ அக்கறையோ எடுக்கவில்லை.

''தம்பி வைத்திய கலாநிதி இருக்கிறார் தானே?'' தலையை நிமிர்த்திய ஏவலாளிக்கு சிரிப்பு வருகிறது. அடக்கிக் கொள்கிறார். தூய வெண்வேட்டி, தேசிய மேற்சட்டை, சால்வை, காதில் பூ, நெற்றியில் சந்தனம் மேல் குங்குமம், கையிலே ஐந்தறைப் பை அவரின் அணிகலன்களாக காட்சியளிக்கிறார். அவர்தான் துளசிநாதன். எந்தக் கோயில் வசூலுக்கு? ஏவலாளி கேட்க

ஓ அதுவா? நான்தான் துளசிநாதன். என்னை நண்பர்கள் துழாவுநாதன் என்று கேலி செய்வார்கள். பெயரில் என்ன இருக்கிறது. ''இந்தா எனது வருகையாளர் சீட்டு''

ஏவலாளி எழுந்து நின்று வருகையாளர் சீட்டை வாங்கு முன்பே வைத்திய கலாநிதி திருநாமம் ஓடோடி வந்து துளசிநாதனை வரவேற்றார்.

''சரி எல்லாம் ஆயத்தம்தானே?''
''ஐயா தேநீர் எடுத்துவிட்டு விசாரணையைத் தொடங்கலாம் தானே?''

''இல்லையில்லை விசாரணைக்குப் பின் தேநீர் அருந்தலாம்''

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

**II**

சூழ்நிலை நொதுமலான விசித்திரமான மாறுபட்ட நிலையை யாவரும் உணர்கிறார்கள்.

இற்றைவரை பேரளவில் அறிந்திருந்த துளசி நாதனை அரசாங்க சேவையில் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுபவர்களை காப்பாற்றி குற்றத்தில்

இருந்து நீக்கி வெளிக் கொணரும் நம்பிக்கை, அவரின் எதிர்வாத இன்னல் தடுப்பு கைங்கரியத்திற்கு ஈடிணை அவரே என்பதை பலர் அறிவர்.

வைத்திய கலாநிதி திருநாமம் விசாரணை அலுவலரையும் குற்றச்சாட்டு தொடர்புநரையும், குற்றம் சாட்டப்பட்டவரையும் எதிர்வாத அலுவலரையும், சுருக்கெழுத்தாளரையும் அறிமுகம் செய்து வைத்தார். "குற்றம் சாட்டுபவர் வைத்திய கலாநிதியாகையின் விசாரணை அலுவலரும் வைத்தியக் கலாநிதி என்ற நிலையில் இந்த விசாரணைக்குழு சிறந்த முறையில் ஆக்கப் பெற்றது" என்று துளசி நாதன் கூற யாவரி னது முகங்களும் மலர்ந்தன.



"எல்லோரும் வெள்ளா டைக் கூட்டம் தான். ஆனால் நான் வெள்ளா டைக்குள் இருந்தாலும் உங்கள்துறை தொடர் பாக ஏணி வைத்து ஏறினாலும் உயரப்போக இயலாது" இப்படியொரு சிக்கலான விசாரணைக்கு நான் எதிர்பாராத இருவர் இருக்கிறார்கள். எனக்குத் தெரிகிறது. உண்மையில் எனது கட்சிக்காரரை மாட்டவென அமைக்கப் பெற்ற குழுதான்

"நீங்கள் அப்படி நினைக்கக் கூடாது. இப்படியான மருத்துவம் தொடர்பான விசாரணை களை மருத்துவம், வைத்தியம் அவைகளில் நெளிவுசுழிவுகள் தெரிந்தவர் விசாரிப்பது நல்லதல்லவா?"

"அப்படியென்றால் மருத்துவமும், வைத்தியமும் தெரியாத ஒருவர் எதிர்வாத அலுவலராக இருப்பது பொருத்தமில்லை என்று கூறுகிறீர்கள் போலும்,"

"நீங்கள் எங்கள் கருத்தை தவறாக புரியப் பார்க்கிறீர்கள்,"

"தவறுகள் குற்றமாவதும், பெருங் குற்றமாவதும், குற்ற விசாரணைக்கு ஆவதும் பிழைக்குள் சரியும் சரிக்குள் பிழையும் இருப்பது போல தான் நான் உங்களைக் குழப்புகிறேன் என்று நினைக்கிறீர்கள்,"

திரு துளசிநாதன் விசாரணையில் எதிர்வாத அலுவலர் என்றபொழுது பெரிதாகக் குழம்பியவர்கள் இப்பொழுது மேலும் குழப்பத்துக்கு உள்ளாகி விட்டார்கள், இவர் போடும் பீடிகைதான் குற்றச்சாட்டு தொடர்புனரையும் விசார ணை அலுவலரையும் எல்லா விசாரணைகளிலும் குழப்பி குழப்பிய குட்டை யில் மீன் பிடிக்கும் தன்மை போலாவது யாவரும் அறிந்த உண்மை.

"உங்களுக்குத் தெரியாது நான் ஒருபோதும் இப்படி யான பொடி விசாரணை களில் எதிர்வாதம் செய்வ தில்லை. ஆனால் இவ் விசாரணையில் குற்றஞ் சாட்டப்பட்டவர் எனது நண்பர் வைத்திய கலாநிதி விசுவின் மகனாதலாலும் இம் மாவட்ட அமைச்சரின் அந்தரங்க செயலாளரின் மனைவியின் இறப்பு ஆனதாலும் இதில் மாவட்ட மந்திரி தலையிட்டு இருந்ததாலும் நியாயம், நீதி நிலைநாட்டப்பெற வேண்டும் என்பதாலும் தான் நான் இவ் விசாரணையில் தோன்றி யுள்ளேன்."

விசாரணை அறைக்குள் இருந்து யாவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறார்கள். முகத்தில் எதுவித மலர்வும் இல்லை, பூகம்பத்திற்கு முன்னுள்ள சுற்றாடல் போல் அவ்விடம் தோன்றுமாப்போல் இருக்கிறது,

சுருக்கெழுத்தாளர் தன் குறிப்புப் பொத்தகத்தில் கவனமாக ஒவ்வொரு வார்த்தைகளையும் குறிப்பெடுக்கிறார்.

"உண்மையைச் சொல்லப் போனால் உண்மையில் நான் இந்தச் சிக்கலின் தீர்வு அமைவை வெளியிடேன். நாம் யாவரும் புரிந்துணர்ந்து எதார்த்தத்திற்கு இடமளிப்போம் என்று அந்தரங்கச் செயலாளரைக் கேட்டிருந்தேன்.

"டொக்டர் அருண் உங்கள் அப்பா எத்தனை ஆண்டு காலமாக வைத்தியம் செய்து வருகிறார்."

"கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகள்"

"உங்கள் அப்பாவிடமிருந்து அவரின் பட்டறிவைப் பகிர்ந்து கொண்டிருப்பீர்களா?"

"அப்பாவின் அறிவும், ஆற்றலும், பட்டறிவும் எனக்கு வழிகாட்டிகள், அவரிடமிருந்து மருத்தவக் கல்லூரியில் கற்காத பலவற்றைக் கற்றிருக்கிறேன்."

"இந்த தலைமாட்டுச் சீட்டில் குறிப்பிடப் பட்டிருப்பவைகள் எல்லாம் உங்கள் எழுத்திலானது தானா?"

"இது நகல், ஆனால் என் கையெழுத்திலானவைகளும் உள"

"நல்லது, ஏன் எல்லம் விபரமாக எழுதியிருக்கிறீர்கள்?"

"மருத்தவத் துறையில் தொடக்கத்தில் விபரமாகத்தான் எழுதுவார்கள். காலம் போகப்போக கழுதை தேய்ந்து கட்டெறும்பாகும்,"

"எனக்கு உமது நகைச்சுவை வேண்டாம். கேள்விக்குரிய நேரடிப் பதில்தான் வேண்டும்"

"மன்னிக்கவேண்டும். இனிமேல் கவனமாகச் சொல்கிறேன்."

"உம்மால் இத்துண்டில் எழுதப்பட்டவைகளை நினைவு கூர்ந்து சொல்லமுடியுமா?"

"ஓராண்டுக்கு முன் நடந்த சம்பவம் ஆதலால் பார்த்துத்தான் கூறமுடியும்"

விசாரணைக்கு வருமுன் இவ் விடயத்தில் துளசிநாதன் வழி கூறி நெறிப்படுத்தியிருப்பார் என்பதை எல்லோரும் தெரிந்திருந்தும் குற்றச்சாட்டு தொடர்புனர் கூட அமைதியாக இருந்தார்.

"கடமையில் கவனக் குறைவாலும் கருத்தாழமில்லாததாலும் உமது நேரடி வைத்தியத்திற்கு என உமது மேற்பார்வையில் உள்ள விடுதி 02 இல் சேர்க்கப்பெற்ற திருமதி தங்கநாதனின் இறப்புக்குக் காரணமாக இருந்ததால் ஏன் கடமை தவறிய குற்றத்திற்கு தண்டனை வழங்கக் கூடாது?"

"என்ன நான் வாசித்தது விளங்கியதா?" என துளசிநாதன் கேட்க

"இதற்கு நான் ஏற்கனவே மறுமொழியளித்து விட்டேன்."

"அப்படியென்றால் விசாரணை அலுவலரே எனது கட்சிக்காரன் குற்றமற்றவர்"

"அப்படிச் சொல்லமுடியாது? அவர் மேற் சாட்டப்பெற்ற குற்றங்கள் இவ் விசாரணை மூலம் பிழையில்லை என நிரூபிக்கப்பட்ட பின் தான் குற்றத்திலிருந்து அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்ட விடயத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும்"

"சரி டொக்டர் அருண் 1994 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ம் நாள் உங்கள் கடமை நேரம் என்ன?"

"காலை எட்டு மணியிலிருந்து மாலை 16.00 மணிவரை"

"அப்படியென்றால் திருமதி தங்கநாதன் மாலை 18.45 மணிக்கு விடுதியில் சேர்க்கப்பட்டிருக்கவும் நீங்கள் 19.15 மணிக்கு எவ்வாறு துண்டில் குறிப்புகள் எழுதியிருக்கமுடியும்."

"திரு தங்கநாதனின் தகுதியும், தரமும், நிலையும், நட்பும் என்னை கடமை நேரம் இல்லாவிட்டாலும் சேவை செய்ய தூண்டியது"

"தகுதியும், தரமும், நிலையும், நட்பும் இல்லாவிடில் இப்படியான ஒரு நோயாளியைக் கவனித்திருக்க மாட்டீர் அப்படித் தானே?"



"இல்லை எந்த நோயாளியானாலும் இந்த நிலைமை என்றால் சேவைக்கு வந்திருப்பேன்,"

"உமது அறிவின்படி இந் நோயாளிக்கு எப்பொழுது நோய் தோன்றியிருக்கலாம்"

"குறைந்தது இறப்பிற்கு முன்பாக மூன்று மாதங்களாக அது இருந்திருக்கலாம்."

"இந் நோயாளிக்கு 5 நாட்கள் ஆயுர்வேத வைத்தியமும் 10 நாட்கள் மேலைத்தேய வைத்தியமும் நோய் என்னவென்று தெரியாமல் செய்த பின்புதான் இயலாத கட்டத்தில் இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள்."

"நீங்கள் என்ன நோய் என்று உணர்ந்தீர்களா? அல்லது கண்டுபிடித்தீர்களா?"

"எனது வைத்தியசாலையில் வசதிகளில்லாத காரணத்தால் நான் யாழ் போதனா வைத்திய சாலைக்கு வெகுவிரைவில் எடுத்துச் செல்லுமாறு கூறினேன்"

"ஏன் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்ல வில்லை?"

"நோயாளர் ஊர்தி இல்லாததனால்"

"உங்கள் நோயாளர் ஊர்தி?"

"ஏற்கனவே நோயாளர்களுடன் யாழ்ப்பாணம் சென்றிருந்தது"

"அவர்களை சொந்தச் செலவில் எடுத்துச் செல்ல வழிநடத்தியிருக்கலாம்?"

"அங்கே தான் தவறு நடந்துவிட்டது. திரு தங்கநாதன் மாவட்ட மந்திரியுடன் சென்றிருந்தபடியால் அவருடன் தொடர்பு கொள்ளமுடியாமல் அடுத்த நாட்காலை அனுப்ப இருந்தார்கள். ஆனால் விடியுமுன் அந்தத் துயரச் சம்பவம் நடந்தேறிவிட்டது"

"அப்படியென்றால் உங்கள் மேல் இப்பழி ஏன்?"

"தெரியாது"

"உங்களின் வைத்தியத் திறமையை யாராவது மெச்சி உள்ளார்களா?"

"அதனைக் கூறினால் எனது பணிக்கு நான் தற்பெருமை அடிப்பது போலாகிவிடும்"

"நன்மையை நாடி புகழாதவரும்? திண்மையைத் தேடி இகழ்வர். இதுதான் உலகம்."

"உம்மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எதையோ மறைக்க எடுத்ததாக இருக்கலாமா?"

"என்னால் நிச்சயமாகச் சொல்லமுடியாது"

நான் நினைக்கிறேன்.........

"தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்" என்ற குறளுக்கமைய தன் நெஞ்சுச் சூட்டைத் தணிக்க இக் குற்றச்சாட்டும், விசாரணையும் வடிகாலாக அமைகிறது போலும் என்று கூறித் தன் புன்னகையை வெளிக்கொணர்ந்த துளசிநாதன்

"விசாரணை அலுவலகர்களே இந்தக் குற்றச் சாட்டு மூலம் ஏற்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை யால் டொக்டர் அருண் தண்டிக்கப் பட்டால் இவ்விடயம் இத்தோடு நிற்பதில்லை."

திரு தங்கநாதன் என் கட்சிக்காரரிடமிருந்து இழப்பீடைப் பெறவும் வழிசமைக்கும். அதனால் மூல படுக்கைத் துண்டைப் பார்த்து எனது அறிக்கையைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன் என்று கூறி மூல படுக்கைத் துண்டைத் தருமாறு கோருகிறார். மூல படுக்கைத் துண்டை குற்றச்சாட்டுத் தொடர்புநர் கோப்பிலிருந்து எடுப்பதற்கு அது அங்கே இருக்கவில்லை.

"என்ன இன்னுமா தேடுகிறீர்கள்?"

"நேரம் போய்க் கொண்டிருக்கிறது. இன்றியமை யா ஆவணமில்லால் என்னால் விசாரணையைத் தொடரவியலாது" என்றார் துளசிநாதன்.

பணிமனைப்பணி உதவுநரைக் கூப்பிட்டுக் கூறினார். "நகைச்சுவை" எதற்கும் நல்ல மருந்து. நோயாளிக்கு மருந்தை தவறிக் கொடுத்தால் ஆபத்து. நகைச்சுவையை கேட்பவர் நக்கலாக எடுத்தால் நீயும் ஒரு விசாரணையை எதிர்நோக்க வரும். உருவ அமைப்பையும், உடையையும் பார்த்து எவரையும் எள்ளாமை வேண்டும்.

பணிமனைப்பணி உதவுநர் கண்ணைப் புரட்டு வதன் காரணம் விளங்காமல் மற்றவர்கள் திகைக்கிறார்கள்.

# இன்னொரு பக்கம்

வழமை போலவே இன்றைக்கும் இரத்த அழுத்த சிகிச்சை நிலையத்தில் சனக்கூட்டம் அலைமோதியது. காலை 6.00 மணிக்கே இலக்கத் துண்டு எடுக்க ஆட்கள் வந்து விடுவார்கள்.



இன்றைக்கு அவள் வருவதற்கு தாமதமாகிவிட்டது. விடியற் காலையில் எழுந்து சோறு ஒரு கறியும் சமைத்துவிட்டு குழந்தைகளைப் பக்கத்து வீட்டு அம்மாவைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு ஆனைவிழுந்தான்குளத்திலிருந்து அக்கராயன் வரை நடந்தே வரவேண்டியதாயிற்று. வரும்போதே 10.00 மணியாகிவிட்டது. அந்த நேரத்திற்கே வெயில் சுள்ளென்று எரித்தது. "பிரசர"என்பது எவரையும் பயமுறுத்தும் வார்த்தை. படிக்காத பாமரருக்குக் கூட புரிகின்ற வார்த்தை. இப்போது 4,5 நாட்களாக அவளுக்கு தலை சுற்றல், சோர்வு இருக்கிறது. இரண்டு வருடமாகத் தொடர்ந்து "அல்டோமற்" குழுசை போட்டு வருகிறார். இன்றைக்கு குளிசை மாற்றித் தரக்கூடும். அல்லது அளவைக் கூட்டித் தரக்கூடும்.

இன்னும் எத்தனை காலத்திற்கு இப்படித் தொடராய் குளிசைகள் போட வேண்டியிருக்குமோ தெரியவில்லை. வைத்தியசாலையில் குளிசைகள் இல்லாமல் போனால் வெளியே காசு கொடுத்து வாங்க வேண்டியும் வரும். பிரச்சினைகளும் கவலைகளும் இருக்கும்வரை இந்தப் பிரசரும் இருக்கப் போகிறது. இந்த வருத்தம் ஏன் வந்து சேர்ந்தது என்று கவலையாக இருந்தது. இடையிடையே நெஞ்சுக்குள்ள நோகும் போது குழந்தைகளை விட்டுவிட்டு செத்துப் போய்விடுவேனோ என்ற பயம் எத்தனை நாட்கள் தோன்றியிருக்கிறது. அதனால் தான் கிளினிக்குக்கு தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கிறாள்.

அவள் உள்ளே நுழையும்போதே ஆட்கள் நிறைந்துவிட்டார்கள். அநேகமானவர்கள் நடுத்தர, முதிய வயதினர். அவள் ஆட்க ளை விலக்கிக் கொண்டு முன்புறம் சென்றாள். ஒரு பக்க மேசையில் வேணி மிஸ் அமர்ந்திருந்தார். தொடர்ந்து வருவதால் ஏற்பட்ட அறிமுகத் தினால் "என்னம்மா இன்றைக்கு பிந்திவிட்டது" என்று கேட்பா என்று எதிர்பார்த்தாள். எதுவும் கேட்காமல் இலக்கத் துண்டை அவளிடம் கொடுத்தாள்.

வேணி மிஸ்ஸுக்கு முகம் எப்போதும் மலர்ச்சியாக இருக்கும். எவ்வளவு கூட்டம் இருந்தாலும் சமாளித்து இதமாக கதைத்து ஒழுங்குபடுத்தி அமரவைத்து விடுவார். ஆனால் இன்றைக்கு என்னவோ அவவின் முகம் சோர்ந்து போயி ருந்தது.

பின் வரிசையில் வந்து அமர்ந்து கொண்ட அவள் சுற்று முற்றும் பார்த்தாள். அநேக மானவர்கள் அறிமுகமான மனிதர்கள். "கிளினிக்" இல் கதைத்து சிநேகிதமானவர்கள் அலுப்பு, சலிப்பு, சோர்வு, கவலை சூழ்ந்த முகங்கள்.

மேலே கூரையால் வேய்ந்த நீளமான கொட்டகைக்குள் நீள நீள வாங்குகள் நோயாளருக்குப் போடப்பட்டிருந்தது. முன்புறமாக ஒரு பக்கத்தில் வைத்தியருக்கு மேசை போடப்பட்டிருந்தது. அதன் முன்புறமாக நீல நிறத் துணியால் திரை தொங்கியது. இன்னும் வைத்தியர் வரவில்லை.

மறுபக்கம் மேசையில் வேணி மிஸ் அல்லது சுகந்தி மிஸ் அமர்ந்திருப்பார்கள்.

சுகந்தி மிஸ்ஸிற்கு குழந்தை பிறந்திருப்பதாக பக்கத்திலிருந்த பெண் சொன்னாள். இருவர் நின்றாலே சமாளிப்பது கஷ்டம். வேணி மிஸ் இன்றைக்கு எப்படித்தான் தனியச் சமாளிக்கப் போகிறாவோ தெரியவில்லை. சுகந்தி மிஸ்ஸின் இடத்திற்கு பணி செய்ய வேறு ஊழியரும் இருக்கமாட்டார்கள். எல்லோருக்கும் மூச்சு முட்டும் அளவுக்கு வேலைச்சுமை இருக்கும்.

11.00 மணியானபோது கொட்டகைக்குள் போட்ட வாங்குகள் நிரம்பி வெளியேயும் ஆட்கள் நின்றார்கள். சிலர் வாங்கில் படுத்துக் கொண்டார்கள். கிளிநொச்சிக்கு அநேகமான வர்கள் மீளக் குடியேற போன பிறகும் கூட இங்கே சனத்துக்கு குறைவிருக்கவில்லை. எல்லோரும் தங்கள் தங்கள் வருத்தங்களைப் பற்றி கதைத்துக் கொண்டார்கள். "டொக்டர் வர நேரம் செல்லும் போல இருக்கு. வாங்கோ ஒரு ரீ குடிச்சிற்று வருவம்'' என்று சொல்லிக் கொண்டே தெரு கடந்து சிலர் போனார்கள்.

"டொக்டர் வர நேரம் செல்லுமோ'' வாங்கிலிருந்த பெண்கள் வேணி மிஸ்ஸிடம் விசாரித்தார்கள்.

டொக்டர் இனி வந்திடுவார். மிதிவெடியில காலகற்றப்பட்ட ஆளை கிளிநொச்சியில இருந்து கொண்டு வந்திருக்கினம். அது தான் டொக்டர்மார் பாக்கினம். நாலைஞ்சு பேர் தானே எல்லாத்தையும் கவனிக்க வேண்டும். அங்கே ஓ.பி.டி. இலயும் ஆக்கள் குவிஞ்சு போயிருக்கினம். டொக்டர் வாட்டும் பாத்திட்டுத்தான் வரவேண்டும். நீங்கள் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கோ வந்திடுவார்.

"வீட்டில பிள்ளைகள தனிய விட்டிட்டு வந்திருக்கிறம். நேரம் போகுது. ஆளுதவி இல்லாதவை தான் இங்க கனக்கப் பேர் இருக்கினம். எல்லாம் சமாளிக்கத்தான் வேண்டும்.

"நீங்கள் சொல்லுவீங்கள் எங்களுக்கெல்லோ கஷ்டம் தெரியும்''

சட்டென்று நிமிர்ந்து அப்படிக் கூறிய பெண்ணை ஒரு தடவை பார்த்துவிட்டு வேணி மிஸ் தலையைக் கையால் தாங்கியபடி மௌனமாக அமர்ந்துவிட்டா.

வேணி மிஸ்சும் இன்றைக்கு ஏதோ ஒரு அவசரத்தில் இருப்பதாகத் தான் தோன்றியது. இந்தப் பரபரப்பும், சோர்வும் அவவின் இயல்பல்ல. அடிக்கடி நேரத்தைப் பார்ப்பதும், வாசலைப் பார்ப்பதாகவும் இருந்த வேணி மிஸ்ஸை அவள் கொஞ்சம் கவலையோடு பார்த்தாள்.

தெருவில் புழுதி பரப்பிக்கொண்டு வாகனங்கள் ஓடின. வெய்யிலின் வெம்மையில் முகமெல்லாம். எரிந்தது. அவளுக்குத் தொடர்ந்து இருக்க முடியாமல் நாரி பிடித்துக்கொண்டது. எழுந்து சனக் கூட்டத்துக்குள் உலவமுடியாது. இத்தனை பேருக்கும் இந்தப் பிரசர் ஏன் வந்தது. அவளைப் போலவே கண்ணீரோடும், கவலையோடும் தான் இவர்களும் வாழ்கிறார்களா?.

மூன்று வருடத்திற்கு முன் கிளிநொச்சியில் வீடு பார்க்க என்று போன கணவன் திரும்பவில்லை. வருவான் வருவான் என்று எதிர்பார்த்து அழுது அழுது கொணடிருப்பவள் அவள். அவளுக்கென்று இந்த வருத்தமும் வந்து சேர்ந்த வேதனையை எங்கே சொல்லி அழமுடியும்.

நினைத்தவுடனும் கண் விளிம்பில் நீர் நிரம்பிவிடும். அவள் ஒரு பெரு மூச்சுடன் நிமிர்ந்து அமர்ந்தாள். 12.00 மணிக்கு டொக்டர் வாறார் என்று பரபரத்துக் கொண்டே வாங்கில் நெருக்கிக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். அவள் பின்பக்கம் திரும்பி வாசலைப் பார்த்தாள். அவசரமாக உள்ளே வந்த வைத்தியர் ஆட்களைக் கடந்து தன்னுடைய மேசையில் போய் அமர்ந்தார். விலகிய திரையின் வழியே அவர் சிறிய வெண்ணிற கைக்குட்டையால் வியர்த்துப்போய் இருந்த முகத்தைத் துடைப்பது தெரிந்தது. வேணி மிஸ்ஸைப் பார்த்து ஆட்களை அனுப்பும்படி தலையை அசைத்தார்.

□கொஞ்சம் வரிசையில அப்படியிருங்கோ ஏனய்யா இடையில எழும்புறீங்கள். எல்லாரையும் டொக்டர் ஐயா பார்ப்பார். வரிசையில வாங்கோ'' வேணி மிஸ் முன் நின்று ஒவ்வொரு வரையும் அழைத்துப்போக கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

வீட்டில் விட்டு வந்த குழந்தைகளின் நினைவு. வந்து சாப்பிட்டார்களோ என்னவோ. குழப்படி செய்யாமல் இருக்கிறார்களோ என்னவோ. இன்றைக்கு மருந்து எடுத்துக்கொண்டு போக நன்றாக நேரம் போகப்போகிறது.

வைத்தியரும் என்னதான் செய்வார்? அவருக்கும் எத்தனை அலுவல்களைப் பார்க்க வேண்டியிருக் கிறது. அவரும் சாப்பிட்டாரோ என்னவோ?

வரிசை நகர்ந்து கொண்டிருந்தது. வயிற்றில் பசி எழுந்து அடங்கிவிட்டது. தொண்டை வரண்டு போக தண்ணீராவது குடிக்கவேண்டும் போல் இருக்கிறது. இவ்வளவு நேரமும் இருந்தாகி விட்டது. இன்னும் கொஞ்ச நேரந்தானே.... 3.00 மணிக்கு மேலாகிவிட்டது. அவள் அறிந்தவரை வேணி மிஸ் கூட அங்கே இங்கே என்று அசைய வில்லை. இந்தப் பசியும் தாகமும் அவவுக்கும் இருக்கும் தானே..... மிஸ்ஸின் முகத்தைப் பார்க்கும் போது ஏதோ யோசனையிலும், கவலையிலும்இருப்பதாகத்தான் தோன்றியது. வழமைக்கு மாறான ஒரு பரபரப்பும் தவிப்பும் அவவின் முகத்தில் தென்பட்டது. பாவம் என்னென்ன பிரச்சனைகளோ..... தனியே நின்று பணி செய்ததில் ஏற்பட்ட களைப்பு முகத்தில் தெரிந்தது. வரிசை நகர்ந்து அவளின் முறை வந்து உள்ளே போனபோது மூன்றரை மணியாகிவிட்டது.

இரத்த அழுத்தம் சோதித்து நிலைமைகளை ஆதரவாய் கேட்டு குளிசையை அளவு கூட்டி எழுதிக் கொடுத்தார்.

யோசிக்கக் கூடாது அம்மா. உப்பு, கொழுப்பு குறைத்துச் சாப்பிட வேண்டும். சாப்பாட்டில் கவனம் இருக்க வேண்டும்'' அவரின் இதமான குரல் மனதைத் தொட்டு உலுப்ப உள்ளுக்குள் எதுவோ நொருங்கியது போலிருந்தது. யோசிக்காமல் எப்படியிருக்கிறது. என்ற வார்த்தை தொண்டைக்குள் வந்து சிக்கிக்கொண்டது. கண்கள் நிரம்பி ஒரு துளி வழிந்தது. "கவலைப்படக் கூடாது அம்மா. எல்லாம் மாறிவிடும்'' அவள் மௌனமாய் தலை அசைத்து விட்டு எழுந்து வெளியே வந்தாள்.

இப்போது வெயிலின் வெம்மை சற்றுத் தணிந்திரு ந்தது. தெரு கடந்து வைத்தியசாலையின் உள்ளே மருந்து எடுக்கும் இடத்தக்கு வந்தாள். வரிசையில் நின்று மருந்து எடுத்துவர 4.00 மணிக்கு மேலாகிவிட்டது. அப்பாடா இனிப் போகலாம் என்று நினைத்த போது தான் பக்கத்து வீட்டு உமா தன் குழந்தையை காய்ச்சல் என்று வாட்டில் வைத்திருப்பது ஞாபகத்திற்கு வந்தது. இவ்வளவு நேரம் நின்றாகிவிட்டது. பார்வையாளர் நேரம் எட்டிப் பார்த்துவிட்டுப் போகலாம் என்ற நினைவில் உள்ளே விறாந்தையால் நடந்து போனாள்.

மருந்து வாசனை முக்கதில் அடிக்க நோயாளர் களின் முனகல் கடந்து குழந்தைகள் வார்ட்டிற் குள் நுழைந்தாள். உமா நிற்பதைப் பார்த்துவிட்டு கட்டிலை நெருங்கினாள். உமாவின் மகன் சிறிது தெளிந்த முகத்துடன் படுத்திருந்தான். உமா கையில் மூன்று வயது குழந்தையைத் தூக்கி வைத்து சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள். அழுததில் குழந்தையின் கண்களும் முகமும் சிவந்து போயிருந்தது.

"அம்மா... அம்மா..." என்ற முனகல்........

"அழக்கூடாது அப்பன் அம்மா இப்ப வந்திடுவா"

"ஆற்ற குழந்தை இது...."

"பக்கத்து கட்டிலில இருக்கிற குழந்தை. மூளை மலேரியா என்டு வாட்டில இருக்கிற பிள்ளை. இண்டைக்கு காய்ச்சல் விட்டிட்டுது. ஆனால் அம்மா அம்மா என்று ஒரே சிணுங்கிக் கொண்டி ருக்குது. இண்டு முழுக்க நான் தான் பாத்துக் கொள்ளுறன். பக்கத்தில நிக்கிறனான்.

இது கூடச் செய்யேலாதே.... இனித் தாய் வந்திடுவா. பாவம் ஆளுதவி இல்லாதவர். அதுதான் நான் பார்க்கிறன்.''

''ஏன் குழந்தையின்ர தாய் எங்க?''

அவள் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே அவசர அவசரமாய் ஓடிவந்த வேணி மிஸ் குழந்தையை உமாவிடமிருந்து வாங்கிக் கொண்டு ''சரியாய் அழுதிட்டானா? என்ன செய்யிறது லீவு எடுக்கிறது சரியில்லை. அங்க ஒரே சனம். கிளினிக் முடிய நேரமாய்ச்சுது. மாறிவிடவும் ஆளில்லை. விட்டிட்டு வரவும் ஏலாது. அதுதான்''

கண் கலங்க குழந்தையைத் தோளில் சாய்த்துக் கொண்டு

''அழாதை அப்பன். அம்மா வந்திட்டன் அல்லோ''

என்று முதுகைத் தடவிக் கொடுத்தா. தாயின் கழுத்தை கட்டிக் கொண்ட குழந்தையின் விசும்பலை அவள் திகைப்போடும் கவலையோடும் பார்த்துக் கொண்டாள்.

தாமரைச்செல்வி,
ஸ்கந்தபுரம்.

# நலன் காக்கும் கரங்கள்

11.11.2001

**ஓர் பார்வை**

## திரு. கு. கணேசபிள்ளை,

மக்கள் மத்தியில் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் அரங்கேறிய "நலன் காக்கும் கரங்கள்" என்ற நிகழ்வு பலராலும் வரவேற்கப்பட்டு பாராட்டப்பட்ட நிகழ்வாகும்.



கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி அவர்களின் எண்ணக் கருவில் உருவான உதவித் தாதிய உத்தியோகத்தருக்கான பயிற்சி நெறியைப் பயின்ற மாணவர்களின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நலன் காக்கும் கரங்கள் என்னும் அரங்க நிகழ்வும் 11.11.2001 அன்று கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையின் நாலாம் ஆண்டுப் பொதுக் கூட்டத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டு ஆர்வலர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

சமூக சுகாதார அபிவிருத்திச் சபையின் மக்கள் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு, வைகறை ஒன்றின் வரவை சேவல் செப்புவது போல அறிவிப்புகள், அரங்க நிகழ்வுகள் பற்றிய பரபரப்பு அற்புதமான அரங்க அமைப்பு அம் மாவட்டத்தில் என்றும் கண்டிராத அரங்க அலங்காரம். உரிய நேரத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாக ஒவ்வோர் நிகழ்வுக்கும் உரியவர்கள் துரிதமாகத் தயாராகின்றார்கள். அரங்க நிகழ்வின் அறிமுகத்தை நற்றமிழ் நயத்துடன் சோதீஸ்வரன் அவர்கள் வழங்க அது சுற்றிலும் எதிரொலியாகப் பரவியது.

சற்றே திரும்பிப் பார்த்த போது அப்பப்பா அரங்கம் நிறைந்த பார்வையாளர்கள் கலைஞர்களாக நின்ற வைத்தியசாலை ஊழியர்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், அன்னை இல்லத்தினர் அனைவரிடமும் எல்லை இல்லா மகிழ்ச்சி ஒரே மேடையில் "நலன் காக்கும் கரங்கள்" வழங்கிய சிந்து நடைக்கூத்து, தாளலயம், வில்லிசை, நாடகம், மெல்லிசை எனப் பல கலை வடிவங்களில் சங்கமம். நானும் எமது சக ஊழியர்களும் கலந்து கொண்ட பாத்திரங் களை மறக்க முடியாது.

அதை நாங்கள் திரும்பத் திரும்பப் பார்த்து மகிழ்வதற்கு ஒளிப்பதிவு ஏற்பாடு எந்நேரமும் பார்த்து மகிழ நிழற்பட ஒழுங்குகள் யாவும் எம்மனதிற்கு திருப்திகரமாக அமைய ஓர் விடயத்தை தெளிவாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஆம், மக்கள் நோய்வாய்ப்பட்டு வரும்போது நாம் கருத்துக் கூறும்போது ஆர்வமாக ஏற்றுக் கொள்கிறார்களோ இல்லையோ. இவ்வாறான நிகழ்வுகளோடு கருத்துக் கேட்க ஆவலாக உள்ளார்கள். இவ்வாறான நிகழ்வுகளின் மூலம் சமூகத்துடன் இணைந்த செயற்பாட்டை வைத்தியசாலை நிறுவனங்கள் வழங்குவதுடன் மக்களுடன் நெருக்கமாகும் உணர்வு மேம்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக ஊழியர்களின் ஒற்றுமை, ஒன்றிணைந்து காரியங்களை நிறைவேற்றும் பண்பு என்பன மேம்பட எல்லோரும் ஒரு குடும்பம் என்ற உணர்வு மேலிட்டு நின்றதென்றால் அது மிகையாகாது. அத்தோடு இப் பிரதேசத்தின் வாத்தியக் கலைஞர்களின் சலியாத ஒத்துழைப்பும், எமக்கு புதிய நட்புக்களம் அமைத்துத் தந்தது இந் நிகழ்வுக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிதியாதரவு வழங்க இப் பிரதேசத்தின் அநேக நிறுவனங்களும், பாடசாலைகளும், கல்வித் திணைக்களமும் பேருதவி புரிந்து நின்றன. நாம் இப்போ பூரண சமூக சங்கமத்தில் இருப்பதை உணர்ந்தோம். சொல்லப்போனால் எங்கள் சந்தோசத்திற்கு அளவேயில்லை. ஒவ்வோர் நிகழ்விலும் கலந்து சிறப்பித்தவர்கள் நன்றிக் குரியவர்கள். குறிப்பாக "மூடநம்பிக்கை" என்ற நாடகத்தை வளப்படுத்திய வைத்தியசாலை ஊழியர்கள் அனைவரையும் மறக்கமுடியாது.

நிகழ்வின் மகுடமாக அமைந்த "நலன் தரும் சுரங்கள்" எனும் இன்னிசை நிகழ்விற்குபாடல்கள் வளம் சேர்க்க இதில் வைத்திய அதிகாரிகளும் அருட் தந்தை றெஜினோல்ட்டும் இணைந்து கொண்டதும் மேலும் சிறப்புச் சேர்த்தது. இவ்வாறான ஓர் சிறப்பான நிகழ்வை ஏற்பாடு செய்த சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின் சமூக சுகாதார பார்வை என்றும் பாராட்டுதலுக்குரியது.




கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டின் நிறைவில் அதன்சேவையை வாழ்த்துகின்றோம்.



நினைவழியா நிகழ்வின்

திருப்பதி

வர்ணப்பதிவுகளுக்கு

ஒளிப்படக்கலையகம்,

இல 89, கந்தபுரம், கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டு நிறைவில் அதன் பணி தொடர வாழ்த்துகிறோம்.

தரமான அரிசி (நாடு), (சி.பச்சை), புரியாணி உணவைத்தயாரிக்க உகந்த
சம்பா அரிசி மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நெல் குற்றவும், மிளகாய்த்தூள்,
மாவகைகள் அரைக்கவும்
நீங்கள் நாட வேண்டிய இடம்**

# முறிகண்டிப் பிள்ளையார்



# அரிசி



# ஆலை

**கோணாவில் வீதி கந்தபுரம்.**



சபையால் புதிதாக அமைக்கப்பட்ட விடுதி- 1998



'நலன் காக்கும் கரங்கள்' அரங்க நிகழ்வு



# காடாக்கு

**பொன் கணேசமூர்த்தி,**
மக்கள் வங்கி, பரந்தன்.

அந்தப் பொடியனைப் பார்க்க எனக்குப் பாவமாகத் தான் கிடந்தது. என்ன செய்ய?. ஓரடி கையால் எடுத்து வைக்கேலாமல் பலவீனமாகக் கிடந்ததால, கொட்டில் பிள்ளை --யாரின் கோயிலில குந்திக் கொண்டிருந்தன். நாலு நாளாக எனக்கு ஒரே நடுக்கம். அது சாப்பிடாத நடுக்கமோ? மலேரியா நடுக்கமோ தெரியேல்லை. எதுக்கும் நாலு குளிசை வாங்கி குடிச்சுப் பாப்பம் எண்டு வந்தா சனங்கள் எனக்கு மேலாக நடுங்கிக் கொண்டு வாங்குகளில் இருக்குதுகள். போட்டி போட்டு முன்னால போக என்னட்ட வலுவில்ல. பேணி குலுக்கிச் சீவிக்கிற எனக்குச் செல்வாக்குச் செய்யவோ, பரிதாபம் காட்டவோ ஆரிருக்கினம்?. ஆரைப் பாக்கிலும் பேணி குலுக்கப் போறன் எண்ட பயத்தில என்ரை பக்கம் பாக்காமலே போயினம். இந்தப் பேணியை சத்தமாகக் குலுக்க ஒரு அஞ்சு பத்துச் சதம் கூட அதுக்குள்ள இல்ல எண்டு ஆருக்குத் தெரியும்?. பிள்ளையாரப்பாவுக்காவது தெரியுமோ என்னமோ. நான் பேசாமல் பார்த்துக் கொண்டிந்தன். அவனும் என்ர கொம்பனிதான் போல..

ஒட்டின வயிறு சோறு கண்டு ரெண்டு நாளுக்கு மேலயெண்டு ஆருக்கும் சத்தியம் செய்வன். அப்பிடி வரண்டு போய்க்கிடக்குது முகம். ம்... ஆரோ பள்ளிப் பெடியன் பழுதெண்டு எறிஞ்ச றொட்டி. கட்டின காற்சட்டை இடுப்பிலிருந்து கீழ விழ அவன்ர கை அதை இழுத்து இழுத்து மேல விடுகுது... எனக்குச் சாடையாச் சிரிப்பும் வந்தது தான், அந்தப்பெடியன் பள்ளி நிழலில பகிடிக்கும் ஒதுங்கியிருக்க மாட்டான் எண்டு பிள்ளையார் அப்பாவில பந்தையம் கட்ட நான் தயார். ஆனா என்னோட பந்தையம் கட்ட ஒருத்தரும் தயாரா இருக்க மாட்டினம், அரை லூசன், பிச்சைக் காரனெண்டு அவைக்கொரு நினைப்பு.. "அய்யோ... அய்யோ... ஊதுது.... வெடிக்கப்போகுது.. என்ர அய்யோ..." எண்டு குளறிக் கூத்தாடுகிறான் பெடியன், கவனிப்பார்தான் இல்லை... எட இந்தச் சனங்கள் கொஞ்சம் விலகிக்கொடுத்து டாக்குத்தர் ஐயாவிட்ட காட்ட விடலாந்தானே...?

எனக்கு சாடயா கோவம் வந்தது உண்மைதான்

ஆண்டிக்கு கோவம் வந்தென்ன?.... ஆகாயம் விரிஞ்சு இடங்குடுக்கப் போகுதோ.....

சும்மா பாத்துக் கொண்டிருந்தன்.....

சனங்கள் தான் என்ன செய்வது.....?

திண்டு குடிக்க ஒண்டும் இல்லாததாலேயே கண்ட கண்ட வருத்தம் வருகுது. இந்த வன்னிச் சனங்களுக்கு... சோறில்லை... தண்ணியில்லை... மருந்தில்லை.... மாயம் இல்லை... கண்டறியாத சுமை.... அதுகளுக்கு என்னென்ன கவலையோ?....

"என்னடா பொடியா.... ஏன்ரா குளறிக் கூத்தாடுறாய்? வருத்தத்தில குத்துதோ... வயித்துக்க ஒண்டும் இல்லாததால குத்துதோ...?"ஆர் கேக்கப் போயினம்....?

பிள்ளையாரப்பாவை பாத்தன்.... அடக்க ஒடுக்கமா அசையாம இருக்கிறார்.... நாலு கேள்வி அவரை நாக்குத் தெறிக்க கேட்க வேணுமெண்டு மனம் எண்ணுது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

அடப் போடா... நானே அரைப்பட்டினி.... பேய்க் கேள்விகள் கேட்காம.... இருந்தால் ஒரு பத்துச் சதம் உண்டியலில போடு... ஐயராவது ஒரு

கொழுக்கட்டை வைப்பார்...

பிள்ளையாரப்பா உப்புடிக் கேட்டாலும் கேப்பாரெண்டு நினைக்க "சுழுக்கெண்டு" சிரிப்பு வந்தது... சிரிச்சிட்டன்... ஆனால் அரைச்சிரிப்பில வாயைப் பொத்தி அடக்க வேண்டி வந்திட்டுது...

ஐயோ டாக்குத்தர் ஐயா....

என்னை ஒரு ரெண்டு செக்கன் பாத்; து... பிறகு மெல்லீசா.... அடக்கமா... ஒரு சிரிப்பு சிரிச்சிட்டு கம்பீரமா நடந்து போறார் டாக்குத்தரய்யா.

எனக்கு பெருமையாய் இருக்காதே...

டாக்குத்தரய்யா பச்சை பசுந்து... ஆளைச் சும்மா பாத்தாலே அரைவாசி நோய் அய்யோ அய்யோ என்று ஓடும்... அவர் பாத்தா மிச்சமும் ஓடும் எண்டு ஆக்கள் கதைக்கிறவை.

ஆளுக்குப் பின்னால ஓடிப்போய்க் காட்ட எனக்கு ஆசைதான்... என்ன செய்யிறது...? ரெண்டு காலும் இல்லாம என்னெண்டு ஓடுறது...? ம்... என்ரை கதை என்னத்துக்கு? மிதிவெடியை மிதிச்சு முழங்காலோட ரெண்டு காலும் போச்செண்டால் சனம் என்னத்தை செய்து கிழிக்கப் போகுது...

"ஆ... அப்பிடியே... ஐயோ... பாவம்..." எண்டிட்டு போய்க்கொண்டு இருக்கும்... என்ரை கதை வேற... அதை விடுவம்... டாக்குத்தரய்யா நல்ல மனுசன். ஒரு நாள் வாட்டில கிடந்த கிழவி ஒண்டுக்கு காலும் கையும் இழுத்துப் போட்டுது... அதுக்காக தலைப் பேன் கடிக்காம விடுமே... மனிசி கஷ்ரப்பட மற்றவை கடிக்க அப்பத்தான் வாட் றவுண்ட் வந்த டாக்குதரய்யா

"என்னண பேன் கடிக்குதோ... எங்க பாப்பம்..." எண்டு சொல்லி நாலு பேருக்கு முன்னால கிழவியின்ரை தலையைத் தடவி ஆறுதல் சொல்ற மனுசன் எண்டா பாருங்கோவன்... வேற கதை என்னத்துக்கு... மனுசன் தங்கக் கம்பி...

" அய்யோ... அய்யோ... வெடிக்கப் போகுது..." எண்டு பொடியன் திரும்பத் துவங்கி குந்தி எழும்பி குழறிக் கூத்தாட பெரிய டாக்குதரய்யா அவனைக் கண்டிருப்பார் போலும்... அட பக்கத்தில போறார்...

நான் காதைத் தீட்டிக் கொண்டன்... பசியால காது அடைச்சுப் போய்த்தான் கிடக்கு... எண்டாலும் பரவாயில்ல ரெண்டு பேரும் கதைக்கிறது எனக்கு கேட்குது...

"தம்பி... என்னப்பன் செய்யுது..."

"குத்துது... வயித்துக்க குத்துது... இஞ்ச பாருங்கோ என்ர வயிறு வீங்குது... அய்யோ... வெடிக்கப் போகுது..." பொடியன் துடிச்சுத் துடிச்சு அழுகிறான்... எனக்கும் அழுகை வாற மாதிரித்தான் இருந்தது... கண்ணில தண்ணி இருந்தாத் தானே...

"ஏன் வீங்குது எண்டு சொல்லுறாய்... வீங்கத்தக் காணேல்ல..."

"அய்யோ... பேக்கு கழிச்சதை திண்டு போட்டன்... எனக்கு வயிறு வெடிக்கப் போகுது..."

பெடியன் பிடிவாதமாய்ச் சொல்லிச் சொல்லி அடம்பிடிச்சு அழுறான். டாக்குதரய்யா அவன்ரை தோளைப் பிடிச்சுக்கொண்டு கேட்கிறார்.

"அப்படி என்ன சாப்பிட்டனி?"

"ஒரு வடை... ம்... ஒரு வாழைப்பழம்... பிறகு புக்கை... பலகாரம்..."

"தம்பி இதுகளைச் சாப்பிட்டா வயிறு வெடிக்கும் எண்டு ஆர் சொன்னது...

"அம்மா சொன்னவ... ஆச்சி சொன்னவ... அப்புவும் சொன்னவர்... ரெண்டு நாளா பசி... அதுதான் பேக்கு கழிச்சதை திண்டிட்டன்... அய்யா... என்ரை வயிறு வெடிக்கப் போகுது... அய்யோ... அய்யோ..." பொடியன் அழுது ஆர்ப்பாட்டம் செய்ய... பெரிய டாக்கதரய்யா ஆரையோ பேர் சொல்லிக் கூப்பிடுறார்...

பிறகு என்ன நடந்தது எண்டு எனக்குத் தெரியாது... கவலையும் இல்லை... நடுக்கம் நிண்ட மாதிரி... காச்சல் குறைஞ்ச மாதிரி... பேணி குலுக்காம வாழ வழி தெரிஞ்ச மாதிரி... எனக்குள்ள மின்னல் மின்னலா அடிக்கத் துவங்க

பிள்ளையாரப்பாவ பாத்தன்

“பெடியனை அவர் காப்பாத்துவார்... நீ உன்னைக் காப்பாத்து...” போ போ எண்டு எனக்குள்ள அவர் குறுகுறுக்க

என்ரை பேணியை அப்பிடியே வைச்சிட்டு என்னால முடிஞ்ச வேகத்தில நடக்கத் துவங்கினன்... கையால

ஏன் எண்டு கேட்டா என்னண்டு பதில் சொல்றது?

நீட்டிற கையில ஏதாவது விழுந்தா நான் ஏன் அங்க போகவேணும்... எண்டாலும் சொல்றன்.

இண்டைக்கு எனக்குத் தெரியிற வழி ஏழு கட்டைக்கு அங்கால... கையால நடந்து போக இருட்டத் துவங்கிவிடும்...

கண்ணகைபுரம் கந்தய்யர் செமியாக் குணத்தில நேத்துச் செத்தது தெரியுந்தானே... அவருக்கு இண்டைக்கு காடாத்து...

கழிச்சுப் போடுறதை பேய் திண்டால் என்ன... நான் திண்டால் என்ன...

# வாய்ச்சுகாதாரமும் நாமும்

வைத்திய கலாநிதி
மா.தவராஜா

வாய்க்குழியானது உணவுக் கால்வாயின் ஆரம்பப் பகுதியாக அமைகின்றது. வாய்க்குழியினுள் பல வகையான அமைப்புகள் காணப்படுகின்றன. பற்கள், முரசு, நாக்கு, மேலண்ணம், மெல்லண்ணம், உதடுகள் என்பன அவற்றில் முக்கியமானவையாகும்.

அன்றாட வாழ்வில் நாம் காணக்கூடிய பொதுவான வாய்க்குழியில் காணப்படும் நோய்களாக பற்சூத்தை, பற்சுற்றிழையத்தைத் தாக்கும் நோய்கள் என்பன அமைகின்றன. எமது மக்களை நோக்குமிடத்து இவ்விரு நோய்களில் பாதிக்கப்படாதவர்களே இல்லையெனும் அளவிற்கு இவ்விரு நோய்களும் வியாபித்துக் காணப்படுகிறது. இன்று வைத்தியசாலையில் பற்சிகிச்சை பெறுபவர்களில் ஏறத்தாழ 95% இற்கு மேற்பட்ட நோயாளர்கள் இவ்விரு நோய்களில் ஒன்றிற்கோ அல்லது இரண்டிற்குமோ சிகிச்சை பெறுபவராகவே காணப்படுகின்றனர். இருந்த போதிலும் இந்நோய்கள் சம்பந்தமான அறிவு அவர்கட்கு பூச்சியமாகவே காணப்படுகின்றது. பெரும்பாலான நோயாளர்கள் இந்நோய் சம்பந்தமான விழிப்புணர்வை பெற்றுக் கொள்வதில் ஆர்வமாக இருப்பதில்லை. அவர்கள் தமது உடனடித் தேவையை நிறைவேற்றுவதிலேயே அக்கறையாகக் காணப்படுகிறார்கள். நோயாளியானவர் தமக்கேற்பட்ட வேதனையில் இருந்து விடுபடவே முயல்கிறார். அது ஏன் ஏற்பட்டது? எவ்வாறு தவிர்க்கலாம்? என்பதை அறிய பொதுவாக முயற்சிப்பதில்லை. இந்நிலையில் எமக்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவது சுகாதாரக்கல்வி ஆகும்.

ஒரு பற்சிகிச்சை நிலையமானது சுகாதாரக் கல்வியை மக்களுக்கு ஊட்டுவதற்கு பொருத்தமான நிலையமாக அமைய மாட்டாது. ஏனெனில் பற்சிகிச்சை நிலையத்தில் காணப்படும் உபகரணங்கள், அதன் அமைப்பு என்பன பொதுவாக மக்களுக்கு பயத்தை ஏற்படுத்தவனவாகவே காணப்படுகிறது. பல் வலியில் வரும் ஒருவர் நாம் கூறும் சுகாதாரம் சார்ந்த கருத்துக்களை கவனத்தில் கொள்ளும் மன நிலையிலும் இருக்கமாட்டார். எனவே இவ்வாறான கருத்துக்கள் பாடசாலைகளினூடாக சிறு வயதிலிருந்தோ அல்லது உரிய சுகாதாரக்கல்வி நிலையங்களினூடோ புகுத்தப்படுதல் சாலப் பொருத்தமாகும். சஞ்சிகை, பத்திரிகைகளினூடும் இக் கருத்துக்கள் மக்களைச் சென்றடைய முடியும். இங்கு தாம் பற்களைத் தாக்கும் பொதுவான இரு நோய்களைக் கவனிப்போம்.




**பற்சூத்தை**

இது ஒரு வகை பற்றீரியாவால் ஏற்படும் கிருமித் தொற்றாகும். இது நாம் அன்றாட வாழ்வில் பாவிக்கும் வெல்லத்தின் அளவில் தங்கியுள்ள ஒரு நோயாகும். ஒழுங்கற்ற பற்சுகாதாரம் உள்ள ஒருவரில் மஞ்சள் நிறமான ஒட்டும் தன்மையான பதார்த்தமானது பற்களிலோ அல்லது பல் ஈறுகளிலோ படிய ஆரம்பிக்கின்றது. இப் பதார்த்தமானது முற்று முழுதாக பற்றீரியாக்களினால் நிறைந்து காணப்படும். இது பிளாக் (Plaque) என அழைக்கப்படுகிறது.

இப் பிளாக்கானது தகுந்த முறையில் பல் துலக்குதல் மூலம் அகற்றப்படக் கூடியது. பற்சூத்தை ஏற்படுவதற்கு பின்வரும் நான்கு காரணிகள் அவசியம்.

வெல்லப் பதார்த்தமானது முதலில் பற்களில் இயற்கையாகக் காணப்படும் சிறுகுழி, தவாளிப்பு களில் தங்கி நிற்கும். Plaque இல் காணப்படும் பற்றீரியாவானது அக்கீழ்ப் படையை தனது உணவாகப் பாவிக்கும் போது லக்ரிக் (Lactic Acid) அமிலம் ஆனது விளைவாக உருவாகும். இவ் அமிலமானது பற்களிலிருந்து கல்சியம், பொசுபேற் என்பனவற்றை வெளியேற்றும். இது முதலில் பல்லின் மிளிரிப்பகுதியிலேயே நிகழும். ஆரம்பத்தில் ஏற்படும் இந் நிலையானது பற்களின் மேற்புறத்தில் வெண்ணிறப் புள்ளியாகக் காணப்படும். இது மிளிரியில் ஏற்படும் பற்சூத்தை என அழைக்கப்படும். (Enamel Caries).



இந்நிலையில் ஒழுங்கான பற் சுகாதாரத்தை பேணுவதன் மூலம் மிளிரியில் ஏற்பட்ட இப்பற் சூத்தையானது பன் முதலினுள் செல்லாது தடுக்க லாம். மிளிரியில் ஏற்படும் பற்சூத்தைக்கு சிகிச்சை எதுவும் அவசியமில்லை. சிறந்த பற்சுகாதார முறைகளைப் பேணுதலே போதுமானது.

பன்முதலினுள் (Dentine) பற்சூத்தையானது போகுமிடத்து அது ஒரு குழியை ஏற்படுத்தும். இந்நிலையில் சிகிச்சை அவசியம். பொருத்த மான முறையில் பல்லை அடைப்பதன் மூலம் பல்லைப் பாதுகாக்க முடியும். பன் முதலினுள் உருவான இக்குழியானது நாம் சிகிச்சைக்கு உட்படாத விடத்து மென்மேலும் விருத்தியடை ந்து பன்மச்சையைத் தாக்கும். பன்மச்சையானது நரம்புகள், குருதிக்குழாய்கள் என்பனவற்றைக் கொண்ட உயிர்ப்பான பகுதியாகும். பன் மச்சை யைத் தாக்குமிடத்து பல் வலியானது உருவாகி ன்றது. இந் நிலையில் பல்லானது இரண்டு வகையான சிகிச்சைக்கு மட்டுமே உட்பட முடியும்.

**01.** பல் வேரினை உட்புறமாக உரிய முறையில் சுத்தம் செய்து அடைத்தல் (Root Canal Treatment)

**02.** பல் கழற்றப்படுதல்.

**பற்சூத்தையை வருமுன் காத்தல்**

உணவு சம்மந்தமான அறிவுரைகள்

01. வெல்லப் பதார்த்தங்கள்உண்ணாது தவிர்த்தல். சொக் லேட் மற்றும் இனிப்பு வகைகளை சிறு பருவத்திலிருந்தே பிள்ளை கட்கு அறிமுகம் செய்யாது விடுதல். அவ்வாறு உட்கொள்ளும் சந்தர்ப்பத்தில் பற்தூரிகை கொண்டு பற்சுத்தம் செய்த பின் உணவு உண்ணுதலைத் தவிர்த்தல்.

02. பற்சுகாதாரம் சம்பந்தமான அறிவுரைகளை வழங்குதல். பற்களில் பிளாக் படியாதவாறு எவ்வாறு பல் துலக்க வேண்டும் என்பதை செய்முறை மூலம் விளக்குதல்.

03. பற்சூத்தையானது குழிகள், தவாளிப்புகள் இயற்கையாக அமைந்த கடவாய்ப் பற்களிலேயே இலகுவாக உருவாகின்றது. முதலாவது கடவாய்ப் பல்லானது 6 வயதில் உருவாகின்றது. எனவே நீண்ட காலம் வாய்க் குழியில் காணப்படும் இப் பல்லானது பற்சூத்தைக்கு உட்படும் வாய்ப்பு அதிகம். எனவே இப்பற்களில் பிளாக் தங்க ஏதுவாக உள்ள பகுதிகளான குழிகள், தவாளிப்புகள் என்பனவற்றை இப்பற்கள் முளைத்த சிறிது காலத்தினுள் அடைந்து விடுதல். இது Fissure Sealant என அழைக்கப்படுகிறது.

04. புளோரைட்டானது பற்சூத்தையை எதிர்க்கும் தன்மையுடைய கனிப்பொருளாகும். இதனை குளிசைகளாகவோ அல்லது பற்பசையினூடோ அல்லது குடிநீர் மூலமோ பெறுவதன் மூலம் பற்சூத்தையைத் தடுக்கலாம். (Floride application)

05. Recall intervals.

மாதத்திற்கொரு தடவை பல் வைத்தியரை நாடுவதன் மூலம் பற்சுகாதாரத்தை சீராகப் பேணமுடியும்.

**(பற்சுற்றிழையத்தை தாக்கும் நோய்)**

(Periodental disease)

பல்லானது பின்வரும் இழையங்களால் சூழப் பட்டு உறுதிப்படுததப்பட்டுக் காணப்படுகிறது.

01. Gingiva முரசு
02. Cementum பற்சீமெந்து
03. Alveolar bone என்பு
04. Periodental Ligament (ஒரு வகையான இணைப்பு நார்)

பல்லைச் சுற்றியிருக்கும் இச்சுற்றிழைய விழையத்தில் ஏற்படும் நோயே.

Periodental disease என அழைக்கப்படுகிறது. Plaque எனப்படும் அடிப்படைப் பதார்த்தமே பற்சுற்றிழைய விழையத்தில் ஏற்படும் நோய் கட்கும் பிரதான காரணியாக அமைகின்றது. Plaque ஆனது கல்சியம் படிவதன் மூலம் ஒரு சில மாதங்களின் பின் கல் போன்ற வன்பொரு ளாக(Calculus) உருவாகின்றது. இப் பொருளானது மென்மேலும் Plaque ஆனது படிவுற ஏதுவாக அமைகின்றது.

ஈறுகளுக்கிடையே பிளாக் ஆனது படிவுறு கின்றது. இதனுள் முரசில் நோயை ஏற்படுத்தும் பல இலட்சக் கணக்கான நோய்க் கிருமிகள் காணப்படுகிறது. ஆரம்ப நிலையில் முரசானது வீங்கிச் சிவந்து காணப்படும். முரசின் உட் புறத்தில் கண்ணுக்குத் தெரியாத சிறிய புண்கள் தோற்றுவிக்கப்படும். நாம் பல்துலக்கும் போதோ அல்லது வேறு காரணங்களாலோ அப்புண்கள் தாக்கப்பட அதிலிருந்து இரத்தக் கசிவு ஏற்படும். வாயிலிருந்து துர்நாற்றம் வீசும். முரசில் வலியும் ஏற்படலாம். இவ் ஆரம்ப நிலையானது முரசு(Gingivitis) அழற்சி என அழைக்கப்படுகிறது. இந் நிலையில் ஒரு பல் வைத்தியரை நாடுவதன் மூலம் தகுந்த சிகிச்சையைப் பெற்று நோயின் தாக்கத்திலிருந்து மீளவும் முடியும். முரசு அழற்சியானது புறக்கணிக்கப்படுமிடத்து பல்லின் மற்றைய சுற்றிழையப் பகுதிகளான தாடை என்பு,(Alveolar bone) பற் சீமெந்து(Cementum) Perio dental Ligament என்பவற்றையும் தாக்குவதனால் நோயின் தாக்கம் அதிகமாகக் காணப்படும். இந்த நிலையில் முரசானது நன்கு கீழிறங்கி பல்வேர்கள் தெரிய ஆரம்பிக்கும். அத்துடன் பல்லைச் சுற்றியுள்ள என்பானது நோயின் தாக்கத்தினால் அதன் உறுதியை இழப்பதால் பல்லானது ஆட ஆரம்பிக்கும். இந்நிலையில் வைத்தியரை நாடுவதன் மூலம் நோயின் தாக்கத்தை கட்டுப்பாட்டினுள் கொண்டு வரமுடியும். எனினும், நோய் காரணமாக கீழிறங்கிய முரசானது மீண்டும் வளர்வதற்குரிய சாத்தியக் கூறுகளில்லை. நன்கு ஆட்டம் கண்ட பற்களை இழப்பதைத் தவிர வேறு வழியில்லை.

(Plaque)மஞ்சள் நிற ஒட்டும் தன்மையான பதார்த்தம் ஆனது Perio dontal disease இன் பிரதான காரணியாக அமைவதால் அதனை அகற்றுவதன் மூலம் இந்நோய் ஏற்படாது தடுக்கலாம். அக் கருத்தானது சொல்லுவதற்கு இலகுவாக இருந்த போதிலும் நடைமுறைக்கு அவ்வளவு இலகுவானதொன்றல்ல. எனவே பற்சுகாதாரம் சம்மந்தமான ஒழுங்கான அறிவுறுத்தல்கள் (Plque Control) இங்கு அவசியமாகின்றது. இங்கு ஒழுங்கான Plaque control என்பன முறையாகப் பல் துலக்குவதன் மூலம் சாத்தியமாகும். எனவே நாம் ஒவ்வொருவரும் முறையாக பல் துலக்குவது எவ்வாறு என்று அறிந்திருத்தல் அவசியமாகும்.

**பல்துலக்கும் முறை**

பிளாக்கானது பொதுவாக பல்லிற்கும், முரசிற்கும் இடையேயுள்ள இடைவெளியினுள் ளேயே அதிகளவில் படிவடைகின்றது. பல் துலக்கும் போது பற் தூரிகையை இடைவெளி யினுள் சற்றே சரித்து வைத்து முன் பின்னாக அசைத்தல் வேண்டும். மேற்பற்களை கருதுமிடத்து மேல்நோக்கி $45^0$ சரிவில் தூரிகையை இடைவெளியினுள் வைத்து முன் பின்னாக அசைத்தல் வேண்டும். பின்னர் கீழ் நோக்கி தூரிகையை அசைத்தல் வேண்டும். கீழ்ப்பற்களை கருதுமிடத்து இவ்வாறே கீழ் நோக்கி $45^0$ கோணத்தில் சரித்து துலக்குதல் வேண்டும். ஒரு தடவையில் இரண்டு பற்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். பற்களின் வெளிப்பரப்பு, உட்பரப்பு என இரு பக்கமும் பற் தூரிகையினால் சுத்தம் செய்தல் வேண்டும். இறுதியாக பற்களின் வெட்டும், அரைக்கும் மற்றும் மேற்பரப்புக்களை தூரிகை கொண்டு சுத்தம் செய்தல் வேண்டும்.

இவ்வாறான ஒழுங்கான பல் துலக்கும் முறைக்கு 15-20 நிமிடங்கள் அவசியமாகும். ஒருவர் காலை, இரவு என இரு தடவைகள் பற்சுத்தம் செய்தல் மிகவும் பொருத்தமானதாகும். இரவு உணவு உண்ட பின்னர் பல் துலக்குவதை நாம் ஒவ்வொருவரும் கடமையாகக் கொள்ளுமிடத்து பல் சம்பந்தமான பொதுவான நோய்களைத் தவிர்க்கலாம். எப்பொழுதும் உணவு உண்ட பின்னர் பற்சுத்தம் செய்தல் நன்று.

# உயிப் பொழுது

சம்பவம் உண்மை. பெயர்கள் கற்பனை

செல்வி.பா.பாலசாந்தினி
தாதிய
உத்தியோகத்தர்



இரவுக் கடமையை முடித்து விடுதிக்கு வந்த தர்ஷா தனது காலைக் கடன்களை முடித்துவிட்டு சமையலைக் கவனித்தாள். சமையல் முடிந்ததும் மீண்டும் ஒரு மணிக்கு கடமைக்கு செல்ல வேண்டும் என்ற நினைப்பு வர சோர்வுடன் சிறிது நேரம் கண்ணயர்வோம் என்று படுக்கையில் வீழ்ந்தாள் கண்களை மூடியதும் கண்ணுக்குள் நிழலாடியது. நேற்றைய மாலைச்சம்பவம், மறக்க நினைத்தாலும் முடிவில்லை அவளால். ஆனாலும் மறந்து தான் ஆக வேண்டும். எனவே மீண்டும் ஓர் முறை நினைத்துப் பார்ககிறாள்.

08 பிள்ளைகளின் தாய், மூத்த பையனுக்கு வயது 11, கடைசிக் குழந்தைக்கு வயது 03 மாதம் மட்டுமே. கணவனோ கூலி வேலை செய்பவர். உழைப்பதில் பெரும்பகுதி அவரது மதுத்தேவைக்கு மட்டுமே போய்விடும். மூத்த பையனும் தாயும் செய்யும் கூலித் தொழிலே 10 சீவனும் வயிறு கழுவும் நிலமை. இந்த நிலையில் 05 நாட்கள் பாக்கியவதி வைத்தியசாலையில்.

நேற்று பகல் கடமைக்கு சென்ற போது பாக்கியவதி தர்ஷாவைப் பார்த்து " எப்ப என்னை வீட்டிற்கு அனுப்புவியள்" என்று கேட்டவாறே வரவேற்றாள். சிரித்தவாறே "இன்னும் ஐயா அனுப்பவில்லையா?" அப்போ நாளைக்குத்தான் என்று பதில் கூறியவாறு தனது கடமையைத் தொடர்ந்தாள். நேரம் 1.40. பாக்கியவதி "ஐயோ மிஸ் எனக்கு என்னவோ செய்யுது" என்று குரல் கேட்டு ஓடிய தர்ஷா பாக்கியவதி அவதிப்படுவதைக் கண்டு அவசர சிகிச்சைகளைச் செய்து வைத்தியரையும் அழைத்து சிகிச்சை செய்தும் பாக்கியவதியின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. எமது சிகிச்சைகளையும் மீறி 2 மணிக்கு பாக்கியவதி இறந்துவிட்டாள். விடுதி

முழுவதும் திடீர் அமைதி. அவளுக்காக அழுவதற்கு கூட யாரும் அருகில் இருக்கவில்லை. 4 மணியளவில் வைத்தியசாலை விதிக்கமைய ஒருவரும் இல்லாதமையினால் அவரது உடல் அதற்குரிய அறைக்கு அனுப்பப்பட்டது.

இறப்புக்கள், துயரங்களைச் சந்திப்பது தர்ஷாவிற்கு மட்டுமல்ல, தர்ஷாவைப் போன்ற சகல தாதியருக்கும் தினமும் நடந்து வரும் ஒரு விடயம். அதையே நினைத்துக் கொண்டால் மற்றக் கடமைகளைத் தொடர முடியாதாகையால் அவற்றை ஒதுக்கி ஒருபுறம் வைத்துவிட்டு கடமைகளைத் தொடர்ந்தாள் தர்ஷா.

நேரம் 5.40 மிஸ் அன்ரி என்ற குரல் கேட்டு நிமிர்ந்தாள் தர்ஷா. முன்னால் இரண்டு சிறுவர்கள் 09 வயதளவில் ஒரு பையன், 05 வயது மதிக்கத்தக்க பெண் பிள்ளையைக் கையில் பிடித்தவாறு அவளின் கையில் சிறிய சீனிச்சுருள், பையனின் கையில் ஒரு சிறிய வாடிய இளநீர். அவர்களைப் பார்த்த தர்ஷா என்ன தம்பி என்றாள். மிஸ் அன்ரி கட்டிலில் அம்மாவைக் காணவில்லை. எங்கே அன்ரி என்றான் பையன் கட்டிலைக் காட்டியவாறு, ஒரு நிமிடம் தர்ஷாவிற்கு என்ன கூறுவது என்றே புரியவில்லை. அன்ரி அம்மா எங்கே என்றான் பையன் மீண்டும். தம்பி அம்மா என்று சில நிமிடம் தடுமாறிய தர்ஷா "தம்பி அப்பா எங்கே அப்பன்" என்று கேட்டாள். அதற்கிடையில் பாக்கியவதியின் மூத்த மகன் அவன் ஒன்றும் பெரியவனல்ல. 11 வயது மட்டுமே. அவன் வந்து சேர்ந்துவிட்டான். அவனிடம் ஒருவாறு விஷயத்தைக் கூறினாள் தர்ஷா. அடுத்த நிமிடம் பெரியவன் ஐயோ அம்மா என்று கதற தங்கை புரியாமல் அவனைப் பார்த்தாள். திடுக்கிட்டு சுயநினைவிற்கு வந்தாள் தர்ஷா. நேற்றைய சில நிமிடங்கள் இன்று அவளது நித்திரையைப் பறித்துவிட்டன.

இப்படி எத்தனை பாக்கியவதிகளின் பிள்ளைகள்? எத்தனை தர்ஷாக்கள்?

காயங்கள் ஏற்படும் போது வெளியேறும் குருதியின் அளவு, ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டும் போது உயிராபத்தை ஏற்படுத்தலாம். எனவே குருதியிழப்பைக் காயங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் கட்டுப்படுத்துதல் ஒரு அடிப்படை சிகிச்சையாகும். சில சமயங்களில் அதிக குருதியிழப்பின் குருதியை மாற்றீடு செய்வதன் மூலம் மட்டுமே உயிரைக் காப்பாற்ற முடியும். எனவே குருதி மாற்றீடு ஒரு உயிரைக் காக்கும் சிகிச்சையாகும்.

சில நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் குருதிக் கலங்கள் அழிவடைவதனால் குருதிச்சோகை ஏற்படும். உதாரணமாக மலேரியாத் தாக்கத்தினால் அதிக குருதிக் கலங்கள் அழிவடைவதால் குருதிச்சோகை ஏற்படலாம். இதைவிட குடற்புழுக்களின் தாக்கங்களினாலும், போசணையான உணவை உண்ணாததாலும் குருதிச்சோகை ஏற்படலாம். எவ்வாறாயினும் அநேக குருதிச்சோகை வகைகளை குருதிப் பரிமாற்றத்தின் மூலம் சரிப்படுத்தலாம்.

கிளிநொச்சி இடம்பெயர்வினால் மக்கள் பலர் காட்டுப் பிரதேசங்களில் தற்காலிக இருப்பிடங்களை அமைத்து வாழத் தொடங்கினர். இவ்வாறு புதிய இடங்களில் வாழ்க்கை தொடர இந்த மக்களுக்கு பெரும் சவால்கள் இருந்தன. அன்றாட உணவுக்கு அல்லற்பட்டனர். இந் நிலையில் அவர்கள் எப்படி நிறையுணவை எடுக்கமுடியும். பலர் இரத்தச் சோகைக்கு உள்ளாகினர். இது மட்டுமல்லாமல் குழந்தைப் பருவத்தினர் முதல் முதியோர் வரை பல்வேறு நோய்களும் தாக்கின. இந்நோய்களின் விளைவாக ஏற்பட்ட குருதிச்சோகையும் பல உயிரிழப்பிற்கு காரணமாகியது. இதிலும் முக்கியமாக மலேரியாவின் தாக்கம் பெரும் வாழ்வுப் போராட்டத்தை ஏற்படுத்தியது. இடம்பெயர்ந்த மக்களில் பலருக்கு மலேரியா திரும்பத் திரும்பத் தாக்கியதால் அவர்களுக்கு குருதிச்சோகை ஏற்பட்டபோது இரத்தப் பரிமாற்றத்தின் மூலம் சிகிச்சையளிக்க முடிந்தது.

விடுதிகளில் இருந்து தங்கி சிகிச்சை பெறுபவர்களில் பலருக்கு இரத்தப் பரிமாற்றச் சிகிச்சை அளிக்க வேண்டியுள்ளது. ஆனால் இதில் பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இரத்தப் பரிசோதனைக்குரிய மருந்துகள் மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்தது. இரத்தப் பரிமாற்றம் செய்ய பயன்படும் பைகள் சில வேளை இல்லாமலேயே இருந்தது.

இதைவிட முக்கியமான பிரச்சினை குருதிக் கொடை வழங்க ஒருவரும் முன்வருவதில்லை. தற்போதும் இந்தப் பிரச்சினை இருக்கச் செய்கிறது. ஒரு சுகதேகி நான்கு மாதத்திற்கு ஒரு முறை இரத்ததானம் செய்வதில் எந்தப் பிரச்சினையும் ஏற்படுவதில்லை. வைத்திய சாலையில் வேலை செய்யும் பலர் இவ்வாறு இரத்ததானம் செய்கின்றனர். ஆனால் வேறு திணைக்கணங்களில் வேலை செய்பவர்கள் அரிதாகவே இரத்ததானம் செய்ய முன் வருகின்றார்கள். இந்த நிலைமை மாற வேண்டும். பலர் தாங்களாகவே முன் வந்து இரத்த தானம் செய்ய வேண்டும். இது ஒரு சர்வதேச நடைமுறை. இதை நாமும் பின்பற்ற வேண்டும். கர்ப்பகாலத்தில் ஏற்படுகின்ற குருதிப்பெருக்கு, மற்றும் பிரசவத்தின் பின்னர் ஏற்படுகின்ற அதிக குருதி இழப்பு உயிராபத்தை ஏற்படுத்தலாம். இச்சமயத்தில் இரத்தப்பரிமாற்றம் செய்யாவிடின்

# இன்னலுக்கு மத்தியில் இரத்தப் பரிமாற்றம்



**வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி,**
மாவட்ட வைத்தியசாலை,
கிளிநொச்சி.

தாயின் உயிரைக் காப்பாற்றுதல் கடினமாகும். இரு மாதங்களிற்கு முன் 05ம் விடுதியில் பிரசவத்திற்கு அனுமதிக்கப்பட்டிருந்த தாய் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தார். குழந்தை ஆரோக்கியமாக இருந்தது. ஆனால் சற்று நேரத்தின் பின்னர் ஏற்பட்ட குருதி இழப்பை மாற்றீடு செய்வதற்கு நடுநிசியில் நாம் அல்லற்பட்டோம். இரத்த வங்கியில் எம்மிடம் கையிருப்பில் இரத்தம் இருக்கவில்லை. வீடுகளுக்குச் சென்று சிலரை அழைத்து வந்து இரத்தப் பரிசோதனைக்குட்படுத்தி இரத்தத்தை எடுத்துப் பார்த்தோம். சிலரின் இரத்தம் பொருந்த வில்லை. ஒருவரின் இரத்தம் பொருத்தமாக இருந்தது. அவரிடம் இருந்து இரத்தத்தை எடுத்து ஏற்றினோம். ஆனால் எங்களால் தாயின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. இங்கு எங்களுக்கு இரத்த வங்கியில் தேவையான இரத்தம் கையிருப்பில் இல்லாமல் இருந்தது தான் முக்கிய பிரச்சினை. எங்களுடைய இரத்தப் பிரிவுகளை கையிருப்பில் வைத்திருக்க பலரும் முன்வர வேண்டும். உடல் ஆரோக்கியமான யாவரும் இரத்த தானம் செய்யலாம்.

இரத்ததானம் செய்ய முன்வருபவர்கள் அவர் களுடைய கடந்தகால நோய்கள், தற்போது உள்ள உடல் ஆரோக்கியம், குருதி அமுக்கம், இருதய செயற்பாடுகள் போன்றன பரிசோதிக்கப் பட்டு தகுதியானவர்களில் மட்டும் இரத்தம் எடுக்கப்படும். தகுதியற்றவர்கள் என காணப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை நிவர்த்தி செய்ய ஆலோசனை வழங்கப்படுகின்றது. இரத்த சோகையினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு இரத்த மாற்றீடு செய்வதற்கு குருதிக் கொடை செய்யுமாறு அவர்களது உறவினர்களிடம் நாம் ஆலோசனை கூறினால் அவர்கள் முன்வரு வதில்லை. மாறாக பணத்தை வழங்கி ஒருவரை கூட்டி வந்து இரத்தம் வழங்க ஒழுங்கு செய்வார்கள்.

இதை நாம் அனுமதிப்பதில்லை. ஏனெனில் இரத்தம் ஓர் விற்பனைப் பொருளல்ல. ஆரோக்கியமற்ற ஒருவர் தனக்கு கடந்த காலங் களில் ஏற்பட்ட நோய்களை மறைத்து பணத்திற் காக குருதியை வழங்கலாம். செங்க மாரி (Hepatitis - B) வருத்தம் ஏற்பட்டிருந்தவர் வாழ் நாளில் குருதிக் கொடை செய்யமுடியாது. நெருப்புக் காய்ச்சல் ஏற்பட்டிருந்தால் 1 வருடமும், மலேரியா ஏற்பட்டிருந்தால் 6 மாதத்திற்கும் குருதிக்கொடை செய்ய முடியாது. குருதிக் கொடை செய்கின்றவர்களில் எயிட்ஸ், செங்கமாரி (Hepatitis - B) சிபிலிஸ் மலேரியா போன்றவற்றிற்கு இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. இந்நோய்கள் இனங்காணப்பட்டால் தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. மலேரியா தவிர்ந்த ஏனைய நோய்கள் எம்மவர் மத்தியில் மிக அரிதாக காணப்படுகிறது. குருதிப் பரிமாற்றத்தில் தற்போது புதிய முறைகள் கையாளப்படுகிறது. அதாவது குருதியின் கூறுகளை பிரித்து தேவைக்கேற்ப கூறினை வழங்கலாம். உதாரண மாக நெருப்புக்காயம் ஏற்பட்ட ஒருவருக்கு குருதி பிளாஸ்மாவையும், குருதியுறையா நோய் உடையவர்களுக்கு குருதிச் சிறுதட்டுக்களை யும், குருதிச் சோகை ஏற்பட்டவர்களுக்கு குருதிக்கலங்களை மாத்திரமும் ஏற்றலாம். இவ்வாறு பிரித்து அவற்றைப் பாதுகாத்து வைத்து ஏற்ற எம்மிடம் வசதிகள் போதாமல் இருக்கின்றன. மருந்துத் தடை நீங்கியதனால் எமது இரத்த வங்கியை நல்ல முறையில் இயக்கி இரத்தப் பரிமாற்று சேவையை சிறந்த முறையில் வழங்க எண்ணியுள்ளோம்.

இவ் வேளையில் எம்மக்கள் அனைவரிடமும் குருதிக் கொடை பற்றிய விழிப்புணர்வும், மனமுவந்து குருதியைக் கொடை செய்யும் மனப்பக்குவமும் வளர வேண்டும்.

ஒரு சுகதேசியின் உடல் சாதாரணமாக அவன் உட்கொள்ளும் உணவிலிருந்து பெறப்படும் கூறுகளிலிருந்தே தனக்கு தேவையான குருதி உற்பத்தியை செய்து கொள்கிறது. இவ்வாறு உற்பத்தியாகும் குருதியிலுள்ள பிரதான செங்கலங்கள் 120 நாட்களில் உடலில் அழிக்கப்படுகின்றன. நாம் விரும்பியோ விரும்பாமலோ எமது உடலில் இது நிகழ்கிறது. எனவே வீணாக அழிகின்ற குருதியில் ஓர் பகுதியை பிறருக்கு கொடுக்க முன் வருவோமா? ■

# ஒரு ஆத்மாவின் உயிர்ப்பு



**அன்று** வழமை போல் ஒவ்வொரு பகுதியிலும் மனித இயந்திரங்கள் இயங்கிக் கொண்டிருந்தன. தினசரி வரவை விட அன்று சற்று அதிகமான நோயாளர்கள் தங்களிற்கு வேதனை கொடுக்கும் பல்லைப் பிடுங்குவதற்காக வைத்தியரின் வரவை எதிர் பார்த்துக் காத்திருந்தனர். அவர் இன்று தன் கடமையை மிக சந்தோசமாக செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் பற்சிகிச்சைக் கூடத்தினுள் வந்து சேரந்தார். வைத்தியரைக் கண்டதும் எல்லா நோயாளர்களின் முகங்களிலும் பற்களின் வேதனை குறைந்ததால் ஏற்படக்கூடிய உணர்வு மாற்றம் தென்பட்டது. உதவியாளரிடம் இன்று எத்தனை நோயாளர்கள் என்று கேட்டார். "முப்பது பேர்" என்று பதிலளித்தனர். வைத்தியர் நோயாளரைக் கூப்பிடச் சொன்னதும் ஒவ்வொருவராகப் பெயர் கூப்பிடப்பட்டு பற்கள் பரிசோதிக்கப்பட்டு அவர்களிற்கு இடைஞ்சலாக இருக்கும் பற்களை அகற்றவுதற்காக விறைப்பு மருந்து போட்டுக் கொண்டிருந்தார். ஊசி போடுவது தான் தன் வேலை என்றிராமல் நோயாளரிடம் பணிந்து, பொறுமையாக அவர்கள் சொல்வதை அவதானமாகக் கேட்டு அவர்களின் நிலைக்கேற்ற வகையில் அவர்களை அணுகி அவர்களிற்கு ஊசி போட்டுக்கொண்டு இருந்தார். பத்து நோயாளருக்கு பிடுங்கி முடித்துக் கொண்டிருக்கும் வேளை ஒரு சிறுவன் வாசற் கதவருகே வந்து நின்றான். அறையில் நின்ற ஒருவர் போய் என்ன தம்பி என்று கேட்டார். கேட்டதும் கண் கலங்கியவாறு "பல் பிடுங்க வேணும், சாப்பிடவும் ஏலாமல், அதோட வேதனையாகவும் இருக்கு, அந்தப் பல்லை பிடுங்கி விடுங்கோ" என்றான் சிறுவன். உதவியாளர் "தம்பி இதுல இருக்கிறவர்களெல்லாம் காலையில வந்து பெயர் பதிந்து போட்டுத்தான் நிற்கிறார்கள். ஏன் வேளைக்கு வந்திருக்கலாமே" என்றார் சிறு கண்டிப்புடன் இருங்கோ... இவ்வளவு பேரையும் பார்த்து முடியக் கூப்பிடலாம் என்று சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டார். அச்சிறுவன் வரும் பொழுதே அந்த அறையில் இருந்த முழுக்கண்களுமே அவன் மேல் விழுந்தன. அந்தளவிற்கு கஸ்ரம் அவ் இளம் பிஞ்சை வாட்டி விட்டிருந்தது. அவன் அணிந்திருந்த ஆடையில் அழுக்குப் படியாத இடமே இல்லை. கை, கால்கள் எல்லாம் "போலியோ". வந்தவர்களைப் போன்று மெலிந்து... அச்சிறுவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. வைத்தியர்

அவனிடம் "உனக்கு எத்தனை வயது தம்பி? ஊர் எது" என்று கோட்டார்.

"எனக்கு பதினைந்து வயதையா நாங்கள் யாழ்ப்பாணம் இடம்பெயர்ந்து வந்து அக்கராயனில் இருக்கிறம்" என்று பதிலளித்தான். இப்ப என்ன செய்கிறாய்....? படிக்கிறாயா? அப்பா என்ன செய்கிறார்? என்றார் வைத்தியர். அதற்கு அவன் "எனக்கு ஆறு சகோதரம் ஐயா. அப்பாவிற்கு மிதிவெடியில கால் இல்லாமல் போய்விட்டது. அதோட அவருக்கும் வயதாகியும் விட்டது. நான் வேற இடத்தில் வேலை செய்து கொண்டு படிக்கிறன்" என்றான். "சரி உனக்கு என்ன பிரச்சனை"? என்று கேட்டார். "எனக்கு பல்லுக்கொதி பிடுங்கி விடுங்கோ ஐயா" என்றான். பல்லைப்பிடுங்கி விட்டு வைத்தியர் அவனுக்குரிய மருந்துச் சிட்டை எழுதிக் கொண்டிருந்தார். அவன் கண் மட்டும் அவரைப் பார்த்தது. அவன் மன அலையோ அவனை எங்கெல்லாமோ இழுத்துச் சென்றது. அவனின் சிந்தனையை ஐயாவே கலைத்தார். "என்ன பையா என்ன யோசனை"?... இந்த மருந்தை எடுத்து நேரம் தவறாமல் மூன்று வேளையும் போட வேணும். போட்டால் தான் புண் வேளைக்கு மாறும்" என்று சொல்லிவிட்டு "தனியவா வந்தனீர்?" என்று கேட்டதும் அவன் "ஓமையா அம்மா கூலி வேலைக்கப் போறவா, அப்பாவிற்கு வரமுடியாது. அது தான் தனிய வந்தனான்" என்று பதிலளிக்கும் போதே நாட்டின் பொருளாதார நிலை, கஸ்டம் எவ்வளவு அந்தச் சின்னவனைப் பாதித்திருக்கிறது என்பது அதில் நின்றவர்களிற்கும் புரிந்தது என்னவோ உண்மைதான். அவர் அவனுக்கு தன்னால் இயன்ற புத்திமதிகளைக் கூறி "நீ நல்லாய்ப் படிக்கவேணும். நல்ல பிள்ளையாய் வரவேணும். ஒன்றுக்கும் யோசிக்காமல் முயற்சி எடுத்துப்படி" என்று கூறி மருந்துச்சிட்டையும் கொடுத்து அனுப்பினார். அவன் செல்ல மனமில்லாது அங்கிருந்து சென்றான். வாசலை அடைந்ததும் திரும்பி மறுபடியும் அந்த அறையைப் பார்த்துவிட்டு வெளியேறினான். அப்பையன் என்ன எண்ணினானோ தெரியவில்லை. நோயாளர் காத்திருக்கும் வாங்கிலில் இருந்து யோசித்துக் கொண்டிருந்தான். அவன் கடந்தகால வாழ்க்கை, தற்போதைய சூழ்நிலை, எதிர்கால இலட்சியம் யாவற்றையும் எண்ணி தான் ஐயா சொன்னபடி ஒரு நல்ல திறமைசாலியாக வந்து ஒரு சமூக சேவகனாக இந்த நாட்டையும், மக்களையும் நேசித்து தன்னால் இயன்ற கடமையை தன்னம்பிக்கையுடனும், கடமையுணர்வுடனும் செய்து நற் பிரஜையாக வரவேண்டுமென்று எண்ணினானோ என்னவோ, அவனருகில் ஒரு நோயாளர் வரவும் தன்னிலைக்கு வந்தவன் எதிர்காலத்தை எண்ணியபடி மருந்துச்சீட்டுடன் மனதையும் திடப்படுத்தி வெற்றிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். நாளை தானும் ஒரு சமூக சேவகனென...

**ர.பூவிழி**
மருத்தவப்பிரிவு.



மாற்றம்

குறுநாடகம்

காட்சி- 01

வாச்சர் :-அம்மா தள்ளி நில்லுங்கோ

பார்வதி :-இஞ்சார் தம்பி ஒருக்கா உள்ளுக்கு விடு மோனை போறதும் வாறதுமாய் வாறன்.

வாச்சர்:- ஐயோ அம்மா பெரியவர் வாட் பார்க்கிறார். உள்ளுக்கை விட்டால் அவ்வளவு தான். எனக்கு வேலை இல்லாமல் போய்விடும்.

பார்வதி :-பெரியவரிட்டை நான் சொல்லுறன். மோன தண்ணிச் சாப்பாடுதான் கொடுக்கிறதும் வாறதும் தான்.

வாச்சர் :-ஆண்பிள்ளை வாட்டுக்கை பொம்பிளைகள் போகக் கூடாது. பார்க்கிற நேரம் முடிஞ்சுது. ஒரு மணித்தி யாலத்தாலை வாங்கோ.

பார்வதி:- மோனை இதில் 10 ரூபா இருக்கு. இதை வச்சு தேத்தண்ணியும், வடையும் வாங்கி குடி மோன.

வாச்சர்:- அம்மா அங்காலை போங்கோ. இல்லை என்றால் இதிலை காவல் துறை இருக்கு புடிச்சுக் கொடுத் திடுவன். அந்த வாங்கிலை இருங்கோ.

பரமசிவம்:-வன்னிக்கை இப்ப 10 ரூபா ஒரு காசா? அந்த நாளில் 10 ரூபா என்றால் பிளேன் ரீ வாங்கி குடிக் கலாம். ஆனால் இப்போ 100 ரூபா கொடுத்தால் தான் அவங்கள் மசிவங்கள்.

வள்ளி :- நான் எங்கை போவன். 100 ரூபா என்றால் என்ரை எட்டுப் பிள்ளைகளுக்கும் நாலு றாத்தல் பாண் வாங்கி குடுத்திட்டு வந்திருப்பேன். அந்த மனிசனும் குடிச்சுக் குடிச்சு ஈரல் கருகிப் போய் கிடக்கு. நானும் பிள்ளை களும் என்ன செய்யப் போகிறோமோ தெரியவில்லை. (அழுகை)

**காட்சி - 02**

(பார்வை நேரம் மணி அடிக்கிறது)

வருத்தக்காரர்:- இந்த மெத்தைக் கட்டிலில் கூட படுக்க முடிய வில்லையே... நெஞ்சு நோகுது, வயிறு எரியுது, காய்ச்சல் காயுது திரும்பி படுக்கக்கூட

முடியயேல்ல... நான் செய்த வினைகள் இப்பத் தான் தெரியுது. (அழுகிறார்)

வள்ளி:-அப்பவே நான் திரும்பத் திரும்ப சொன்னேன், குடிக்க வேண்டாம் குடிக்க வேண்டாம் என்று கேட்டியளே பெண்சாதி மாரெண்டால் ஏதோ பிள்ளை பெறுகின்ற மெசின் எண்டுதான் நினைப்பு. எத்தினை தரம் சொன்னேன். மூன்று பிள்ளையோடு காணுமெண்டு கேட்கவில்லை. இப்போ நான் படும் கஸ்டங்கள். (அழுகை)

வருத்தக்காரர் :- வள்ளி எனக்கு இப்போ ஒன்றும் ஆகிவிடவில்லை. எல்லாம் சுகமாக்கி தாறன் எண்டு டாக்குத்தர் சொன்னவர். ஆனால் கொஞ்ச நாள் எடுக்குமாம்.

பரமசிவம்:-நான் ஒருக்கா டாக்குத்தரோடு கதைத்து விட்டு வாறன். என்ன சொல்லுவார் என்று பார்ப்போம்.

டாக்டர்:-ஐயா நீங்கள் யார் என்ன வேணும்?

பரமசிவம்:-ஐயா நான் தான் முருகன்ரை மச்சான். அவருக்கு என்ன வருத்தம். எப்படி இருக்கெண்டு ஒருக்கால் கேட்கலாம் என்று வந்தன்.

டாக்டர் :-இருங்கோ இவர் முருகன் கனகாலமாக நல்லாய் குடித்திருக்க வேண்டும். அதோடு இவருக்கு உடனடியாகஇரத்தம் ஏற்ற வேண்டும். இரத்தம் ஏற்றினால் ஓரளவு குணமாக்கலாம். சுகம்வர குறைந்தது ஒரு மாதம் எண்டாலும் எடுக்கும்.

பரமசிவம்:-ஐயா இவருக்கு என்னுடைய இரத்தம் பொருந்தினால் நான் கொடுக்கிறேன்.

டாக்டர்:- இவரின் ஓ நெக்கடிவ் (Negative). இரத்தம் அதனை எடுக்கிறது கஸ்ரம். உங்களிடம் எடுக்கேலாது. நீங்களும் குடிக்கின்றவர் போல் தெரிகின்றது. மற்றது வயசும் கூடியிருக்கு. அதனால் வேறு யாரையும் கூட்டி வாங்கோ.

(பரமசிவம் மீண்டும் நோயாளியிடம் வருகிறார்).

பரமசிவம்:-திறமான டாக்குத்தர் எவ்வளவு அமைதியாக என்னுடன் கதைத்தவர். நல்ல பொறுமைசாலி. உப்பிடித்தான் இருக்க வேண்டும். அது சரி இப்போ இவருக்கு இரத்தம் ஏற்ற வேண்டும். யாரைப் பிடிக்கிறது. எங்களுடைய சொந்தம் எல்லாம் யாழ்ப்பாணத்தில் இங்கு இடம்பெயரந்து வந்திருக்கின்றோம். யாரைப் பிடிப்பது.

பரிசாரகர்:- ஐயா யோசிக்காதையுங்கோ. நான் இருக்கிறேன். எனக்கு டாக்குத்தர் சொன்னார். ஓ நெக்கடிவ் இரத்தம் தான் என்னுடையதும். உங்கள் வருத்தக்காரருக்கு தருகின்றேன். முதலும் இரண்டு தடவை கொடுததிருக்கின்றேன்.

வள்ளி:- தம்பி ராசா எங்களுக்கு சொந்தம் பந்தம் எண்டு ஒருதரும் இல்லை. கையிலை, மடியிலை காசும் இல்லை. நீ தெய்வம் போல் வந்திருக்கின்றாய். தம்பி ராசா என்னுடைய மனிசனைக் காப்பாற்றிப் போடுங்கோ.
(இரு கையும் கூப்புதல்)

பரிசாரகர்:- அம்மா ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். நாங்கள் எப்படியும் உதவி செய்து உங்கள் கணவரைக் காப்பாற்றுவோம்.

வள்ளி:- தம்பி நீ மகாராசனைப்போல் இருக்க வேணும்.

பரமசிவம்:- எல்லாரும் இந்த ஆஸ்பத்திரியில் நல்லாய்த் தான் சேவை செய்கின்றார்கள். பார்க்க எவ்வளவு சந்தோசமாக இருக்கு.

**காட்சி -03**

டாக்டர்:- என்ன நாதன் நீர் இரத்தம் கொடுப்பதாக கையொப்பம் இட்டிருக்கின்றீர்.

பரிசாரகர்:- ஓம் ஐயா ஏழைகளுக்குத்தான் உதவி செய்ய வேண்டும். பணக்காரர் எப்படியும் பணத்தால் எதையும் செய்வார்கள்.

டாக்டர்:- உம்மைப் போல் எல்லாரும் இருந்தால் எல்லாருமே மனிதப் பிறவி எடுத்த பயனை முழுமையாகச் செய்திருக்கிறார் கள் எனலாம். நானும் கொடுத்திருக்கலா ம். ஆனால் எனக்கு கொடுக்க முடியா மல் போய்விட்டது. ஆனால் முன்பு இரு தடவை கொடுத்திருக்கிறேன் நோயாளி களுக்கு.

பரிசாரகர்:- அதுதான் ஐயா எங்களுக்கு இந்த துணிவு வந்தது.

**காட்சி -04**

(வருத்தம் சுகமாக வாட்டில் இருந்து வெளியேறுதல்.)

முருகன்:-ஐயா நான் இப்போ திருந்தி விட்டேன். நோயில் இருந்து குணமாகிவிட்டேன். எனது மனசும் திருந்திவிட்டது. எனக்கு உங்களைப்போல் நானும் மற்றவர்களிற்கு சேவை செய்ய வேண்டும் போல் இருக்கிறது. நீங்கள் கூறிய அறிவுரைகள் எனது மனதை விட்டகலாது. இந்தக் குடியைக் கெடுக்கும் குடியை நான் ஒரு போதும் தொடமாட்டேன். உங்கள் மீது சத்தியம். நான் குடிக்கிற காசில் இனி மேல் கீரை, பருப்பு, பால், தயிர், மோர் வேண்டி நான் எனது மனைவி பிள்ளை களுக்கும் கொடுத்து சத்தான ஒரு சமுதாயத்தை அமைப்போம்.

**திரு. சு. பூலோகநாதன்,**
பரிசாரகர், மாவட்ட வைத்தியசாலை,
கிளிநொச்சி.

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டு நிறைவில் அதன்சேவையை வாழ்த்தி நிற்கின்றோம்...



***கிளிநொச்சி மாவட்ட சிக்கனக்கடனுதவு
சங்கங்களின் சமாசம்
*சமாச வங்கி
*சமாச அச்சகம்**

முதன்மைச்சாலை, கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டு நிறைவில் அதன்சேவையை வாழ்த்தி நிற்கின்றோம்



**கரைச்சி வடக்கு ப.நோ.கூ.
சங்கம்**

பிரதானசாலை, பரந்தன்

# உணர்வுகளை அழுக்கிப் புதைத்தல்



**புரொய்டும் உளப்பகுப்பாய்வும்**

உளவியலிலும் உளவளத்துணையிலும் ஏனைய உள மருத்துவ சிகிச்சை முறைகளிலும் சிக்மண்ட் புரொய்ட் (Signund Freud) ஏற்படுத்திய (1856-1939) தாக்கம் தனித்துவமானதாகும். மொரேவியா என்று முன்னர் அழைக்கப்பட்டு இன்று செக் குடியரசின் ஒரு பகுதியாக விளங்கும் பிரெய்பேர்க் (freiberg) என்னும் இடத்தில் பிறந்த புரொய்ட் 4வயதில் தனது பெற்றோருடன் ஆஸ்திரியாவின் தலைநகராக விளங்கும் வியென்னாவுக்குக் குடிபெயர்ந்தார். தனது வாழ்வின் பெரும்பகுதியை வியன்னாவிலேயே கழித்த புரொய்ட் உளப்பகுப்பாய்வு (Psychoanalysis) என அழைக்கப்படும் தனது உளவியற் கொள்கைக்கு வடிவம் கொடுத்தார்.

மருத்துவராக வியென்னாவில் தனது வாழ்வை ஆரம்பித்த புரொய்ட் மிக விரைவில் நரம்பியல் துறையினால் ஈர்க்கப்பட்டார். 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் உள நோய்க்கான சிகிச்சை நரம்பியற் துறையின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டது. வியென்னாவில் ஜோசெவ் புறூவர்(Josef Breuer) என்பவருடன் இணைந்து இசிவு நோய் (Hysteria) பற்றி ஆராய்ச்சிகள் நடாத்தினார் புரொய்ட்.

புரொய்ட் தன்னிடம் வந்த உள நோயாளிகளிடம் போலி உறக்க முறையைக் கையாண்டு (Hypnosis) சிகிச்சை அளித்தார். இப்போலி உறக்க நிலையில் நோயாளிகள் தமது சாதாரண நிலையில் தங்கள் நினைவுக்கு வராத தங்கள் வாழ்க்கையின் முக்கியமான பல நிகழ்வுகளையும் உணர்வுகளையும் அவர்களால் நினைவுபடுத்திக் கொள்ள முடிந்தது. இந்தப் போலி உறக்கச் சிகிச்சை முறையை மோசடித்தன்மையானது என்று பலர் எதிர்த்த போதிலும் இந்தச் சிகிச்சை முறையை அளவு கடந்த ஆர்வத்துடன் புரொய்ட் பரீட்சித்துப் பார்த்தார்.

நோயாளிகள் தமது சிறு பராயத்து உணர்வுகள் பொதிந்த அனுபங்களை வெளிப்படையாகக் கதைத்து அந்த அனுபவங்களை மீண்டும் அனுபவிப்பதன் மூலம் இசிவு நோய்க்குரிய அறிகுறிகளை இல்லாமற் செய்யலாம் என்னும் புறூவரின் கண்டுபிடிப்பு புரொய்ட்டை ஆழ்ந்து சிந்திக்கத்தூண்டியது. இசிவு நோய்க்குரிய அறிகுறியிலிருந்து நோயாளியை விடுவிக்க போலி உறக்கம் எப்போதும் தேவையில்லை என்னும் உண்மையைப் புரொய்ட் படிப்படியாகக் கண்டுணர்ந்தார். புறூவருடன் சேர்ந்து நோயாளிகள் போலி உறக்கத்தின் உதவியின்றியே தமது சிறுபராய அனுபவங்களை வெளிப்படையாகக் கதைக்கும் சிகிச்சை முறையை புரொய்ட் பரீட்சித்துப்பார்த்தார். புரொய்ட் தனது நோயாளிகளின் கனவுகளையும் சிறுபராய நிகழ்வுகளையும் ஆராய்ந்த பின்னர் கனவுகளின் விளக்கம் (The Interpretation of Dreams) எனும் நூலை 1900ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

## நனவு, நனவிலி மனங்களின் செயற்பாடுகள்

உளவியல் நனவு மனதைப் பற்றிய (Conscious Mind) ஆய்வு செய்ய வேண்டும் என்பது புரொய்ட்டுக்கு முன்வந்த உளவியலாளரின் கருத்தாக இருந்தது. நனவு மனத்தின் செயற்பாடுகளான சிந்தனை கற்பனை, போன்றவற்றையே உளவியல் ஆராய வேண்டும் என்பது அன்றைய கருத்தாக அமைந்திருந்தது. இக்கருத்துக்கு மாறாக உளவியல் நனவிலி மனத்தினது (Unconscious Mind) செயற்பாடுகளையும் ஆராய வேண்டும் என்று 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் புரொய்ட் தெரிவித்த கருத்து அன்று முற்றிலும் புதியதொன்றாகவே இருந்தது.



பனிப்பாறையின் பெரும்பகுதி கடல் நீரினுள் அமிழ்ந்திருக்க அதன் ஒரு சிறு பகுதியே மேற்பரப்பில் எம்மால் அவதானிக்கப்படக் கூடியதாக உள்ளது. இதுபோன்று எமது மனத்தின் பெரும்பகுதி எம்மால் அறியப்படாது நனவிலி நிலையிலேயே உள்ளது என்பது புரொய்ட்டின் ஒரு முக்கிய கருத்தாகும்.

## ஆளுமை அமைப்புகள்

புரொய்ட்டின் உளப்பகுப்பாய்வுக் கொள்கையின் படி ஆளுமை, மூன்று அமைப்புக்களைக் கொண்டது. இவற்றில் முதலில் தோன்றுவது இட். (I.d) என்னும் ஆழுமை அமைப்பாகும். இதுவே முதன்முதலில் தோன்றும் ஆழுகை அமைப்பாகும். பிறப்பிலே குழந்தை உளவியல் ரீதியாக எவைஎவற்றையெல்லாம் தனது பெற்றோரிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறதோ அவையவற்றையெல்லாம் இது குறிக்கும். இட் முழுமையாகவே நனவிலி மனத்தைச் சார்ந்தது. வெளியுலகுடன் நேரடியான தொடர்பு இதற்குக் கிடையாது. ஆழுமையின் அடிப்படையான இக்காரணி உடற்செயற்பாடுகளுடன் நெருங்கிய தொடர்புள்ளது. முக்கியமாக இயல்பூக்கங்களுடன் அதிகமாகத் தொடர்பு பட்டதாகவே இட் இருக்கும் .இட் முக்கியமாக மனிதனின் பிரிக்க முடியாத ஆசைகளின் இருப்பிடமாக விளங்கும் அதேவேளையில் உளச்சக்தி இயக்கத்தின் ஊற்றாகவும் திகழ்கிறது. இட் எப்போதும் வேதனையைத் தவிர்த்து இன்பத்தை நாடுவதால் இது இன்பக் கொள்கை(Pleasure

Principipie) என அழைக்கப்படுகிறது. இட் இன் சக்தி இயல்பூக்கத்தைத் திருப்திசெய்யும் ஒரு பொருளின் மீதான ஒருசெயலில் ஈடுபடுத்தப் படலாம் அல்லது குறைவான திருப்தியைத் தரும் ஒரு பொருளின் சாயலில் செலுத்தப் படலாம். உதாரணமாகப்பசியோடு இருக்கும் குழந்தை உண வையோ அன்றேல் தாயின் மார்பையோ கற்பனை செய்யலாம். இச் செயற்பாடு முதன்மைச் செயற்பாடு என அழைக்கப் படுகிறது. நெருக்கடி நிலையைக் குறைக்கும் பொருளின் சாயலை உருவாக்கும் இட் இன் இந்தச் செயற்பாட்டை ஆசையைப் பூர்த்தி செய்தல் (Wish Fulfillment) என அழைக்கிறோம். எமது இரவுக்கனவுகள் இதற்கு ஒரு முக்கிய உதாரணமாகும். எமது கனவுகள், கற்பனைகள் சுயநல இன்பத்தை நாடும் எமது நடத்தைகளிலெல்லாம் இட் இன் செயற்பாட்டை நாம் காணலாம்.

அடுத்த ஆளுமை அமைப்பான ஈகோ (Ego) இட் இலிருந்து உருவாகி யதார்த்தத்தோடு மனிதனைத் தொடர்புகொள்ளச் செய்கிறது. உணவைப் பற்றிய விருப்பமோ அல்லது கற்பனையோ பசியைத் தனிக்காததன் காரணத்தால் தனது கற்பனையை உண்மையான உணவுடன் தொடர்புபடுத்தக் குழந்தை கற்றுக்கொள்ள வேண்டும். இந்தக் கற்பனையை யதார்த்தமாக மாற்ற வேண்டும். இட் இந்தப் பணியைச் செய்யாது ஈகோ தான் இதனைச் செய்யவேண்டும். குழந்தை வளர வளர தாய் மற்றும் பால் பற்றிய கற்பனை தாயின் அன்பு பற்றிய நினைவுகள் பசியைப் போக்குவதில்லை என்பதை குழந்தை கற்றுக்கொள்கிறது. சாயல்களுக்கும் யதார்த்தத்துக்கும் இடையில் தனக்கும் வெளியுலகுக்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு என்பதைக் குழந்தை புரிந்துகொள்கிறது.ஈகோ யதார்த்தக் கொள்கைக்கு அமைவாக நடப்பதால் இது யதார்த்தக்கொள்கை (Reality Principle) என அழைக்கப்படுகிறது. ஈகோ தற்காலிகமாக இன்பக்கொள்கையை நிறுத்தி வைக்கிறது, இந்த இன்பக்கொள்கை உடனடிச் செயற்பாட்டையே வேண்டிநிற்கும். ஈகோ யதார்த்த பூர்வமான சிந்தனையின் மூலம் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரு பொருளைக் காணும் வரை செயற்பாட்டை நிறுத்தி வைக்கிறது. இதனால் ஈகோவின் செயற் பாட்டைத் துணைச்செயற்பாடு (Secondary Process) என அழைக்கிறோம். ஈகோ ஒரு நிறுவனத்தின் மோலாளரைப் போன்றது. மிகச்சிக்கலான உயர்மட்ட முடிவுகளை எடுக்கும் கடப்பாடு இதற்கு உண்டு. ஆளுமையின் நிறைவேற்றாளர் எனக்கருதப்படும் ஈகோ எந்தத் தூண்டுதல்களுக்கு நாம் பதிலளிக்க வேண்டும். எந்த இயல்பூக்கங்கள் எங்கே எப்படி திருப்தி செய்யப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

மூன்றாவதாக உருவாகும் ஆளுமை அமைப்பு சுப்பர் ஈகோ (Super Ego) என அழைக்கப் படுகிறது. குழந்தை அறநெறிக்கோட்பாடுகளைக் கற்றுக்கொள்கின்ற போது தனது பெற்றோர் அங்கிகரிக்கும் நடத்தைகளை ஈகோ ஐடியலுக்கும் (Ego Ideal) பெற்றோர் அங்கீகரிக்காத நடத்தைகளை மனச்சாட்சிக்குள்ளும் (Conscience) அடக்குகின்றது. பெற்றோர் அங்கிகரிக்கும் நடத்தையைக் கைக்கொள்ளும் போது குழந்தை பெருமிதம் கொள்கிறது. அதே வேளையில் பெற்றோர் அங்கீகரிக்காத நடத்தையை எண்ணும் போது அல்லது அதில் ஈடுபடும்போது குற்ற உணர்வின் மூலம் சுப்பர் ஈகோ (Super Ego) குழந்தையைத் தண்டிக்கிறது. சுப்பர் ஈகோ (Super Ego) எப்போதும் பூரணத்துவத்தையே நாடும்.

**பாதுகாப்புக் கவசங்கள்**

இதுவரை நாம் பார்த்த விடயங்களில் இருந்து

ஆளுமையின் முக்கிய அமைப்பாக ஈகோ இருப்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. ஈகோ பலமாக இருக்கும் போது இட் இலிருந்தும் சுப்பர் ஈகோ (Super Ego) விலிருந்தும் எழுகின்ற நெருக்கடிகளையும் அதேவேளையில் வெளியுலகிலிருந்து எழுகின்ற நெருக்கடிகளையும் ஈகோ வெற்றிகரமாகக் கையாள்கின்றது, ஆனால் ஈகோ பலமின்றிப் போனால் இட், சுப்பர் ஈகோ மற்றும் வெளியுலக யதார்த்தம் என்பவற்றிலிருந்து எழுகின்ற நொருக்கடிகளை ஈகோவால் எதிர்கொள்ள முடியாது போய்விடும். இவ்வாறான அகக் காரணிகளிலிருந்தும் புறக்காரணிகளிலிருந்தும் எழுகின்ற அச்சுறுத்தல்களை ஈகோ எதிர்கொள்ள முடியாது போகின்ற சந்தர்ப்பங்களில் ஏற்படும் பதகளிப்பை தவிர்ப்பதற்காக ஈகோ உளப்பாதுகாப்புக் கவசங்களை (Ego Defence Mechanisms) கையாள்கின்றது. இப் பாதுகாப்புக்கவசங்கள் யதார்த்தத்தைத் திரிபு படுத்துவதன் மூலம் பதகளிப்பைக் கட்டுப்படுத்துகிறது.

பாதுகாப்புக் கவசங்களிலேயே முதன்மையானதும் முக்கியமானதுமாக அமுக்கிப்புதைத்தல் (Repression) என்ற பாதுகாப்புக்கவசம் விளங்குகின்றது. அமுங்கிப்புதைதல் என்ற உளப்பாதுகாப்புக் கவசத்தின் காரணமாக எமக்குப் பதகளிப்பை அல்லது அங்கலாய்ப்பை தோற்றுவிக்கும் நினைவுகள், சிந்தனைகள், உணர்வுகள் என்பனவற்றை நாம் நனவுலகிலிருந்து வெளியேற்றி விடுகின்றோம். அமுக்கிப் புதைத்தல் என்னும் பாதுகாப்புக் கவசத்தின் செயற்பாட்டின் காரணமாக எம்மைப் புண்படுத்தியவர்களின் பெயர்களையே நாம் மறந்துவிடுகின்றோம். நாம் அமுக்கிப்புதைக்கும் நினைவுகள் எமது கனவுகளில் வெளிப்படலாம், சிலவேளைகளில் நாம் எதிர்பாராத சொற்கள் அல்லது விடயங்கள் எம்மிலே இருந்து வெளிவரும் போது நாம் வாய்தடுமாறிக்கதைத்துவிட்டோம் எனச் சொல்லுகின்றோம். உண்மையில் நாம் அமுக்கிப் புதைத்த விடயங்கள் தாம் நாம் எதிர்பாராத வேளைகளில் வெளிவருகின்றது.

அமுக்கிப்புதைத்தல் என்ற இப்பாதுகாப்புக் கவசம் ஓரளவுக்கு அவசியானது. இது ஓர் எல்லையை மீறினால் எமது ஆளுமைக்கே ஆபத்து விளைவிக்கக் கூடியது. புரொய்ட்டைப் பொறுத்தவரையில் எமது ஆளுமை ஆரோக்கியமாக விருத்தியடைவதற்கு எம்மிலே அமுக்கிப் புதைக்கப்பட்டு நனவிலி மனத்துள் மறைந்து போயுள்ள உணர்வுகள் நனவுலகத்துள் கொண்டுவரப்படவேண்டும். உளப்பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்ட சிகிச்சை முறையும் இச்செயற்பாட்டையே ஊக்குவிக்கின்றது.

**உணர்வுகள் வெளிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம்**

அன்றாடம் நாம் பல நிகழ்வுகளைச் சந்திக்கின்றோம், இந்நிகழ்வுகளின் காரணமாகப் பல்வேறு உணர்வுகள் எம் உள்ளத்தில் ஊற்றெடுக்கின்றன. எமக்குப் பிடிக்காத உணர்வுகளை நாம் எமது உள்ளத்தில் அமுக்கிப்புதைத்து விடுகிறோம். அமுக்கிப்புதைக்கப்பட்டாலும் இவ்வுணர்வுகள் எம்முள்ளத்தில் உயிரோடு தான் இருக்கின்றன. இவ்வுணர்வுகளை நாம் வெளிப்படுத்தாவிட்டால் இவ்வுணர்வுகள் எம்மை ஆழமாகப் பாதிக்கக்கூடும். சில வேளைகளில் அமுக்கிப்புதைக்கப்பட்ட இவ்வுணர்வுகள் உடல்நோயாகவும் வெளிப்படக்கூடும். அதுமட்டுமன்றி தொடர்ந்து எமது உணர்வுகளை அமுக்கிப்புதைப்போமானால் அது எமது ஆளுமையின் தனித்துவமான தன்மைகளை அதிகமாகப் பாதிக்கும் எமக்குப் பிடிக்காத

உணர்வுகளுடன் எமது ஆளுமையின் பல நல்ல விடயங்களும் அமுக்கிப்புதைக்கப்படலாம்.

எனவே ஆரோக்கியமாக வாழ்வதற்கும் எமது ஆளுமையை விருத்தி செய்வதற்கும் எம்மைப் பாதிக்கும் உணர்வுகளை நாம் ஆரோக்கியமாகக் கையாள்வது அவசியம். எம்மைப் பாதிக்கும் உணர்வுகள் பற்றி நாம் மற்றவருடன் கதைப்பது எமக்கு நல்ல பயனைத் தரக்கூடியது. இதற்கு நம்பிக்கை நிறைந்த நல்ல நண்பர்கள் எமக்குத்தேவை, எனவே உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வோம். உறுதியோடு வாழ்வோம்,



**ச. எட்மன்ட் றெஜினோல்ட் அ.ம.தி**
அன்னை இல்லம்
உளவளத்துணை,
உளவியல் அறிவூட்டும் நிறுவனம்
570 இம்மாஸ் நகர், அக்கராயன் குளம், கிளிநொச்சி.

# அழியாது நிலைக்கும் பணி.

எப்போதும் நிரம்பிவழியும் நோயாளர் கூட்டம். போதாத கட்டிடங்கள். பொல்லாத வெய்யில் மின்சாரம் இல்லை. ஒழுங்கான எல்லோருக்கும் போதுமான படுக்கைகளில்லை. போதிய மருந்துகள் இல்லை. தேவையான அளவுக்கு மருத்துவர்களும் இல்லை. எப்போதும் நெருக்கடி எவருக்கும் ஓய்வில்லை. நேரமோ காலமோ ஓய்வோ இல்லாமல் இயங்கிக்கொண்டேயிருக்கும் மருத்துவர்களும் பணியாளரும்.

யுத்தகால வைத்திய சாலையொன்று எப்படி இருக்குமோ எப்படி இயங்குமோ அப்படி ஆனால் இன்னும் சிறப்பாக இயங்குகிறது. அக்கராயனில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை.

இடம்பெயர்ந்த வைத்தியசாலை அகதியாகிய மருத்துவர்களும் பணியாளர்களும் மக்களும் பின்னடைந்த வன்னிக்கிராமங்கள் அதுவும் திக்கொன்றாக தொலைவிலும் துரத்திலுமாக இருக்கும் கிராமங்கள். வளங்கள் குறைந்த வைத்தியசாலை வளவு நிரம்ப நோயாளர் கூட்டம். யாரல்தான் என்ன செய்ய முடியும்? வரும் நோயாளர்களில் பாதிப்பேருக்கு மேல் போசாக்கற்றவர்கள். சிறு வியாதியைக்கூட தாங்க முடியாத நிலையிலுள்ளோர். திரும்பத் திரும்ப நோய்தாக்க திரும்பத்திரும்ப வருவோர். ஏல்லோருக்கும் ஆதரவாக சோராமல் சலியாமல் சிகிச்சையளிக்கின்றனர் மருத்துவர்கள். மனந்தடவி ஆறுதல் தந்து பராமரிக்கின்றனர் பணியாளர்கள். மருந்தில்லை வசதியிலலை வளங்களில்லை பார்க்க ஆட்களில்லை என்றெல்லாம் சொல்லாமல் தங்களை முழுமையாக ஒப்படைத்து ஓய்வின்றிப்பணி செய்கின்றனர் எல்லோரும். இது ஒரு வியப்பூட்டும் உண்மை. யாரேனும் வந்து பாருங்கள். எல்லோரும் அறியுங்கள். இங்கே வரும் நோயாளரில் பலருக்கு இங்குள்ள மருத்துவர்களும் பணியாளர்களும் தங்கள் குருதியைத் தந்தே சிகிச்சை செய்கிறார்கள். ஏனெனில் நிலைமை அவ்வாறிருக்கின்றது. துார இடங்களிலிருந்து வரும் நோயாளர்களுக்கு வேறு உதவியோ ஆதரவோ இல்லாதபோது விடுதியில் தங்கி சிகிச்சை பெற முடிந்தளவுக்கு உதவுகிறார்கள். கண்பார்வை குறைந்தோரிற்கான மேலதிகச் சிகிச்சைக்கு *'கண்ணொளி'* என ஒரு வழி திறந்து ஏழைமனிதர் பயன்பெற உதவும் திட்டமுள்ளது. இப்படி இப்படி பல ஆதரவுப்பணிகளை விரித்து இயங்குகின்றது இந்த வைத்தியசாலை. அயற்புறங்களில் வேறு மருத்துவமனைகளோ தனியார் வைத்திய சாலைகளோ இல்லை. ஓரே ஆதாரமையமாக இயங்கும் இந்த வைத்தியசாலையின் இத்தகைய கருணைப்பணியின் பின்புலம் தானென்ன? அன்பு கருணை நேயம் இரக்கம் மனிதாபிமானம் எல்லாம் இணைந்த ஒரு கலவையான உன்னத மனப்பாங்குதான் இதன் அடிப்படை. இந்த நல்ல மனப்பாங்கை வளர்ப்பதில் ஒரு முன்னோடியாக அல்லது முன்னோடிகளாக மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி Dr.S. விக்னேஸ்வரனும் அவருடன் இணைந்த மருத்துவர்களும் செயற்பட்டு வருகின்றனர். எல்லாவற்றுக்குமான முன்னுதாரணமாக எல்லோருக்குமான வழிகாட்டிகளாகவும் இவர்கள் செயற்படுகிறார்கள். இந்த வைத்தியசாலைக்கு சில மாதங்களின் முன்பு பல எலும்புக்கூடுகள் கொண்டுவரப்பட்டன. கிளிநொச்சியில் படையினரால் கொல்லப்பட்டவர்களின் அல்லது காணாமற்போனோரின் எலும்புக்கூடுகள் அவை. நகரம் மீட்கப்பட்டபின் ஆங்காங்கே கண்டெடுக்கப்படும் எலும்புக்கூடுகளை அடையாளம் காண்பதற்காக இங்கே கொண்டு வரப்படும்போது.

அடையாளம் காண்பதற்கு உதவும் பணியிலும் இந்த வைத்தியசாலை பங்களித்திருக்கிறது. எந்த வசதிகளையும் எதிர்பாராமல் தமது எதிர்காலத்துக்கான வாய்ப்புக்களை மட்டும் மனதில் கொள்ளாமல் மேற்படிப்பையே ஒத்திப்போட்டுவிட்டு மிகச்சாதாரணர்களாகஇருந்து இப்பெரும் பணிகளை நெருக்கடிச் சூழ்நிலையில் செய்து வரும் இவர்களனைவரினதும் பங்களிப்பை நம் காலமும் நமது வாழ்வும் கவனப்படுத்துகிறது.

மனிதர் வருவார் போவார்
வசதிகளும் வளமும் வரும் போகும்
ஆனால் எல்லோருக்கும் எப்போதும் அளிக்கும்
அன்பும் ஆதரவும் ஆறுதலும் போகாது.
*அது அழியாது நிலைக்கும.*

*கருணாகரன்.*
**4ம் வட்டாரம்**
**புதுக்குடியிருப்பு.**

□□

## கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச் சபையின் பணிகள்.

* வைத்தியசாலையினுடைய வளங்களைப் பேணும் வகையில் அவசர புனரமைப்புப் பணிகளைச் செய்தல், புதிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்

* அவசர மின் வழங்கல், நீர்வழங்கல், உபகரணங்களின் பழுதுகள் என்பவற்றை உடன் சீர்செய்தல்

* வைத்தியசாலையின் உடமைகளைப் பாதுகாத்தலும் மேம்படுத்துதலும்.

* ஊழியர்களின் நெருக்கடிகளுக்கு உதவுதல்




* வறிய நோயாளர்கட்கான போக்குவரத்துக் கொடுப்பனவு, உணவுப் பொருட்கள், உனவல்லாப் பொருட்கள் வழங்குதல்.

* கண்பார்வை இழந்த நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை ஒழுங்கு செய்தலும் கண்ணாடிகள் வழங்கலும்.

* வைத்தியர்கள், ஊழியர்களுக்கான இருப்பிட வசதிகள் மற்றும் ஊக்குவிப்புகளை வழங்குதல்.

* ஊழியர்கள், நோயாளர்கள், பொதுமக்களுக்கான சுகாதார கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல்.

* இறந்தவர்களின் சடலங்களை பழுதாகாமல் பாதுகாப்புச் செய்துவழங்குதல்.

* வைத்தியசாலைத் தொண்டர்களுக்கான பயிற்சிகளை வழங்குதலும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்குதலுமாகும்.

**இச்சேவைகளுக்கான அன்பளிப்புகளை நலன்விரும்பிகளிடமிருந்து சபை எதிர்பார்க்கிறது.**

யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு:-**

தலைவர்/செயலாளர்
கிளி/மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்திச்சபை
மாவட்டவைத்தியசாலை கிளிநொச்சி.
வங்கி நடைமுறைக்கணக்கு இலக்கம்:- 2745, மக்கள் வங்கி, கிளிநொச்சி.

□□

கிளிநொச்சி மாவட்ட
சமூக சுகாதார அபிவிருத்திச்சபையின்
5ம் ஆண்டு நிறைவில் வாழ்த்துகிறோம்

## நிமலன் வீடியோ புகைப்படக் கலையகம்

உள்ளக, வெளிக்களப்படப்பிடிப்பு
கலர்ப்பட பிரதியாக்கல்
கறுப்பு, வெள்ளைப்பட பிரதியாக்கல், பெரிதாக்கல்
நிழற்படபிரதியாக்கல் (போட்டோஸ்ரட்)
உறையிடல் (லெமனேற்றிங்)
இலத்திரனியல் பொருட்கள் விற்பனை
இறப்பர் முத்திரை
படச்சுருள் சீராக்கல் (டெவலப்பிங்)
வீடியோ, படப்பிடிப்பு, மிக்சிங்
கதிரை வாடகை சேவை
மணவறை, பந்தல் சேவைகளுடன்.....
அழகுசாதனப் பொருட்கள் வாங்கவும்
நீங்கள் நாட வேண்டிய இடம்

**நிமலன் வீடியோ புகைப்படக் கலையகம்**
யாழ்சாலை கிளிநொச்சி, பிரதானசாலை கந்தபுரம்
முல்லைச்சாலை புதுக்குடியிருப்பு, மல்லாவி
துணுக்காய்சாலை